பேராசிரியர்
அப்துல் ஹமீத் அஹ்மத் அபூ ஸுலைமான்

# இரு வகை சட்டங்களுக்கிடையில் மனிதன்

(நம்மையும் பிறரையும் புரிந்து கொள்வதற்கான அல்-குர்ஆனிய அணுகுமுறை)

# இருவகை சட்டங்களுக்கிடையில் மனிதன்

## (நம்மையும் பிறரையும் புரிந்து கொள்வதற்கான அல்-குர்ஆனிய அணுகுமுறை)

பேராசிரியர்
அப்துல் ஹமீத் அஹ்மத் அபூ ஸுலைமான்

தமிழாக்கம்:
அஷ்ஷெய்க் பீ. எம். எம். இர்பான்

Iru Vahai Sattangalukkidayil Manithan

Tamil edition of

# Man Between the Two Laws

A Qur'anic Perspective in Understanding Self and Understanding the Other

By:
Dr. 'Abdul-Hamid Ahmad Abu Sulayman

Translated by
Ash-Sheikh PMM Irfan (Naleemi)

ISBN 978-955-8398-17-3

Published by
Fuzin Texts
23/3 Market Road, Dharga Town – 12090, Sri-Lanka
Printed at AJ Prints, Dehiwala
© Abd-al-Jabbar Muhammad Zaneer (2010)

# முன்னுரை

தெளிவான இஸ்லாமியப் பார்வையே முஸ்லிம் உம்மா சரியான திசையில் பயணிப்பதற்கான அத்திவாரம் எனலாம். அல்குர்ஆனே இந்தப் பார்வையைப் பெற்றுக் கொள்வதற்கான அடிப்படை ஆதாரமாக அமைகிறது. அதுவல்லாத வேறெந்த வகையிலும் முஸ்லிம் உம்மா தன் இயல்பையும் உண்மையான குறிக்கோளையும் அறிய முடியாது. இவ்வாறு தன்னைப் பற்றிய புரிதலும் தெளிவான பார்வையும் இன்றி அது பயணப்படவோ தன் ஆற்றல்களை ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடுத்தவோ அவற்றை மீண்டும் கட்டியெழுப்பவோ இயலாது.

இஸ்லாமியக் கண்ணோட்டம் பற்றிய தெளிவும், அடிப்படை அம்சங்கள் பற்றிய அறிவுமே நம்மையும் பிறரையும் புரிந்து கொள்வதற்கான அடிப்படையாகும். பிறருடன் வினைத்திறன் மிக்க வகையில் தொடர்பாடும் வழிமுறைகளை அறிவதற்கான அடிப்படை யாகவும் அது உள்ளது.

இப்பார்வைத் தெளிவும், தன்னைப் பற்றிய புரிதலும் இல்லாதிருந் ததன் காரணமாக முஸ்லிம் உம்மா பல துன்பங்களை அனுபவித்து விட்டது. மயக்கம், தடுமாற்றம், மற்றவர்களை கண்மூடிப் பின்பற்றுதல் முதலிய நிலைகளுக்கு முஸ்லிம் உம்மாவை இவ்வறியாமை இட்டுச் சென்றதுடன், அதன் ஆற்றல், உறுதி என்பவற்றிலும் தளர்வை ஏற்படுத்தியது.

அல்-குர்ஆனின் பிரபஞ்சப் பார்வை வழியாக உலகப் படைப்புகள் பற்றி நான் ஆழ்ந்து சிந்தித்தேன். அப்போது பிரபஞ்சம், மனிதன் மற்றும் இவ்விரண்டுக்கும் இடையிலான தொடர்புகள் பற்றியும், இவற்றோடு

ஒப்பிடும்போது இஸ்லாமும் அதன் உம்மாவும் வகிக்கும் இடம் பற்றியும் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு தெளிவாகவும் உயர்வாகவும் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. அதேபோல் மாற்று சமூகமான மேற்கையும், அதன் இயல்பையும் போக்கையும், அதனோடு உடன்படக்கூடிய இடங்களையும், முரண்படும் இடங்களையும் புரிந்து கொள்வதற்கும் இந்த அல்-குர்ஆனிய அணுகுமுறை எனக்கு ஆற்றலைத் தந்தது. இதன்மூலம், ஏற்கனவே புரிந்துகொள்ள முடியாமலும், கையாளும் வழிமுறைகள் தெளிவற்றும் இருந்த பல புதிர்களை அவிழ்ப்பதற்கு வழி பிறந்தது.

எனது இந்த அவதானங்களைப் பதிவுசெய்து, கண்ணியமான வாசகர் களுக்கும் சிந்தனையாளர்களுக்கும் முன்னால் வைப்பதற்காகவே எழுது கோலைக் கையிலேந்தியுள்ளேன். கேந்திரீய முக்கியத்துவம் வாய்ந்த இத்துறையில் அல்-குர்ஆனின் பிரபஞ்சப் பார்வையை அவர்கள் இன்னும் கூர்ந்து அவதானிக்கவும் விளங்கிக் கொள்ளவும் முயல வேண்டும். அப்போதுதான் முஸ்லிம் உம்மா சரியான பாதைக்கு மீள்வதும், இஸ்லாமியக் கலாசாரத்தைத் தூய்மைப்படுத்துவதும், அதன் நாகரிக மற்றும் சீர்திருத்த சக்திகளை வெடித்து வெளிவரச் செய்வதும், நவீன யுகத்தின் சவால்களை அது எதிர்கொள்வதும் சாத்தியமாக முடியும். சத்தியம், நீதி, சமாதானம் என்ற ஒளியை நோக்கிய மனித இனத்தின் பயணத்தை சக்தியோடும் வலிமையோடும் செவ்வைப் படுத்துவதற்கும் இதன் மூலமே வழியும் பிறக்கும்.

தெளிவான பார்வை, தன்னைப் பற்றிய புரிதல், கலாசாரத் தூய்மை, கண்மூடிப் பின்பற்றாமை என்பவை இன்றி புனர்நிர்மாணமோ, வலுப் பெறுகையோ, சீர்திருத்தமோ, நாகரிகத் தலைமை ஆசனத்தில் உம்மா தனது இடத்தை மீளப்பெறுவதோ சாத்தியமில்லை. சமுதாய அங்கத்தவர் களது நெறி பிறழ்வு, பிற்போக்கு என்பவற்றுக்குக் காரணமான உள நோய்களுக்கு சிகிச்சையளிக்காமலும், மேற்கத்தியரையும் அவர்களுடன் வினைத்திறனோடு உறவாடும் வழிமுறைகளையும் விளங்கிக் கொள்ளா மலும் கூட இவை சாத்தியப்படப் போவதில்லை.

அல்-குர்ஆனின் பிரபஞ்சப் பார்வையைப் புரிந்துகொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட இம்முயற்சி, சிந்தனையாளர்களது அவதானத்தை யும் கவனயீர்ப்பையும் பெறுவதுடன், அவர்களது சீர்திருத்தச் சிந்தனை

*முயற்சிகளிலும் உள்வாங்கப்படும் என்று நம்புகிறேன். அதன்மூலம், உம்மா தனது ஆரோக்கியத்தை மீளப் பெறுவதோடு, தனது தூதையும் அமானிதத்தையும் சுமந்து, மனிதனுக்கும் நாகரிகத்துக்கும் மீண்டும் வழிகாட்டுவதாக மாற முடியும்.*

*அல்லாஹ்வே உதவியும் நேர்வழியும் தருபவன்!*

பேராசிரியர் அப்துல் ஹமீத் அ பூ ஸுலைமான்
ஹி.1423-7-27 ஷ கி.பி.2003-9-5

# இருவகை சட்டங்களுக்கிடையில் மனிதன்

## *பீடிகை:*

***சீரிய தத்துவம் என்பது உறுதியான நம்பிக்கையாகும்***

*மனிதன் பகுத்தறிவு வழங்கப்பட்டவனாகவே உலகில் பிறக்கிறான். அந்தப் பகுத்தறிவு மூலமாகவே ஏனைய படைப்புகளிலிருந்து அல்லாஹ் அவனை வேறுபடுத்தியும் உள்ளான். இந்த வேறுபாட்டையே அல்லாஹ் கீழ்வரும் மறை வசனத்தில் சுட்டிக்காட்டுகிறான்:*

மேலும், அவன் ஆதமுக்கு பெயர்கள் அனைத்தையும் கற்றுக் கொடுத்தான். *(அல்-பகறா: 31)*

*இங்கு நாடப்படும் பொருள், ஆதமுக்கு பொருட்களின் பெயர்களது உச்சரிப்பு கற்றுக்கொடுக்கப்பட்டது என்பதல்ல என்பதே எனது அபிப்பிராயமாகும். ஏனெனில், மனிதனை அல்லாஹ் படைத்திருக்கும் அமைப்பும், அவனது ஆற்றலும் இதனைக் காட்டாது. அதுமட்டுமன்றி அவ்வாறு நாம் விளங்கிக் கொள்வதாயின், ஆதம் நபி கண்டிராத, மறுமை நாள்வரை தோன்றவிருக்கின்ற அனைத்துப் பொருட்களினதும் பெயர்களை எல்லா மொழிகளிலும் அல்லாஹ் அவருக்கு ஆரம்பத்தி லேயே கற்றுக்கொடுத்து விட்டான் என்ற பொருளையே அது தரும். ஆனால், அவ்வாறு இடம்பெற்றமைக்கான எந்தத் தடயமும் மனித வரலாற்றில் கிடைக்கவில்லை. மனித இயல்புகளிலும் ஆற்றல்களிலும் கூட புலவயப்பட்ட எந்த ஆதாரமும் இதற்கு இல்லை.*

*ஒரு பொருளின் இயல்பு, யதார்த்தம், தொழிற்பாடு முதலியவற்றை ஏதோவொரு வகையில் புரிந்து கொள்ளக்கூடிய அறிவு கிட்டாமல் அதன்*

வெறும் பெயரைத் தெரிந்து கொள்வதில் மாத்திரம் எந்தப் பொருளோ பெறுமானமோ கிடையாது. இந்த உண்மையைப் புரிந்துகொள்வோமாயின், மேற்குறித்த வசனத்திற்கு வேறொரு பொருளையே நாம் இங்கு கொள்ள வேண்டியிருக்கும். அந்த வகையில், ஒன்றை அறிவதற்கும், சொற்களில் அடங்கியிருக்கும் பொதுப் பண்புகளை வேறுபடுத்தி விளங்கிக்கொள்வதற்கும், அவற்றை அடிப்படைப் பிரிவுகளாகவும் இனங்களாகவும் வகைப்படுத் துவதற்குமான மனித ஆற்றலையே இவ்வசனம் குறிக்க முடியும்.

படைத்துச் சீர்படுத்தப்பட்டு, ரூஹ் ஊதப் பட்ட ஆதமின் படைப்பில் இது தெளிவாக அவதானிக்கப்படக் கூடிய அம்சமே. உதாரணமாக ஆசனங்களை அல்லது மிருகங்களை எடுத்துக் கொண்டால், அவற்றின் தோற்றங்களும் நிறங்களும் உருவமைப்புகளும் பல்வேறு வகைப்பட்டவை. எனினும் மொத்தத்தில் அவையனைத்தும் சில ஒத்த தன்மைகளுக்குள் அடங்கக் கூடியவை குறிப்பிட்ட சில சொற்களால் ஒன்றிணைக்கப்படக்கூடியவை இனங்களாகவும் வகைகளாகவும் வகைப்படுத்தப்படக் கூடியவை.

அந்த வகையில் ஆசனங்கள் அலுவலக ஆசனம், வரவேற்பறை ஆசனம், வாகனத்தின் ஆசனம் என்றும், பெரிய ஆசனம், சிறிய ஆசனம் என்றும், பலகையால் செய்யப்பட்ட ஆசனம், இரும்பு ஆசனம், பிளாஸ்டிக் ஆசனம் என்றும் பல வகைகளாகவும் நிறங்களாகவும் பருமன்களாகவும் காணப்படுகின்றன. எனினும், அமர்வதற்கும் ஓய்வெடுப்பதற்குமான சாதனங்களாக உள்ளதனாலேயே இவையனைத்தும் ஆசனம் என்ற பொதுப் பெயருக்குக் கீழ் அடக்கப்படுகின்றன.

புரிந்துகொள்வதற்கும் வேறு பிரித்து விளங்கிக்கொள்வதற்கும் மனிதனிடமுள்ள ஆற்றலே அவனது அறிவாற்றலுக்கான அடிப்படையாகும். சிந்தனைகளையும் கண்டுபிடிப்புக்களையும் அவற்றின் பெயர்களுக்கான குறியீடுகளை பல்வேறு மொழிகளில் உருவாக்கிக் கொள்வதற்குமான அடிப்படையாகவும் அதுவே உள்ளது. எனது அபிப்பிராயத்தில், மனிதனது அறிவும், ஆற்றலும், குறியீடுகளை உருவாக்கி அவற்றைப் பொருட்களின் பெயர்களாக இட்டுப் பயன்படுத்துவதற்கான மொழியாற்றலுமே அவனது நாகரிக உருவாக்க ஆற்றலுக்கு அடிப்படையாகிறது. குறியீடுகளை உருவாக்கவும் பயன்படுத்தவுமான ஆற்றல்

மனிதனிடம் இல்லாதிருக்குமானால் எழுதவோ, அறிவியற் கலைகளை வளர்த்தெடுக்கவோ, பூமியில் ஃகிலாபத் பணியை மேற்கொள்ளவோ அவனால் முடியாது போயிருக்கும். பெயர்களைக் கற்றுக்கொடுத்தல் என அல்-குர்ஆன் குறிப்பிடுவதும், அதன் மூலம் மனிதனை ஏனைய படைப்புகளை விட்டும் அல்லாஹ் வேறுபடுத்தியிருப்பதாகக் கூறுவதும் இதனைத்தான்.

சிந்தித்தல், உற்றுக் கவனித்தல், ஆராய்தல், சிந்தனைகளை உருவாக்கு தல், நாகரிக வளர்ச்சிக்கான கண்டுபிடிப்புகளை நிகழ்த்துதல், செயல் திறன், வாழ்வின் பொருளை விளங்கி அதன் பொறுப்புகளைச் சுமப்ப தற்கு தனக்கு உதவக்கூடிய வழிகாட்டல் ஒன்றைத் தேர்ந்தெடுத்தல் முதலிய அனைத்துமே மனிதனுக்கு அல்லாஹ் வழங்கிய பகுத்தறிவு மற்றும் புரிந்து கொள்ளும் ஆற்றல் என்பவற்றின் அத்தியாவசிய வெளிப்பாடுகளே.

இத்தகைய மனிதப் பகுத்தறிவு தன்னைப் பற்றிய சில கேள்விகளை எழுப்புவது தவிர்க்க முடியாததாகும். ''எனது இயல்பு என்ன? எனது உலகத்தின்-பிரபஞ்சத்தின் பொருள் அல்லது நோக்கம் என்ன? இந்தப் பிரபஞ்சத்தின் மூலாதாரம் என்ன? அதிலுள்ள சொற்களின் பொருள் என்ன? அவற்றுக்கிடையிலான தொடர்புகளும் ஏற்றத் தாழ்வுகளும் என்ன? எனதும் எனது உலகத்தினதும் முடிவு என்ன?... என்பனவே அக்கேள்விகள். பகுத்தறிவு என்ற இப்பகுதியே மனிதனில் அடங்கி யிருக்கும் ஆன்மீக உணர்வுக்கான அடிப்படையாகவும் உள்ளது. அவனது வாழ்வினதும் அபிலாஷைகளினதும் அடிப்படைக் கூறாகத் திகழும் மத சிந்தனைக்கான தோற்றுவாயாகவும் இதுவே உள்ளது. இதிலிருந்தே மேற்குறித்த கேள்விகளும் பிறக்கின்றன.

மத -தத்துவார்த்த- மனச்சாட்சி சார்ந்த ஆய்வும் இதிலிருந்துதான் பிறக்கிறது. அந்தவகை யில், ஒவ்வொரு தனி மனிதனோடும் ஏதோ ஒரு வடிவத்தில் தொடர்பு பட்ட பிரச்சினை யாக இது உள்ளதெனலாம். இந்த விடயமே -வரலாறு முழுவதும்- பல்வேறு சிந்தனையாளர்களதும் மெய்யியலாளர்களதும் கவனத்தைப் பல்வேறு கோணங்களில் ஈர்த்த சர்ச்சையாகவும் இருந்து வந்திருக்கிறது மறுமை வரை இருக்கவும் போகிறது. பல்வேறு மதங்களும் தத்துவங் களும் நம்பிக்கைக் கோட்பாடுகளும் பேசிய அம்சமும் இதுவே. நபிமார்களும் தூதர்களும் அனுப்பப்பட்டதும் இதற்காகவே.

பகுத்தறிவும் தர்க்கமும் வரையறுக்கப்பட்ட நிலையில் இருக்கும் மனிதனால், எல்லைக்கும் வரையறைக்கும் அப்பாற்பட்ட அம்சங் களைப் புரிந்துகொள்ள முடியாது என்பது அன்றும் இன்றும் தெளிவாக அறியப்பட்ட உண்மையாகும். எனவேதான், அவனது வாழ்வின் இருண்ட பகுதிகளுக்கு ஒளியூட்டி, அதன் இலக்குகளை நோக்கி அவனை நெறிப்படுத்தி, நிம்மதியையும் பாதுகாப்பையும் அவனுக்குள் ஏற்படுத்தி, பிரபஞ்சத்தின் பொருளையும் இலக்கையும் முடிவையும், அதனோடு உறவாடி வெற்றி பெறும் வழியையும் விளக்கிக் காட்டக்கூடிய சில வழிகாட்டல்கள் அவனுக்குத் தேவைப்பட்டன. அந்த வகையிலேயே நேர்வழியின் மூலாதாரமாகவும், மனிதனுக்கு பாதுகாப்பையும் நிம்மதி யையும் தரும் ஊற்றாகவும் மதங்களும் தூதுகளும் நம்பிக்கைக் கோட் பாடுகளும் தோற்றுவிக்கப்பட்டன.

மனிதர்கள் பரம்பரையாகப் பெற்று விசுவாசம் கொண்டு வருகின்ற பல்வேறு மதங்களும் நம்பிக்கைக் கோட்பாடுகளும் காணப்பட்ட போதிலும், மனிதனது பகுத்தறிவும் அறிவுத்தேடலும் பல்வேறு கேள்வி களை எழுப்புவதும், அவதானிப்பதும், ஒவ்வொன்றையும் பற்றி அறிவார்ந்த அணுகுமுறையில் விளங்கிக்கொள்ள முயல்வதும் தவிர்க்க முடியாததாகும். அந்த வகையிலேயே, மனிதப் பகுத்தறிவு தனது உள்ளார்ந்த இயல்பான விசுவாசத்துடன் இணைந்து நின்று பிரபஞ்சத்தின் அடிப்படை, அதன் பொருள், நோக்கம், முடிவு என்பவை பற்றிய கேள்வி களுக்கான விடைகளைத் தேடியது. பகுத்தறிவினதும் தர்க்கத்தினதும் எல்லையில் மெய்யியலாளர்கள் கவனம் செலுத்திய கேள்விகளாக அவை அமைந்திருந்தன.

இக்கருத்தின்படி, தத்துவம் அல்லது மெய்யியல் என்பது தர்க்க அறிவையும், புலவயப்பட்ட அறிவையும், அறிவுத்தேடலையுமே குறித்து நிற்கிறது. அந்தவகையில், மனிதனும் சிந்தனையாளனும் மெய்யியலாள னும் இப்பிரச்சினையின் இயல்பை உணர்ந்து, தமது தர்க்கமும் புலனறி வும் வரையறுக்கப்பட்டவை என்பதை ஆழ்ந்து நம்புவார்களாயின், அவர்களது ஆய்வும் சிந்தனையும் சாத்தியமான அறிவு என்ற ஒளியை நோக்கி அவர்களை இட்டுச் செல்லும் சாதனமாகவும், மேலதிக அமைதி யையும் விசுவாசத்தையும் நோக்கி அழைத்துச் செல்லும் கருவியாகவும் மாறிவிடும். அப்போது பகுத்தறிவானது ஈமானிய அறிவோடும் உள்ளார்ந்த திருப்தியோடும் முரண்படும் நிலையும் இல்லாது போய்விடும்.

## அறிவுக்கு தெளிவு தேவை

*மலக்குகளில் காணப்பட்ட நேரிய அறிவு விசுவாசத்தையும் திருப்தி யையும் அவர்களிடம் ஏற்படுத்தி இருந்தது. அல்லாஹ் மனிதனை சீரமைத்து, ஆன்மா, அறிவு, பகுத்தறிவு என்பவற்றை அவனது கட்ட மைப்பில் இணைப்பதற்கு முன், அவனது மிருக இயல்பை மாத்திரமே அம்மலக்குகள் அறிந்திருந்தனர். எனவேதான் அத்தகைய மனிதனது ஆற்றல்கள் பற்றியும், குழப்பம் விளைவித்தல், அநியாயம் புரிதல், அத்துமீறுதல் முதலிய மிருகப்பண்புகள் குறித்தும் பல்வேறு ஐயங்களை அவர்கள் எழுப்பினர். அப்போது, படைப்பாளனும் எல்லையற்ற அறிவுக்கும் சக்திக்கும் சொந்தக்காரனுமான அல்லாஹ் அளித்த பதில் அவர்கள் திருப்தியடைவதற்கும், அவர்களது ஈமான் மேலும் பலமடை வதற்கும் காரணமாய் அமைந்தது. அல்லாஹ் இதனை பின்வருமாறு விளக்குகிறான்:*

> உமதிரட்சகன் மலக்குகளை நோக்கி, பூமியில் நான் ஒரு பிரதிநிதியை ஏற்படுத்தப் போகிறேன் என்று கூறியபோது அவர்கள் கூறினார்கள்: அதில் குழப்பம் விளைவித்து, இரத்தம் ஓடச்செய்பவனையா நீ ஏற்படுத்தப் போகிறாய்? நாமோ (சதாவும்) உனது புகழைத் துதி செய்து, உன்னைத் தூய்மைப் படுத்திக்கொண்டிருக்கிறோம். அதற்கு அல்லாஹ், நீங்கள் அறியாதவற்றை நிச்சயமாக நான் அறிகிறேன்! என்று கூறினான். (பின்னர்) ஆதமுக்கு அனைத்துப் பெயர்களையும் அவன் கற்றுக் கொடுத்து விட்டு அவற்றை மலக்குகளிடமும் எடுத்துக் காண்பித்தான். உங்கள் வாதம் உண்மையாயின், இவற்றின் பெயர்களை எனக்குக் கூறுங்கள்! என்றும் கூறினான். அப்போது அவர்கள், நீ தூய்மையான வன். நீ எமக்குக் கற்றுத்தந்ததைத் தவிர வேறெந்த அறிவும் எம்மிட மில்லை. நிச்சயமாக நீயே யாவுமறிந்தவனாகவும், ஞானம் மிக்க வனாகவும் இருக்கிறாய்! என்று கூறினர். (அல்-பகறா :30-32)

*ஆனால் குறையறிவால் மதிமயங்கி, தனது அறிவும் தர்க்கமும் வரையறுக்கப்பட்டிருப்பதையும், மனிதனது மிருக இயல்புக்கு அப்பால் அல்லாஹ் அவனுக்குள் மற்றொரு அம்சத்தைக் கலந்துவிட்டிருப்பதை யும் உணர முடியாமல் குருடாகிப்போன இப்லீஸின் நிலையோ இன்றுள்ள நாஸ்திக அறிஞர்களது அறியாமையை ஒத்திருந்தது. ஏனெ னில் இந்த நாஸ்திகர்கள் தமது குறையறிவின் மூலமாக உண்மையைக் கண்டுபிடித்து விட்டதாகவும், அனைத்து காரண-காரியத் தொடர்புகளை*

*யும் முழுமையாகப் புரிந்து கொண்டுவிட்டதாகவும் பெருமையடிக்கி றார்கள். இது அவர்களது வழிகேட்டுக்கும் நிராகரிப்புக்கும் பெருமைக் கும் காரணமாகியது. இதே எண்ணம்தான் முன்னா் இப்லீஸ் வழிகெடு வதற்கும் நிராகரிப்பதற்கும் பெருமையடிப்பதற்கும் காரணமாய் அமைந்திருந்தது.*

*அல்லாஹ் கூறுகின்றான்:*

உமதிரட்சகன் மலக்குகளை நோக்கிக் கூறினான்: நிச்சயமாக நான் களிமண்ணிலிருந்து மனிதனை படைக்கப் போகிறேன். (அவ்வாறு படைத்து,) சீர்படுத்தி எனது ரூஹிலிருந்து அவனுக்கு ஊதினால், நீங்கள் அவனுக்கு சிரம்பணியுங்கள்! என்று கூறியபோது, மலக்குகள் அனை வரும் சிரம்பணிந்தனர். ஆனால் இப்லீஸோ (அவ்வாறு செய்யாமல்) பெருமையடித்து, நிராகரிப்பாளனாகி விட்டான். (அல்லாஹ் அவனை நோக்கி,) இப்லீஸே! நான் எனது கரங்களால் ஏற்படுத்திய சிருஷ்டிக்கு சிரம் பணியாமல் உன்னைத் தடுத்தது எது? உனக்குப் பெருமை வந்து விட்டதா? அல்லது நீ உயர்ந்தவனாகி விட்டாயா? என்று கேட்டான். அதற்கவன், நான் அவரை விடச் சிறந்தவன். நீ என்னை நெருப்பிலி ருந்து படைத்தாய். அவரையோ களிமண்ணிலிருந்து படைத்தாய் என்று கூறினான். (ஸாத் 38:71-76)

(அல்லாஹ் இப்லீஸை நோக்கி,) (ஆதமுக்கு) சிரம் தாழ்த்துமாறு நான் ஏவியபோது அவ்வாறு செய்யாமல் உன்னைத் தடுத்தது எது? என்று கேட்டான். அதற்கவன், நான் அவரை விட சிறந்தவன். நீ என்னை நெருப்பினால் படைத்தாய். அவரை களிமண்ணால் படைத் தாய் என்று கூறினான். அதற்கு (அல்லாஹ்), அப்படியாயின் நீ இங் கிருந்து இறங்கிச் சென்றுவிடு. இங்கிருந்து பெருமையடிக்கும் உரிமை உனக்குக் கிடையாது. எனவே வெளியேறிவிடு. நிச்சயமாக நீ சிறுமை யடைந்து விட்டாய்! என்று கூறினான். (அல்-அஃராப் 7:12-13)

*தான் அழித்தொழிக்கும் நெருப்பிலிந்து படைக்கப்பட்டிருப்பதாக வும், அந்நெருப்பு மனிதன் படைக்கப்பட்ட தாழ்ந்த களிமண்ணை விட உயா்ந்தது என்றும் இப்லீஸ் கொண்டிருந்த அறிவு பெருமைக்கு இட்டுச் சென்றது. அல்லாஹ்வின் எல்லையற்ற அறிவோடும் ஞானத்தோடும் வல்லமையோடும் ஒப்பிடும்போது தனது அறிவும் ஆற்றலும் வரையறுக் கப்பட்டவை என்ற உண்மையைக் கண்டுகொள்ள முடியாமல் அவனை அது குருடாக்கி விட்டது. ஆன்மா, பகுத்தறிவு, புரிந்துகொள்ளும் ஆற்றல்*

என்ற ஒளியின் மூலமாக மனிதனை அல்லாஹ் சிறப்பாக்கி வைத்திருக் கின்றான் என்ற உண்மையை அறிந்துகொள்ளாமலும் அந்தப் பெருமை அவனைத் தடுத்து விட்டது. சர்வ சக்தனான அல்லாஹ் மனிதனுக்கு விளங்கும் ஆற்றலையும் ஃகிலாபத் பொறுப்பையும் கொடுத்து, உயர்ந்த இயல்பு கொண்ட ஆன்மாவையும் தாழ்ந்த இயல்பு கொண்ட மண்ணை யும் அவனில் ஒன்றிணைத்தான். எனினும், இப்லீஸின் பெருமையும் அறியாமையும் குருட்டுத்தனமும் அவன் வழிகெடுவதற்கும் நிராகரிப்ப தற்கும் காரணமாகிவிட்டன.

ஆக, தெளிவும் நேர்வழியும் பெற்ற அறிவுதான் சிந்திக்கவும் உற்று நோக்கவும் திருப்தி காணவும் விசுவாசிக்கவும் காரணமாக அமைகிறது. இயல்பாக நமக்குள் மறைந்திருக்கின்ற கேள்வி கேட்கும் பண்பும் ஆய்வும் தேடலும் உற்றுநோக்கும் இயல்புமே இந்த நேர்மையான அறிவைப் பெறுவதற்கான வழியாகவும், திருப்தியையும் விசுவாசத்தை யும் நோக்கி இட்டுச்செல்லும் மார்க்கமாகவும் உள்ளன. எனவே, அறியா மையும் சிந்திக்காமையும் உற்றுநோக்காமையுமே விசுவாசத்துக்கான மிகச் சிறந்த மார்க்கம் என்ற கூற்று சரியானதாகாது.

ஆய்தலும் சிந்தித்த லும் உற்றுநோக்குதலும் நிராகரிப்புக்கும் நாஸ்திகத்துக்கும் காரணமாகி விடும் என்ற கருத்தும் ஏற்கமுடியாதது. அவ்வாறு நிராகரிப்பும் நாஸ்திக மும் ஏற்படுவதாயின், ஒருவர் தன்னைப் பற்றியும், அல்லாஹ்வின் முழு மையான அறிவோடும் ஆற்றலோடும் ஒப்பிடும்போது தனது அறிவும் ஆற்றலும் தர்க்கமும் வரையறுக்கப் பட்டவை என்பது பற்றியும் புரிந்து கொள்ளாதிருக்கும் நிலையிலேயே ஏற்பட முடியும். பிரபஞ்சத்திலுள்ள அனைத்தும் அல்லாஹ்வின் மகத்துவத்தையும் சக்தியையும் அவனது படைப்பின் நுணுக்கத்தையும் எடுத்துக்காட்டும் வகையிலேயே அமைந்துள்ளன.

இந்நிலையில் அறியாமை, ஆழ்ந்து சிந்திக்காமை என்பன பகுத் தறிவையும் அதன் அடிப்படையாக எழும் திருப்தி நிலையையும் செயலிழக்கச் செய்யுமானால் உண்மையில் அதுவே பிற்போக்குத்தனமும் ஈமானியப் பலவீனமுமாகும். ஏனெனில், ஈமான் என்பது உறுதி, திருப்தி, அமைதி என்பவற்றின் மறுவடிவம். ஒவ்வொரு மனிதனதும் நிலைமை, அறிவுத்தரம், விளங்குமாற்றல் என்பவற்றுக்கேற்பவே அந்த ஈமான் கிட்டுகிறது. இவ்வறிவுத்தரமும் விளங்குமாற்றலும் இறுதியில்

படைப்பாளனது மகத்துவத்தையும், நுணுக்கமான சிருஷ்டியையும், எல்லையற்ற சக்தியையும் புரிந்துகொள்வதற்கு வழிகாட்டுகின்றன.

பாலைவனத்தில், கிராமப்புறச் சூழலில் வாழும் சாதாரண நாட்டுப் புற மனிதர்களின் அறிவெல்லையில் நிகழ்பவையும், நாகரிகமடைந்த நகர்ப்புறங்களில் வாழ்கின்ற அறிஞர்கள் மற்றும் சிந்தனையாளர்களது அறிவெல்லையில் நிகழ்பவையும் வேறுவேறானவை என்ற உண்மை யோடு மேற்சொன்ன கருத்து எவ்வகையிலும் முரண்படப் போவதில்லை. ஏனெனில் இவ்விரு நிலைமைகளும் வேறு வேறாயினும், தமது அறிவும் தர்க்கமும் வரையறுக்கப்பட்டவை என்பதைப் புரிந்து கொள்வதிலும், சிருஷ்டியினதும் சிருஷ்டி கர்த்தாவினதும் பிரமாண்டத் தன்மையைப் புரிந்துகொள்வதிலும் இவ்விரு சாராரும் சமமானவர்களே.

## தெளிந்த அறிவு ஈமானுக்கு இட்டுச்செல்லும்

சிருஷ்டிகளின் இயல்புகள் பற்றிய ஆய்வுத்துறையில் விஞ்ஞானம் தொடா்ந்து முன்னேறியும் விசாலித்தும் வருகிறது. அந்தவகையில், சிருஷ்டியினதும் சிருஷ்டி கர்த்தாவினதும் பிரமாண்டத் தன்மையை அறிவதற்கான விரிந்த பல வாயில்களை தினமும் அது திறந்து கொண்டி ருக்கிறது. இவை அனைத்தும் சிந்திப்பதற்கும் உற்றுநோக்குவதற்குமான மிகப்பெரும் தளமொன்றை உருவாக்கியும் வருகின்றன. இவை உள்ளத் தில் அமைதியை ஏற்படுத்துவதோடு, ஈமானை மேலும் ஆழப்படுத்தக் கூடிய சிந்தனைகளையும் பிறப்பிக்கின்றன. அதேவேளை, சிருஷ்டியின தும் சிருஷ்டி கர்த்தாவினதும் பிரமாண்டத் தன்மையோடு ஒப்பிடும் போது வரையறுக்கப்பட்ட நிலையிலிருக்கும் மனிதனது அறிவோடும் தர்க்கத்தோடும் தொடர்புபட்ட ஸ்திரமான நம்பிக்கைகளில் எவ்வித மாற்றத்தையும் அவை ஏற்படுத்துவதும் இல்லை.

மனித உலகத்தில் காணப்படும் மிக முக்கியமான உண்மை அவனது இருப்பாகும். ஆனால், முழுமையற்றதும் வரையறுக்கப்பட்டதுமான அவனது தர்க்கமோ அடிப்படையில் அவன் இருப்பற்றவன் என்ற கருத்தை நோக்கியே அவனைக் கொண்டு செல்கிறது. ஏனெனில் மனிதத் தர்க்கத்தின் படியும், அவனது உலக நியதியின் படியும் முன் நிபந்த னையோ காரணமோ இன்றி எதுவுமே நிகழாது. இத்தர்க்கத்தின் அடிப்படையில் பார்த்தால், மனிதன் அடிப்படையில் இருப்பற்றவன்

*என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கும். ஏனெனில், மனிதனது புலனுக்குட்பட்ட தர்க்கத்தின்படியும் அறிவின்படியும் இல்லாமை யிலிருந்து எதுவுமே தோன்றுவதில்லை. இது மனிதனது இருப்பின்மை யையே வற்புறுத்துகிறது. அவ்வாறே மனிதனது தர்க்கம், புலனறிவு, அனுபவம், புரிதல் என்பவற்றின் அடிப்படையில் பிரபஞ்சம் எப்போதும் இவ்வாறுதான் இருந்தது என்ற எடுகோளும் அர்த்தமற்றது.*

*உண்மையில் மனிதனுக்கு பிரபஞ்சத்தில் இருப்பு என்ற ஒன்று இருக்கவே செய்கிறது. மனிதன் தன்னுள் உணரக்கூடிய முதன்மையான உண்மையாகவும் முக்கியமான உண்மையாகவும் இது உள்ளது. அந்தவகையில், இருப்புக் கும் இல்லாமைக்கும் இடையில் இங்கு முரண்பாடொன்று காணப்படு வது தெளிவு. எனினும், பிரச்சினை இருப்பு என்ற அம்சத்திலல்ல. காரணம், இருப்பு என்பது மனிதப் புலனறிவின்படி ஓர் உண்மையாகும்.*

*அவ்வாறாயின், மனிதனது வரையறுக்கப்பட்ட தர்க்கத்திலும் புரிதலிலுமே பிரச்சினை உள்ளது. ஏனெனில், இருப்பு என்ற அம்சம் மனிதனது வரையறுக்கப்பட்ட தர்க்கத்தினுள் அடங்கக் கூடியதல்ல. மாற்றமாக, அவனது தர்க்கத்தை விட உயர்ந்த தர்க்கமொன்றினாலேயே அது புரிந்துகொள்ளப்பட முடியும். மனிதன் இந்த உயர்ந்த தர்க்கத்தையும் அதன் வியாபகத்தையும் -அல்-குர்ஆன் கூறுவது போன்று- அவனது வாழ்க்கைப் பயணமும் அதன் சோதனைகளும் முடிவடைந்து, இதனை விட உயர்ந்ததோர் உலகத்துக்குச் செல்லும்போதே புரிந்து கொள்வான். அந்த உலகத்தில் எந்தக் கண்ணும் கண்டிராத, எந்தக் காதும் கேட்டிராத, எந்த மனிதனது உள்ளத்திலும் தோன்றியிராத-(முஸ்னத் அஹ்மத், இல.10172)- அம்சங்களே காணப்படும்.*

எனினும், சத்திய வேதம் அவர்களிடம் வந்தபோது அதனைப் பொய்யாக்கி, அது பற்றி குழப்பமும் அடைந்தனர். அவர்களுக்கு மேலிருக்கும் வானத்தை நாம் எவ்வாறு கட்டி அலங்கரித்திருக்கிறோம் என்பதையும், அதில் எவ்வித ஓட்டையும் இல்லாதிருப்பதையும் அவர்கள் கவனிக்கவில்லையா? மேலும், புமியை விரித்து, அதில் உறுதியான மலைகளை ஏற்படுத்தி, அழகான தாவரங்களையும் சோடிகளாக முளைக்கச் செய்தோம். நம்மை நோக்கி (கீழ்ப்படிந்து) வரும் அனைத்து அடியார்களுக்கும் படிப்பினையாகவும் சிந்தனைத்

தூண்டலாகவுமே இவற்றை நாம் ஏற்படுத்தினோம். மேலும், வானத்திலிருந்து அருள் நிறைந்த மழையைப் பொழியச்செய்து, அதன்மூலம் தோட்டங்களையும், அறுவடை செய்யக்கூடிய தானியங்களையும், அடுக்கடுக்கான பழக் குலைகளையுடைய உயர்ந்த பேரீச்ச மரங்களையும் உற்பத்தி செய்தோம். அடியார்களுக்கு உணவாகவே இவற்றை நாம் ஏற்படுத்தினோம். மேலும், அந்த மழையின் மூலம் இறந்த பூமியை உயிர்ப்பித்தோம். மறுமையில் (புதை குழிகளிலிருந்து) வெளியேறுவதும் இவ்வாறுதான் இடம்பெறும். இவர்களுக்கு முன்னர் நூஹின் சமூகத்தினர், கிடங்குவாசிகள், தமூத் கூட்டத்தினர், ஆத் கூட்டத்தினர், பிர்அவ்ன், லூத்தின் சகோதரர்கள், (ஷுஐபின் சமூகமாகிய) அய்க்கா வாசிகள், துப்பஉ சமூகத்தினர் ஆகிய அனைவரும் (இதனை) பொய்ப்படுத்தினர். அனைவரும் (நமது) தூதர்களையும் பொய்ப்படுத்தினர். எனவே, (தண்டனை பற்றிய) நமது வாக்குறுதி அவர்கள் மீது பலித்து விட்டது. முதல் முறை படைத்ததில் நாம் (களைப்படைந்து) இயலாமல் போய் விட்டோமா? எனினும், புதிதாக (இவர்களை நாம்) படைக்கும் விடயத்தில் இவர்கள் சந்தேகமே கொண்டிருக்கின்றனர். நிச்சயமாக நாமே மனிதனைப் படைத்தோம். அவனது மனதின் எண்ணங்களைக் கூட நாம் அறிவோம். அவனது பிடரி நரம்பை விட அவனுக்கு நாம் நெருக்கமாக உள்ளோம். அவனது வலப்புறமாகவும் இடப்புறமாகவும் இருவர் அமர்ந்து (அவனது செயல்களைப்) பதிவு செய்கின்றனர். அவன் எந்த வார்த்தையைப் பேசினாலும் அதனைக் கவனித்துப் பதிவு செய்யக்கூடிய ஒருவர் இருக்கவே செய்கிறார். மரண வேதனை உண்மையாக வந்து விடும் தருணத்தில், நீ பயந்து ஓடிக் கொண்டிருந்த மரணம் இதுதான் என்று கூறப்படும். எக்காளம் ஊதப்பட்டு விட்டால், (தண்டனை குறித்து நிராகரிப்பாளர்களுக்கு) வாக்களிக்கப்பட்ட நாள் அதுவாகத்தான் இருக்கும். அந்நாளில், ஒவ்வோர் ஆத்மாவும் அதனை அழைத்து வருபவரோடும் சாட்சியோடும் வந்து சேரும். இது குறித்தே நீ (உலகில்) அசிரத்தையாக இருந்தாய். உன் பார்வையை மறைத்துக் கொண்டிருந்த திரையை இன்று நாம் விலக்கி விட்டோம். (அனைத்தையும் தெளிவாகக் காணும் வகையில்) இன்று உன் பார்வை கூர்மையானதாகவே உள்ளது என்று அவனுக்குக் கூறப்படும். (காஃப் 50:5-22)

*இந்த உண்மையை விளக்குவதற்காக சிந்தனைக்குப் புரியும் வகையிலான ஓர் உதாரணத்தை இங்கே தருகிறோம். நாம் அனைவரும் அறிந்திருப்பது போல், பூனையின் அல்லது வேறொரு மிருகத்தின்*

சிந்தனா ஆற்றல் கணிதவியல் சமன்பாடுகளைப் புரிந்து கொள்ளக்கூடிய நிலையில் இருப்பதில்லை. இதன் பொருள், பூனை என்ற மிருகம் முட்டாள்தனம் மிக்கது என்பதல்ல. அதேவேளை, பூனையாலும் வேறு மிருகங்களாலும் புரிந்துகொள்ள முடியவில்லை என்பதற்காக கணித வியல் சமன்பாடுகள் என்ற ஓர் அம்சமே கிடையாது என்று வாதிப்பதும் அர்த்தமற்றது.

மனிதனுடன் ஒப்பிடும்போது அவனது அறிதிறனை அல்லது தர்க்கத்தை விட பூனையின் அல்லது ஏனைய மிருகங்களின் அறிதிறன் வரையறுக்கப்பட்டது என்பதே இதன் பொருளாகும். ஏனெனில், கணிதவியல் சமன்பாடுகளானவை பூனைகளிடமும் ஏனைய மிருகங்களிடமும் காணப்படும் அறிவை விட மிக உயர்ந்த தர்க்கவியல் அறிவின் மூலமே புரிந்துகொள்ளப்படக் கூடியனவாக உள்ளன. படைப்பாளனின் அறிவோடும் ஞானத்தோடும் ஒப்பிடும்போது படைக்கப்பட்டவற்றின் அறிவும் ஞானமும் வரையறுக்கப்பட்டவை என்ற உண்மையினை இப்லீஸ் ஏற்க மறுத்தது அவனிடமிருந்த அருவருக்கத்தக்க பெருமையின் காரணமாகவே. அன்று இப்லீஸ் விழுந்த அதே பொறியிலேயே இன்று சில பெருமைக்காரர்களும் நாஸ்திகர்களும் விழுந்து கொண்டிருக்கின்றனர்.

மனிதன் உயர்தரத்திலான தர்க்கமொன்றைக் கண்டுபிடிக்கும் ஒவ்வொரு தடவையும், தான் முன்பு கண்டிராத பல புதிய உண்மைகள் அதில் மறைந்திருப்பதைப் புரிந்து கொள்கிறான். இதனை சாதாரண மனிதர்கள் மாத்திரமன்றி பெருமையடிக்கும் விஞ்ஞானிகள் கூட ஏற்றுக்கொள்வர். பல விஞ்ஞான உண்மைகளும், சடப்பொருட்களின் இயல்புகள், சக்திகள், ஆற்றல்கள், தனித்தன்மைகள் என்பவை தொடர் பான கருத்தோட்டங்களும் நுணுக்கமான அணுவியல் ஆய்வுகளின் அடிப்படையில் இன்று பாரிய மாற்றங்களைக் கண்டிருக்கின்றன.

வெளிப்படையான, புலனறிவு சார்ந்த ஆய்வின் அடிப்படையில் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த சில விஞ்ஞான உண்மை களோடு ஒப்பிடும்போது இந்த மாற்றங்களை நாம் நன்கு அவதானிக்க முடியும். அந்த வகையில், சடப்பொருட்களானவை எவ்வித இயக்கமும் அற்று அமைதியாக இருப்பதில்லை. மாற்றமாக, அணுக்கள் என்ற வகையில் அவை அசைந்து கொண்டுதான் இருக்கின்றன. சடப்பொரு

*ளின் இறுக்கமும் அடர்த்தியும் எவ்வளவு அதிகமாக இருக்குமோ அந்த அளவுக்கு அதிலுள்ள அணுக்களின் அசைவும் வேகமாக இருக்கும். சடப்பொருளில் நிகழும் ஹைட்ரஜன் வெடிப்புகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, சடப்பொருள் அழிவதோ புதிதாவதோ இல்லை என்ற கோட்பாடு மறைந்து, சடப்பொருள் அழிந்து புதிதாகிறது என்ற கோட்பாடு இன்று தோன்றியுள்ளது.*

*பூமியிலுள்ள அனைத்துக் காடுகளையும் எரித்தால் தோன்றக்கூடிய வெப்பத்தை விட மிக உயர்ந்த -கற்பனை செய்து பார்க்க முடியாத- வெப்பத்தை சிறிதளவு சடப் பொருளைக் கொண்டு உருவாக்குவது இன்று சாத்தியமாக மாறியிருக்கிறது. விஞ்ஞான உலகில் சாத்தியமாக மாறியிருக்கும் இவையனைத்துமே சக்தியும் ஞானமும் மிக்கவனும் கச்சிதமான படைப்பாளனுமான அல்லாஹ்வின் அறிவோடு ஒப்பிடும் போது மனிதனின் அறிவும் தர்க்கமும் புரிந்துகொள்ளும் திறனும் வரையறுக்கப்பட்டவை என்பதை எடுத்துக் காட்டுகின்றன.*

*பிரபஞ்சத்தின் கச்சிதமான படைப்பிலும் நுணுக்கத்திலும் வெளிப் பட்டு நிற்கின்ற அல்லாஹ்வின் எல்லையற்ற இந்த சக்தியையும் ஞானத்தையும் அவதானிக்கின்ற எந்த மனிதனும் -அவன் எப்படிப்பட்ட அறிவும், புரியும் திறனும் கொண்டவனாக இருந்தாலும் - அல்லாஹ்வை நிராகரிக்க முடியாது.*

(நபியே! அவர்களிடம்) கேளும்: இவ்வேதம் அல்லாஹ்விடமிருந்து வந்திருக்கும் நிலையிலும் அதனை நீங்கள் நிராகரிப்பீர்களானால், (நேர்வழியை விட்டு) மிகத் தூரத்திலிருக்கும் (உங்களை விட) வழி கேடராக யார் இருப்பார் என்று கவனித்துப் பார்த்தீர்களா? நிச்சயமாக இவ்வேதம் உண்மையானதுதான் என்பது அவர்களுக்குத் தெளிவாகும் வரை நமது அத்தாட்சிகளை உலகின் பல பாகங்களிலும், அவர் களுக்குள்ளும் நாம் காண்பிப்போம். (நபியே!) உமது ரட்சகன் (அவர் களது செயல்கள்) அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பது அவர்களுக்குப் போதாதா? (புஸ்ஸிலத் 41:52-53)

அவனே (அனைத்துக்கும்) முதலில் இருந்தவன் (அனைத்தும் அழிந்த பிறகு) இறுதியாகவும் இருப்பவன் வெளிப்படையானவன் அந்தரங்கமானவன். அவன் அனைத்தையும் அறிந்தவன்.
(அல்-ஹதீத் 57:3)

இப்னு ஹஸ்மின் ளாஹிரீ மத்ஹபின் தொடர்ச்சி என்ற தலைப்பிலான கட்டுரையொன்றில், இஸ்லாமியத் தூதானது அல்லாஹ்விடமிருந்து வந்த வஹியே என்ற ஆழமான நம்பிக்கை என்னிடம் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்களை விளக்கியுள்ளேன். அது மக்காவில் நான் உயர்தர வகுப்புகளில் படிக்கும் காலத்தில் எனது சிந்தனா வாழ்வின் ஆரம்பக்கட்டத்தில் நிகழ்ந்ததாகும்.

பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக அச்சமோ தயக்கமோ இன்றி சிந்திக்கவும், உற்றுநோக்கவும், உண்மையைத் தேடவும் எனக்கு உதவிய ஸ்திரமான அடிப்படையாகவும் அது அமைந்திருந்தது. அல்லாஹ்வின் உதவியால் எனக்குள் ஊடுருவி, என் சிந்தனைக்கு வழிகாட்டி, பயணத்தைத் தெளிவுபடுத்தி, நடத்தையை நெறிப்படுத்தும் இந்த ஈமான் என்னுள் ஆழமாக இருந்ததால், இயல்பாக எனக்குள் எழும் கேள்விகளையும், சிந்தனையைக் கிளறும் அவதானங்களையும் எதிர்கொள்வதற்கு நான் ஒருபோதும் அஞ்சவோ தயங்கவோ இல்லை.

ஏனெனில், இவ்வாறான கேள்விகளுக்கு முன்னால் உள்ளம் எவ்வளவு குழப்பமடைந்தாலும், அவற்றைப் புரிந்துகொள்வதற்கு பகுத்தறிவு எவ்வளவு சிரமப்பட்டாலும் இஸ்லாமியத் தூது பற்றிய எனது மொத்தமான விசுவாசம் எவ்வகையிலும் மாறப்போவதில்லை. சிருஷ்டி கர்த்தாவின் மகத்துவத்தையும், அவனது தற்புதுமையான சிருஷ்டியையும், அழகிய திட்டமிடலையும், ஞானத்தையும், ஆற்றலையும் பற்றிய எனது புரிதலிலும் மாற்றம் ஏற்படப் போவதில்லை.

அதேவேளை, மனிதன் என்ற வகையில் எனதும், எனது தர்க்க அறிவினதும் வரையறுக்கப்பட்ட தன்மையை நான் முழுமையாகப் புரிந்து வைத்திருக்கிறேன் என்பதை உறுதிப்படுத்தப்படுவதாகவும் இது அமைகிறது. இதன் காரணமாகவே, எனது கேள்விகளிலோ அவதானங்களிலோ குழப்பங்களிலோ அல்லாஹ்வையும், அவனது தூதரையும், மறைவான அம்சங்களையும் பற்றிய எனது விசுவாசத்தின் மொத்தப் பரப்புடன் முரண்படக்கூடிய எதுவும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. கேள்வி எழுப்புதல், ஆராய்தல், தேடுதல் என்பவற்றில் மட்டுமன்றி சிலபோது குழப்பங்களில்கூட அல்லாஹ்வையும் அவனது அறிவு, சக்தி, ஞானம் என்பவற்றையும் பற்றிய எனது நம்பிக்கையை மேலும் ஆழப்படுத்தக்கூடிய அம்சங்கள் மறைந்திருப்பதாகவே நான்

உணர்கிறேன். அதேவேளை, இது எனது இயலாமையையும் முழுமை யற்ற அறிவையும் பற்றிய புரிதலை வலுப்படுத்துவதாகவும், எனது தர்க்க அறிவின் வரையறுக்கப்பட்ட தன்மையை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நூலானது இவ்வாறான சிரமம் நிறைந்த ஒரு கேள்விக்கு விடை தேடும் பணியில் வாசகரையும் பங்குகொள்ளச்செய்யும் எனது விருப்பத் தின் வெளிப்பாடே. இது ஆரம்பத்தில் எனக்குள் தோன்றி, எனது புரிதலுக்கும் தர்க்கத்துக்கும் முழுமையாக அப்பாற்பட்டு நின்ற கேள்வி களுள் ஒன்றாகும். அல்லாஹ்வினால் வழங்கப்பட்டுள்ள பகுத்தறிவு, தர்க்க அறிவு, புரியும் திறன் என்பவற்றின் எல்லையில் நின்று, உண்மையைக் கண்டறியும் வேட்கைக்கு திருப்தியான பதிலைத் தரக்கூடிய அளவுக்கு ஓரளவு பாரிய எட்டினை - எனது சிந்தனையையும் ஆய்வினையும் பயன்படுத்தி - இதன் மூலம் எடுத்துவைத்துள்ளேன் என்று நான் நம்புகிறேன்.

## பிரச்சினை

இக்கட்டுரையில் எழுப்பப்படும் கேள்வியானது எனது சிந்தனையை யும் கவனத்தையும் நீண்டகாலம் ஆக்கிரமித்திருந்த ஒரு தோற்றப்பாடு பற்றியது. அதன் பொருள் என்ன என்றும், அதில் மறைந்திருக்கும் தத்துவம் என்ன என்றும் மிக்கடுமையாக நான் சிந்தித்திருக்கிறேன். உயிரினங்களின் வாழ்க்கை வட்டம் பற்றிய கேள்வியே அது. இன்னும் தெளிவாகச் சொன்னால், சில உயிரினங்கள் தமது இருப்பைப் பாது காத்துக் கொள்வதற்காகவும் நிலைத்து வாழ்வதற்காகவும் ஏனைய உயிரினங்கள் மீது அத்துமீறவும் அவற்றை வேட்டையாடவும் வேண்டிய நிலை காணப்படுவது ஏன்? என்பதே அக்கேள்வியாகும்.

மேற்கு சிந்தனையில் இது வனவிலங்குச் சட்டம் அல்லது காட்டுச் சட்டம என்றும், பலம் வாய்ந்ததே நிலைக்கும் என்றும் அழைக்கப்படு கிறது. இவ்விதியின்படி தரையிலும் கடலிலும் ஆகாயத்திலும் வாழும் பல்வேறு பலம் வாய்ந்த விலங்கினங்கள் தம் வாழ்க்கைக்காக வேண்டி ஏனைய உயிரினங்களை -குறிப்பாக தம்மை விடப் பலவீனமான வற்றை- வேட்டையாட வேண்டி உள்ளன. அந்த வகையில், சிங்கம் காட்டெருமையை வேட்டையாடுகின்றது. ஓநாய் மானையும், நரி

முயலையும், கழுகு புறாவையும் வேட்டையாடுகின்றன. மனிதனைப் பற்றியோ கேட்க வேண்டியதில்லை. எத்தனை ஆயிரம் மான்களும் முயல்களும் புறாக்களும் ஆடு-மாடுகளும் கோழிகளும் அவனது ஆயுளில் வேட்டையாடப்படுகின்றன..? இவ்வாறான எத்தனை பில்லியன் விலங்குகளை மனித இனம் ஆண்டுதோறும் வேட்டையாடுகின்றது..?

இவ்வாறு பல உயிரினங்கள் தமது இருப்பை நிலைநிறுத்திக் கொள்வ தற்காக ஏனைய உயிரினங்களை ஏன் வேட்டையாட வேண்டும் என்பதே இங்குள்ள கேள்வி. ஒரு பூனை முயலொன்றைத் தாக்கி தன் பற்களாலும் நகங்களாலும் குதறியபோது அது அச்சத்தால் எழுப்பிய -என்னால் மறக்க முடியாத- அலறல் ஒலியே எனக்குள் இந்தக் கேள்வியை முதன்முதலில் மிகப் பலமாகக் கிளறி விட்டது. முயல் இயல்பிலேயே சாதுவான, வெட்கம் நிறைந்த, பாரிய ஒலிகளை எழுப்பாத ஒரு பிராணி என்பதை அனைவரும் அறிவர்.

இக்கேள்வியை எழுப்பும்போது, இதற்கான விடையாக வாழ்க்கை வட்டம் மற்றும் உயிரினங்களுக்கு மத்தியிலான சமநிலை பற்றிய விளக்கம் இயல்பாகவே உள்ளத்தில் தோன்ற முடியும். அந்தச் சமநிலை யில் பேணப்பட்டுள்ள நேர்த்தி எவ்வாறு மனிதனுக்கு உதவியாகவும், புவி வாழ்வைப் பாதுகாப்பதாகவும் அமைந்துள்ளது என்ற விளக்கமும் கூட தோன்ற முடியும். பூமியில் நாம் காணுகின்ற இந்த ஒழுங்கிலான வாழ்க்கைச் சுற்றுவட்டத்தின் மூலமே சமநிலை பேணப்பட முடியும் என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளும்போது இந்த நேர்த்தியை எம்மால் புரிந்து கொள்ள முடியும் என்பதும் உண்மைதான். ஆனால் மேற்சொன்ன கேள்வி அல்லாஹ்வின் எல்லையற்ற சக்தியுடன் தொடர்புபட்டதாகும். அதாவது, அளவற்ற ஆற்றல் கொண்ட அல்லாஹ் நாடியிருந்தால் பேச முடியாத இந்த ஜீவன்களுக்கு எந்தக் கஷ்டமோ வேதனையோ கொடுக் காத வேறொரு சமநிலை ஒழுங்கை ஏற்படுத்தியிருக்கலாமல்லவா?

இவ்வாறு அவதானித்துக் கேள்வி எழுப்புவதற்கு மட்டும்தான் என்னால் முடிந்ததே தவிர, அதற்குப் பின்னால் மறைந்திருக்கின்ற பரிபூரணப் பொருளையும் ஞானத்தையும் புரிந்துகொள்வது அவ்வளவு இலகுவானதாக அமையவில்லை. இந்த அவதானம் பற்றிக் கலந்துரை யாடி, நுணுகிக் கவனித்து, உரிய பதிலைத் தேடும் முயற்சியில் வேறு சில சகோதரர்களையும் நான் பங்கு கொள்ளச் செய்தேன். ஆனால்,

ஆய்வுக்குட்படுத்தக் கடினமான அம்சங்களைப் பற்றி கேள்வி கேட்பதற் கும், கேள்விகளை எழுப்புவதற்கும் அவர்கள் அஞ்சுவதை என்னால் உணர முடிந்தது. அவர்கள் அளித்த தன்னிச்சையான பதில்களில் உயிரி னங்கள் வேதனையை அனுபவிக்க வேண்டிய நிர்ப்பந்த நிலை பற்றி மாத்திரமின்றி, அதிலுள்ள இன்பம் பற்றியும், வாழ்வை வடிவமைப்பதி லும் சுவைப்பதிலும் கட்டியெழுப்புவதிலும் அது வகிக்கும் இன்றி யமையாத பாத்திரம் பற்றியுமான விளக்கங்கள் அடங்கி இருந்தன. ஆனால், பாலைவனத்தில் ஓநாயின் இரு தாடைகளுக்குள் சிக்கிய மான் படுகின்ற வேதனைக்கும், ஆழ்கடல் வாழ் திமிங்கிலமும் மீன்களும் அடைகின்ற துன்பங்களுக்கும் பின்னாலுள்ள பொருள் என்ன? அதற்கான அவசியம் என்ன? ஞானம் நிறைந்த அல்லாஹ் நாடியிருந்தால் இதற்கு மாறாக வேறோர் ஏற்பாட்டை வைத்திருக்கலாம் அல்லவா?

ஈமானுக்கும், விளக்கம் பெறும் நோக்கோடு எழுப்பப்படும் கேள்வி களுக்கும் இடையில் குழப்பிக் கொண்டு விடுமோ என்ற அச்சமே இவ்வாறான பிரச்சினைகளில் காட்டப்படும் தயக்கத்துக்கான அடிப் படைக் காரணமாகும். எனது அபிப்பிராயப்படி இவ்விரு அம்சங்களுக் கும் இடையில் எவ்வித முரண்பாடும் கிடையாது. ஏனெனில் ஈமான் என்பது மொத்தமான பார்வையிலிருந்தும் சிந்தனையிலிருந்தும் தோன்றுவது. கேள்விகளோ கிளைப் பிரச்சினைகளில் இருந்தும் வியாக்கியானங்களில் இருந்தும் பிறப்பவை.

வாழ்வையும் பிரபஞ்சத்தை யும் பற்றிய கேள்விகளுக்கான பதில் -விரிவாகவோ பகுதியளவிலோ- கிடைப்பது எப்படிப் போனாலும், அல்லாஹ்வின் எல்லையற்ற சக்தியையும் ஞானத்தையும் பற்றிய எனது மொத்தமான விசுவாசத்திலும் புரிதலிலும் அது எவ்விதப் பாதிப்பையும் ஏற்படுத்தப்போவதில்லை. ஏனெனில், அந்த ஆற்றலையும் ஞானத்தை யும் எனது வரையறுக்கப்பட்ட அறிவும் தா்க்கமும் எப்போதும் முழுமையாகப் புரிந்திருக்க வேண்டும் என்ற அவசியம் எதுவும் கிடையாது. அதேவேளை எனது சிந்தனை, பகுத்தறிவு, புரியும் திறன் என்பவற்றின் எல்லையில் சிந்திக்கவும் உற்று நோக்கவும் எனக்குள்ள விருப்பத்தையும் கடமைப்பாட்டையும் அது நிராகரிக்கவும் மாட்டாது. ஏனெனில், பெருமையோ அகம்பாவமோ கலக்காத இத்தகைய ஆய்வும் கேள்வியும் எனது அறிவை மேலும் விசாலிக்கவே உதவுகிறது.

இவை அனைத்துக்கும் மேலாக, சிந்திப்பதும் ஆழ்ந்து நோக்குவதுமே மிக உயர்ந்த புரிதலுக்கு மனிதனை இட்டுச் செல்கிறது அவனது அறிவையும் விசாலிக்கிறது. தனது வாழ்வியல் விவகாரங்களில் வஹியும் இறைத்தூதும் தருகின்ற வழிகாட்டல்களை அவன் புரிந்து கொள்வதற் கான சாதனமாகவும் அது உள்ளது.

இந்தவகையில், ஷரீஆவையும் அதன் சட்டவாக்கத்தையும் புரிந்து கொள்வதிலும் வாழ்வியல் விவகாரங்களில் அவற்றைப் பிரயோகிப்ப திலும் வஹியோடு இயைந்து செல்வதாகவும் அதில் ஆர்வம் கொண்ட தாகவும் பகுத்தறிவு அமைந்திருப்பது அவசியமாகிறது. இவ்வாறன்றி, சீரிய பகுத்தறிவைப் பயன்படுத்த மறுப்பதும், அதில் நம்பிக்கை வைக்காதிருப்பதும், குருட்டுத்தனமான பின்பற்றலுக்கு அழைப்பதும், பிரபஞ்ச நிகழ்வுகளையும் நியதிகளையும் ஆராயாதிருப்பதும் ஈமான் மற்றும் பெருமையுணர்வு என்ற இரண்டையும் குழப்பிக்கொள்வதாக அமைவதோடு, ஏதோ ஒரு வகையில் இயலாமைக்கும் வழிகேட்டுக்கும் இட்டுச் செல்லும் காரணியாகவும் மாறி விடுகிறது.

மறைந்திருக்கும் உண்மைகளை தேடிக்கண்டறியும் இயல்பான வேட்கையைத் தீர்த்துக்கொள்ள முடியாத எனது இயலாமை, மயக்கம் என்பவற்றால் விளைந்த வேதனையைத் தணிப்பதில் மிகப்பெரும் இமாம்களுள் ஒருவர் எனக்குத் துணை நின்றார். அவர் -எனது ஞாபகத் தின் படி- இப்னு கையிம் அல்-ஜவ்ஸியா என்று நினைக்கின்றேன். அவர் தனது நூலொன்றில் எனது கேள்வியை ஒத்த கேள்வியொன்றை எழுப்பியிருந்தார். அதற்கு அவர் கண்டிருந்த விடையும் எனது மனதில் பதிந்திருந்த விடைக்கு நெருக்கமானதாகவே இருந்தது.

அதாவது -நமது கேள்விக்குப் பகுத்தறிவுபூர்வமான, திருப்தியான பதில் கிடைக்க வில்லையெனில்-அல்லாஹ்வின் அளவற்ற ஆற்றலிலும் ஞானத்திலும் நாம் கொண்டுள்ள ஆழமான நம்பிக்கையும், மனித அறிவின் எல்லை வரையறுக்கப்பட்டது என்ற நம்பிக்கையும் நமது பிரச்சினையை அல்லாஹ்விடம் ஒப்படைக்க நம்மைத் தூண்டுகிறது. நமது தர்க்கத்துக்கும் குறையறிவுக்கும் அகப்படாத மிகப்பெரும் ஞானமொன்று அதில் மறைந்திருப்பதாக இதன்போது நாம் உறுதியாக நம்புகிறோம். இதுவே அந்த விடை. இந்த விடை குழப்பத்தைத் தணிப்பதாக அமைந்திருந்தா லும், எனது பிரதான கேள்வி திருப்தியான

விடை எதுவும் கிடைக்கப் பெறாமல் அப்படியே நின்று விட்டது. அதற்கான உண்மையான பதில் ஒருபோதும் கிடைக்காமல் கூட போகலாம். ஏனெனில், எனது புரியும் ஆற்றலுக்கும் தர்க்கத்தின் எல்லைக்கும் அப்பாற்பட்டதாக அது இருக் கக்கூடும். எனினும், குறிப்பிட்ட இந்த விடயம் தொடர்பாக -சந்தர்ப்பம் கிட்டும் போதெல் லாம்- கேள்வி எழுப்புவதை விட்டும் எனது பகுத் தறிவை அது தடுக்கப் போவதில்லை. அந்தவகையில், என்றாவது ஒரு நாள் இன்றிருக்கும் பதிலை விடச் சிறந்த பதில் கிட்டவும் கூடும்.

## மிருகத்தின் யதார்த்தம்:
### ரூஹ் இணையாத களிமண் வாழ்வு

எந்தவொரு பிரச்சினை பற்றிச் சிந்திப்பதற்கும் அதன் அடிப்படை களைக் கவனிப்பது அவசியமாகிறது. அப்பிரச்சினையின் அனைத்துப் பரிமாணங்களையும் உள்வாங்கி, அவற்றுக்கிடையிலான தொடர்பு களைக் கவனித்து, அதன் இருண்ட பகுதிகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவரக் கூடியதான பரிபூரண நெறிமுறையொன்று இதன்போது அவசியமாகிறது. பிரபஞ்சம், அதிலுள்ள சிருஷ்டிகள், அவற்றின் இயல் புக்குப் பின்னாலுள்ள பிரதான பகைப்புலங்கள், அவற்றுக்கிடையிலான தொடர்புகள் என்பவற்றைப் புரிந்துகொள்வதற்கான பிரதான ஆதாரமாக அமைபவை இவ்வனைத்தையும் படைத்துச் சிருஷ்டித்தவனான அல்லாஹ்வும் அவன் மனிதனுக்கு வஹியாக அறிவித்த உண்மைகளுமே. மனிதன் இவ்வுண்மைகளை அனுசரித்துச் செயல்பட்டு, அவற்றின் வழியில் சத்தியத்தை நிலைநிறுத்த வேண்டும் என்பதற்காகவே அல்லாஹ் இவற்றை அவனுக்கு அறிவித்தான்.

சங்கைமிக்க அல்-குர்ஆன் அல்லாஹ்வின் வாக்காகவும், மனிதனுக்கு அருளப்பட்ட இறைத்தூதாகவும் உள்ளது. பிரபஞ்சத்தின் பிரதான அடிப்படைகளையும், தொடர்புகளையும், இலக்குகளையும் புரிந்து கொள்வதற்கான அடிப்படை மூலாதாரமாகவும் அது உள்ளது. அந்த வகையில், குறித்த இப்பிரச்சினைக்கான விடையின் முதல் பகுதி அந்த அல்-குர்ஆனை உற்றுக் கவனிப்பதிலேயே பெரிதும் தங்கியுள்ள தெனலாம். அதன் மூலமாகத்தான் மனித வாழ்வு, அவனது இருப்பு, அவனது உலகம் என்பவற்றுக்குப் பின்னால் புரிந்து கொள்ளக்கூடிய

வகையில் மறைந்துள்ள பிரதான அடிப்படைகளையும் இரகசியங்களையும் நாம் விளங்கிக் கொள்ள முடியும். எனவேதான், மிருகத்தின் இயல்பு மற்றும் மனிதனுக்கும் ஏனைய சிருஷ்டிகளுக்கும் அதனுடன் உள்ள தொடர்புகள் பற்றிய எனது சிந்தனா முயற்சியில் முதலில் அல்-குர்ஆனை அணுகினேன். சிருஷ்டிகளின் இயல்புகள், அவற்றுள் சிலவற்றுக்கிடையில் காணப்படும் தொடர்புகள், அவற்றுக்குப் பின்னாலுள்ள நோக்கங்கள் என்பவற்றை சற்று விளங்கிக் கொள்ளக் கூடிய வழிகாட்டல் ஏதாவது கிடைக்கலாம் என்ற தேடலோடு அதனை நான் அணுகினேன். இம்முயற்சியின் விளைவாக அல்-குர்ஆனில் எனக்குக் கிடைத்த உண்மைகள் இப்பிரச்சினையை விளங்கிக் கொள்வதற்கும், அதன் சில பகுதிகளை ஆழ்ந்து புரிந்து கொள்வதற்கும் ஓரளவு உதவியுள்ளதென்றே நம்புகிறேன்.

அந்த வகையில் ஒளி, நெருப்பு, களிமண் என்பன சக்தியின் பல்வேறு நிலைகளும் வடிவங்களும் என்பதை நாம் அறிவோம். இச்சக்தியின் உண்மை நிலை என்ன என்பதை மனித அறிவு இன்றுவரை புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. குளிர்ந்து ஜடமான நிலையிலுள்ள களிமண்ணை விட நாசகாரத்தன்மை கொண்ட கொழுந்து விட்டெரியும் நெருப்பு அந்தஸ்திலும் நிலையிலும் உயர்ந்தது என்பதை அல்-குர்ஆனிலிருந்து நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. எனவேதான், நெருப்பினால் படைக்கப்பட்ட இப்லீஸ் பெருமையடித்து ஆதமுக்கு சிரம் பணிய மறுத்தான்.

நான் ஆதமை விட சிறந்தவன். என்னை நீ நெருப்பினால் படைத்தாய் அவரையோ களிமண்ணிலிருந்து படைத் தாய்! என அவன் (அல்லாஹ் விடம்) கூறினான். (அல்-அஃராஃப் 7:12)

நீ களிமண்ணால் படைத்தவருக்கா நான் ஸுஜூது செய்வது? என அவன் கேட்டான்.''(அல் -இஸ்ராஉ 17:61)

சுட்ட பாத்திரத்தைப் போல், (தட்டினால் ஒலியெழுப்பக்கூடிய) களிமண்ணால் அவன் மனிதனைப் படைத்தான். மேலும், நெருப்பின் சுவாலையிலிருந்து ஜின்களைப் படைத்தான். (அர்-ரஹ்மான் 55:14,15)

(தட்டினால்) ஒலி எழுப்பக்கூடிய காய்ந்த கருங்களி மண்ணிலிருந்து நீ படைத்த மனிதனுக்கு நான் சிரம் தாழ்த்தக் கூடியவனல்ல! என அவன் கூறினான். (அல்-ஹிஜ்ர் 15:33)

*அல்-குர்ஆன் நெருப்பை அனேகமாக தீங்கோடும் தண்டனை யோடும் இணைத்துப் பேசுவதையும் நாம் அவதானிக்கலாம்:*

(இணை வைப்பாளர்களாகிய) அவர்கள் (உங்களை நரக) நெருப்பை நோக்கி அழைக்கிறார்கள். ஆனால் அல்லாஹ்வோ தனது அருளால் சொர்க்கத்தையும் மன்னிப்பையும் நோக்கி அழைக்கிறான். (அல்-பகறா 2:221)

(நிராகரிப்பாளர்களாகிய) அவர்களை (அவர்களது நண்பர்களாகிய ஷெய்த்தான்கள்) ஒளியிலிருந்து வெளியேற்றி இருளின்பால் கொண்டு செல்கின்றனர். அவர்களே (நரக) நெருப்புக்குரியவர்கள். அதில் அவர்கள் நிரந்தரமாகத் தங்கியிருப்பர். (அல்-பகறா 2:257)

(சுவனமாகிய) அது இறையச்சமுடையோரின் முடிவாகும். நிராகரிப்பவர்களின் முடிவு (நரக) நெருப்புதான். (அர்-ரஃத் 13:35)

(யூதர்களாகிய) அவர்கள் (முஃமின்களுக்கிடையில்) போர் நெருப்பை மூட்டிய போதெல்லாம் அல்லாஹ் அதனை அணைத்து விட்டான். (அல்-மாயிதா 5:64)

நிராகரித்து விட்டவர்கள் சுகம் அனுபவித்துக் கொண்டும் மிருகங்கள் போல் சாப்பிட்டுக் கொண்டும் இருக்கின்றனர். அவர்கள் செல்லும் இடம் (நரக) நெருப்புதான். (முஹம்மத் 47:12)

*நெருப்பு அழிக்கும் இயல்பு கொண்டதாயினும் அது ஒளியுடன் தொடர்புபட்டது. எனவேதான் இப்லீஸ் மலக்குகளில் ஒருவனாக ஆக்கப்பட்டிருந்தான். அவன் இறை கட்டளைக்கு மாறுசெய்தபோது அவனுக்குள்ளிருந்த நாசகார இயல்பு அவனை மிகைத்திருந்தது. அதனால்தான் தனது இரட்சகனின் கட்டளைக்கே அவன் மாறுசெய்தான். நெருப்பினால் படைக்கப்பட்ட ஜின்களில் அல்லாஹ்வை விசுவாசித்து கட்டுப்படக்கூடியோர் இருப்பது போலவே, அவனுக்கு மாறுசெய்து பெருமையடிப்போரும் இருக்கவே செய்கின்றனர்.*

*தீங்கு தரும் நெருப்பாக உள்ள இப்லீஸின் இயல்பு பாவம்செய்ய முனைந்தபோது அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறுசெய்து பெருமை யடித்தது மனிதன் மீது காழ்ப்புணர்வு கொண்டு, அவனுக்குத் தீமை செய்ய முனைந்தது அவனுக்குத் தீங்கிழைக்கப் போவதாகவும், வழி கேட்டையும் பாவத்தையும் நோக்கி அவனைத் தள்ளி விடப் போவ தாகவும் எச்சரித்தது இழிந்த களிமண் இயல்பை நோக்கி அவனைத்*

*தள்ளி, அதன் விளைவாக அவனுக்குள் மறைந்திருக்கும் மிருக இயல்பை யும் இச்சைகளையும் வரம்புமீறும் இயல்பையும் வெறியுணர்வையும் தூண்டிவிடப் போவதாகவும் அச்சுறுத்தியது.*

*மலக்குகளை நோக்கி, ஆதமுக்குச் சிரம் பணியுங்கள்! என நாம் கூறியபோது இப்லீஸைத் தவிர (அனைவரும்) சிரம் பணிந்தனர். அவனோ, நீ மண்ணால் படைத்தவருக்கு நான் சிரம் பணிவதா? எனக் கேட்டான். (பின்னர் ஆதமை ஏளனமாக சுட்டிக்காட்டி,) என்னை விட நீ இவரை கௌரவப்படுத்தி இருக்கிறாயா? மறுமைநாள் வரை எனக்கு நீ அவகாசம் தந்தால் இவரது சந்ததியில் வெகு சிலரைத் தவிர (அனைவரையும்) வழிகெடுத்து விடுவேன் என்றும் கூறினான். அதற்கு (அல்லாஹ்), சென்று விடு! அவரது சந்ததியில் உன்னைப் பின்பற்றி யோருக்கும் உனக்கும் கிடைக்கும் நிறைவான கூலி நரக நெருப்புதான்! என்று கூறினான்.*

நிச்சயமாக எனது (உண்மையான) அடியார்கள் மீது உனக்கு எந்த அதிகாரமும் கிடையாது. அவா்களை உன்னிடமிருந்து பாதுகாப்பதற்கு உனது இரட்சகனே போதுமானவன் என்றும் (அல்லாஹ்) கூறினான். (அல்-இஸ்ராஉ 17:61-65)

என் இரட்சகா! நீ என்னை வழிகெட்டு அலைய விட்டு விட்டதால், பூமியில் (அனைத்துப் பாவங்களையும்) அவர்களுக்கு அழகுபடுத்திக் காண்பித்து அனைவரையும் நிச்சயமாக வழிகெடுப்பேன். எனினும், அவர்களிலுள்ள உனது தூய அடியார்களைத் தவிர! என்று (இப்லீஸ்) கூறினான். (அல்லாஹ் கூறினான்:) உன்னைப் பின்பற்றிய வழிகேடர் களைத் தவிர எனது (தூய) அடியார்கள் மீது உனக்கு எந்த அதிகாரமும் கிடையாது. (உன்னைப் பின்பற்றிய) அவர்கள் அனைவருக்கும் வாக் களிக்கப்பட்ட இடம் நிச்சயமாக நரகமே! (அல்-ஹிஜ்ர் 15:39-43)

*இதேவேளை, -முற்றிலும் நன்மைகள் நிறைந்த- ஒளியோ (அந்-நூர்) அல்லாஹ்வின் பண்புகளில் ஒன்றாக இருப்பதைப் பார்க்கிறோம்:*

அல்லாஹ் வானங்களினதும் புமியினதும் ஒளியாக இருக்கிறான். (அந்-நூர் 24:35)

*சத்தியம், நன்மை, நேர்வழி என்பவற்றைக் குறிக்கும் பதமாகவும் ஒளி குறிப்பிடப்பட்டுள்ளது:*

விசுவாசம் கொண்டோரது பொறுப்பாளனாக அல்லாஹ் இருக்கிறான். அவன் அவர்களை இருள்களிலிருந்து வெளியேற்றி ஒளியை நோக்கிக் கொண்டு செல்கிறான். (அல்-பகறா 2:257)

எனவே, அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நாம் இறக்கிய (வழிகாட்டல்) ஒளியையும் விசுவாசங் கொள்ளுங்கள்! (தகாபுன் 64:08)

(நபியே!) இவ்வாறுதான் நமது கட்டளைப்படி உமக்கு (இந்த) அல்-குர்ஆனை வஹியாக அருளினோம். இதற்கு முன்னர் நீர் வேதம் எதுவென்றோ ஈமான் எதுவென்றோ அறிந்திருக்கவில்லை. ஆயினும் அதனை நாம் ஒளியாக ஆக்கிவைத்து, நமது அடியார்களில் நாம் விரும்பியோருக்கு அதன் மூலம் நேர்வழி காட்டுகிறோம்.
(அஷ்-ஷூறா 42:52)

*ஒளிவீசி வழிகாட்டும் சந்திரனை திருமறை அந்-நூர் (ஒளி) என்று வர்ணிக்கிறது. அதேவேளை, துன்பத்தையோ அழிவையோ ஏற்படுத்தாமல் வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும் மாத்திரம் தரும் சூரியனை அந்-நார் (நெருப்பு) என்று கூறாமல், அழ்-ழியாஉ (வெளிச்சம்) அல்லது அஸ்-ஸிராஜ் (விளக்கு) என்று அது குறிப்பிடுகிறது. மனித வாழ்வில் அது ஏற்படுத்தும் சிறந்த விளைவை முன்னிறுத்தியே அல்-குர்ஆன் அதற்கு இவ்வாறான பெயர்களைக் குறிப்பிடுகின்றது. ஏனெனில், ழவ்உ அல்லது ழியாஉ (வெளிச்சம்) என்பதும், நூர் (ஒளி) என்பதும் அழிவை ஏற்படுத்தாமல், பயன் தருகின்ற சக்தி நிலையாகும். ஸிராஜ் என்பதும் ஒளியையும் பிரகாசத்தையும் தருகின்ற நெருப்பையே குறிக்கின்றது. அழித்தொழிக்கும் நெருப்பு இதற்கு மாற்றமானதாகும். ஏனெனில் அதிலிருந்து பயன் பெறுவதாயினும் அது அழித்து நிலைமாற்றம் செய்தல் என்ற சக்தி நிலையுடாகவே இடம்பெற முடியும்.*

அவனே சூரியனை வெளிச்சமாகவும் (ழியாஉ), சந்திரனை ஒளியாகவும் (நூர்) ஆக்கினான். (யூனுஸ் 10:05)

அவன் (அவ்வானங்களில்) சந்திரனை (பிரதிபலிக்கும்) ஒளியாகவும், சூரியனை வெளிச்ச விளக்காகவும் ஆக்கினான். (நூஹ் 71:16)

அவ்வாறன்று! நிச்சயமாக அவன் ஹுதமா என்னும் நரகில் எறியப்படுவான். ஹுதமா என்றால் என்னவென்று (நபியே!) உமக்குத் தெரியுமா? அல்லாஹ்வின் எரியூட்டப்பட்ட நெருப்பு (அது).
(அல்-ஹுமஸா 104:04-06)

அவ்வாறன்று! நிச்சயமாக அது கடுமையாக எரியும் நெருப்பாகும். அது சிரசின் தோலை (உருக்கிக்) களற்றி விடும். (அல்-மஆரிஜ் 70:15-16)

*ரூஹ் என்பது அல்லாஹ்வின் புறத்திலிருந்து, அவனது ஒளியிலிருந்து வருவதாகும். அது மனிதனிலுள்ள உயர்ந்த அம்சங்களையும் பரிபூரணத் தன்மையையும் நன்மையையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. அல்லாஹ் வுடன் இணைந்ததாகவே அது குறிப்பிடப்படுகிறது.*

பின்னர் அதனை அவன் சீர்படுத்தி, அதன் மீது தனது ரூஹை ஊதினான். (அஸ்-ஸஜ்தா 32:09)

(மனிதனாகிய) அவனை நான் படைத்துச் சீர்படுத்தி, எனது ரூஹிலிருந்து அவனுக்கு ஊதியதும் நீங்கள் (அனைவரும்) அவனுக்கு சிரம் தாழ்த்துங்கள்! (அல்-ஹிஜ்ர் 15:29)

(நபியே!) ரூஹ் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். ரூஹ் என்பது எனது ரட்சகனின் ஏற்பாட்டில் உள்ளதாகும். (அது பற்றி) மிகச் சொற்பமான அறிவே உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என நீர் கூறும். (அல்-இஸ்ராஉ 17:85)

(நபியே!) கூறும்: நம்பிக்கை கொண்டோரை உறுதிப்படுத்துவதற்காகவும், (முற்றிலும் கட்டுப்பட்ட) முஸ்லிம்களுக்கு நேர்வழியாகவும் நற்செய்தியாகவும் அமையும் வகையிலும் இந்த அல்-குர்ஆனை புனித ரூஹ் (ஆகிய ஜிப்ரீல்) உமது ரட்சகனிடமிருந்து சத்தியமாக இறக்கி வைத்தார். (அந்-நஹ்ல் 16:102)

நம்பிக்கைக்குரிய ரூஹ் (ஆகிய ஜிப்ரீல்)தான் இதனை இறக்கி வைத்தார். (அஷ்-ஷுஅறாஉ 26:193)

*ஆக, இப்போது நாம் மூன்று கூறுகளாலான சிருஷ்டியின் முன்னால் நிற்கிறோம் என்பது தெளிவு. அக்கூறுகளாவன:*

*01. ஒளி (அந்-நூர் - மனிதனிலுள்ள ரூஹ் அல்லாஹ்வின் ஒளியிலிருந்து வந்ததாகும்.)*

*02. நெருப்பு (அந்-நார்)*

*03. களிமண் (அத்-தீன்)*

ஒளி (அந்-நூர்) அல்லாஹ்வைச் சேர்ந்தது. மனிதனது நேர்வழிக்கும் நன்மைக்கும் அடிப்படை அதுவே. அதிலிருந்தே மனிதனுக்கு ரூஹ் ஊதப்பட்டது.

நெருப்பு (அந்-நார்) கொழுந்து விட்டெரிந்து அழிக்கும் இயல்பு கொண்டது. அதிலிருந்தே இப்லீஸும் ஜின்களும் படைக்கப்பட்டனர்.

களிமண் (அத்-தீன்). இது உறைந்து இறுகி தாழ்நிலை கொண்டது. இதிலிருந்தே மனித உடலும், பூமியிலுள்ள அனைத்து ஜீவராசிகளும் படைக்கப்பட்டன.

படைத்து வழிகாட்டும் அல்லாஹ் வானங்களினதும் பூமியினதும் ஒளியாக இருக்கிறான். தீய ஷெய்த்தானாகிய இப்லீஸ் அழித்தொழிக்கும் நெருப்பிலிருந்து படைக்கப்பட்டான். மிருகங்களோ ரூஹ் அற்ற வாழ்வு கொண்டவை. ஏனெனில் அவை காய்ந்து இறுகிய கருங்களிமண்ணிலிருந்து படைக்கப்பட்டவை. உயர்ந்த ரூஹின் ஒளியும், தாழ்ந்து இறுகிய களிமண்ணும் இணைகின்ற ஒரே சிருஷ்டி மனிதன் மட்டுமே.

## மனிதன் என்பவன் ஒளியும் களிமண்ணும்:

### நிரந்தர வாழ்வு

மண்ணினால் படைக்கப்பட்ட மனித உடலும் ஏனைய ஜீவராசிகளுமே இங்கு நமது ஆய்வில் முக்கியத்துவம் பெறும் அம்சமாகும். நிலைத்து வாழ்வதற்காகவும், நீடித்த இருப்புக்காகவும் இந்த ஜீவராசிகள் தமக்குள் ஒன்றையொன்று வேட்டையாட வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பதை அவதானிக்கின்றோம். முழுக்க முழுக்க களிமண் சார்ந்த இந்த இயல்பையே இங்கு நாம் ஆய்வுக்கு உட்படுத்துகின்றோம்.

மனிதனை நோக்கும்போது ரூஹ் ஊதப்பட்ட ஒரே சிருஷ்டியாக அவன் உள்ளான். அந்த வகையில், ஒளியுள்ள ரூஹும் அடர்ந்து இறுகிய களிமண் என்ற சடப்பொருளும் சந்திக்கும் இடமாக அவன் மட்டுமே இருக்கிறான். அவ்வாறே பூமியில் வாழும் அனைத்து சிருஷ்டிகளுக்கும் மத்தியில் ஒளிமிகுந்த தெய்வீக சட்ட திட்டங்கள் அருளப்பட்ட ஒரே சிருஷ்டியும் அவன் மட்டுமே. அவனது வாழ்வை நெறிப்படுத்தி நேர்வழி காட்டுவதற்காக இச்சட்ட திட்டங்கள் அருளப்பட்டன. மிருக இயல்பை ஆளுகின்ற காட்டுச் சட்டங்கள் இவற்றுக்கு முற்றிலும் மாற்ற

*மானவையாகும். ஏனெனில், மிருக இனம் வெறும் உயிர் வாழ்வையும் நஃப்ஸையும் மாத்திரம் கொண்டது. அதாவது களி மண்ணாலான உடலையும், சுவாசிக்கும் தன்மை கொண்ட உயிர் வாழ்வையும் கொண்டது. இவ்வாறு மனிதனும் மிருகமும் உயிர் வாழ்தல் என்ற பொதுப் பண்பைக் கொண்டிருப்பதாலேயே நஃப்ஸ் என்ற சொல் இவ்விரு வகைக்கும் பொதுவாக பயன்படுத்தப்படுகின்றது.*

ஒவ்வொரு நஃப்ஸும் மரணத்தை சுவைக்கக் கூடியதே! (அல்-அன்கபூத் 29:57)

*எனினும் மிருகம், ஷெய்த்தான் ஆகிய சிருஷ்டிகளை விட்டு மனிதனை வேறுபடுத்துவது அவனுக்கு வழங்கப்பட்டுள்ள ரூஹ் ஆகும்.*

அவனை நான் படைத்துச் சீர்படுத்தி, எனது ஆன்மாவிலிருந்து அவனில் ஊதியதும் நீங்கள் (அனைவரும்) பணிந்து அவனுக்குச் சிரம் தாழ்த்துங்கள். (அல்-ஹிஜ்ர் 15:29)

*உயிர் வாழ்க்கையில் மிருகம் மனிதனைப் போன்றதே. ஏனெனில் அதுவும் களிமண்ணால்தான் படைக்கப்பட்டது. அதற்கும் சுவாசம் உண்டு. உயிர் வாழ்தல் இருக்கும் வரை அது தொடர்ந்து இருக்கும். இந்த வாழ்வும் சுவாசமும் முடிவுறக் கூடியவை. உடல் மரணித்து அழியக் கூடியது. மிருகத்திற்கு ரூஹோ, பகுத்தறியும் ஆற்றலோ, உள்ளமோ கிடையாது. களிமண் இயல்பும் வனவிலங்குச் சட்டமுமே அதனை ஆளும். அங்கு பலமே சத்தியமானது. ஆனால், மனிதனின் நிலை இதற்கு மாற்றமானது. ஒளி மற்றும் ரூஹின் சட்டங்களால் அவன் ஆளப்படுகின்றான். அவனது உலகத்தில் சத்தியமே பலமானது. இந்த வகையில்தான் மனிதனுக்குள் அடங்கியிருக்கும் மிருகப் பண்பு கொண்ட நஃப்ஸ் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:*

நிச்சயமாக நப்ஸ் தீமை புரிய அதிகம் தூண்டக் கூடியதாக இருக்கிறது. (யூஸுப் 12:53)

*ரூஹும் களிமண்ணும் கலந்த மனித யதார்த்தம் பற்றி அல்-குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது:*

அவனுக்கு நாம் (நன்மை, தீமை) ஆகிய இரு வழிகளையும் காட்டிக் கொடுத்தோம். எனினும், அவன் தடையை (இன்னும்) தாண்டவில்லை. (அல்-பலத் 90:10,11)

நிச்சயமாக நாம் அவனுக்கு (நேரான) வழியைக் காண்பித்தோம். (அதனைப் பின்பற்றி) நமக்கு நன்றி செலுத்துபவரும் உண்டு நிராகரித்து விடுபவரும் உண்டு. (அல்- இன்ஸான் 76:3)

யார் தனது ரட்சகனின் சன்னிதியில் (விசாரணைக்காக) நிற்பதற்கு அஞ்சி, (மோசமான) இச்சையை விட்டும் தனது நஃப்ஸை தடுத்துக் கொள்கிறாரோ அவர் செல்லும் இடம் நிச்சயம் சுவனமே!
(அந்-நாஸிஆத் 79:40,41)

*ஆக, வாழ்தல் என்ற அம்சத்தில் மிருகம் மனிதனுடன் பங்கு கொள்கிறது. ஆனால், ரூஹ் என்ற அம்சத்தில் அது மனிதனிலிருந்து வேறுபடுகிறது. இந்த வகையில்தான், மிருகத்தின் கட்டமைப்பு, இயல்பு, நோக்கம், சட்ட திட்டங்கள் என்பவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்ட கட்டமைப்பும் இயல்பும் நோக்கமும் சட்டதிட்டங்களும் மனிதனுக்கென உருவாக்கப்பட்டன.*

*இந்தப் பின்னணியில் மனிதனை நாம் கவனித்தால், அவனில் ரூஹுடன் தொடர்புடைய பகுத்தறிவு, உள்ளம், உயர்பண்பு என்பனவும், உடல் மற்றும் அதன் பௌதீகத் தேவைகள், அவனை களிமண்ணின் இயல்புக்கும் மிருக நிலைக்கும் இட்டுச்செல்லக்கூடிய இச்சைகள், தீமைகள் என்பனவும் அருகருகே இருப்பதைக் காண முடிகிறது. இங்கு நஃப்ஸ் என்பது மனிதப் பொருளில் இரு கூறுகளைக் கொண்டிருக் கின்றது. ஒளிப்பண்பு கொண்ட ரூஹ் என்ற கூறும், நஃபஸ் என்ற சொல்லிலிருந்து பிறந்த நஃப்ஸ் என்ற கூறுமே அவை இரண்டுமாகும். இங்கு நஃப்ஸ் என்பது உயிர் வாழ்வையும், தேவைகள், இச்சைகள் என்பவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மண்ணாலான உடலையும் குறிக்கிறது. இதன் காரணமாகத்தான், உலக இன்பங்கள் மனிதர்களுக்கு விருப்பத்துக்குரியவையாக அழகுபடுத்திக் காட்டப்பட்டுள்ளன. (ஆல இம்றான் 3:14) என அல்-குர்ஆன் கூறுகிறது. மிருகப் பண்பு கொண்ட இந்த நஃப்ஸை நெறிப்படுத்துவது ரூஹைச் சுமந்த மனிதனது கடமை யாகும்.*

யார் தனது இரட்சகனின் சன்னிதியில் (விசாரணைக்காக) நிற்பதற்கு அஞ்சி, (மோசமான) இச்சையை விட்டும் தனது நஃப்ஸை தடுத்துக் கொள்கிறாரோ அவர் செல்லுமிடம் நிச்சயம் சுவனமே!
(அந்-நாஸிஆத் 79:40,41)

*யதார்த்தத்தில் மனித வாழ்வையும் அதன் இலக்குகளையும் கூர்ந்து கவனிப்போமானால், அவை எப்போதுமே போராட்டத் தன்மை கொண்டனவாய் இருப்பதைக் கண்டுகொள்ள முடியும். உயர்ந்த கொள்கைகள், பெறுமானங்கள் பற்றிய ஆன்மாவின் அபிலாஷைகளுக் கும், தேவைகளும் இச்சைகளும் அழுக்குகளும் கொண்ட களிமண்ணா லான பௌதீக உடலுக்குமிடையிலான போராட்டம் அது. சத்தியம், நீதி, அழகு முதலிய பெறுமானங்கள் மிகைத்து மனிதன் உயர்ந்தவனாக மாறும் வரை இப்போராட்டம் தொடர்ந்து கொண்டேயிருக்கும். இந்தப் போராட்டம் பற்றியும், அதற்குப் பின்னாலுள்ள இலக்குகள், நோக்கங் கள், பெறுமானங்கள், நியமங்கள் என்பவை பற்றியும் அல்லாஹ் தனது அருள்மறையின் பல வசனங்களில் விரிவாகப் பேசுகின்றான்:*

உங்களில் எவர் செயலால் சிறந்தவர் என்று உங்களைச் சோதிப்பதற் காகவே அவன் மரணத்தையும் வாழ்வையும் படைத்தான். அவன் சக்தி மிக்கவன் மிகவும் மன்னிப்பவன். (அல்-முல்க் 67:2)

மனிதா! நிச்சயமாக நீ உன் இரட்சகனைச் சந்திக்கும் வரை மிகுந்த சிரமப்பட்டு உழைக்கிறாய். பின்னர் அவனைச் சந்திக்கிறாய். (அல்-இன்ஷிகாக் 84:6)

நஃப்ஸின் மீதும், அதனைச் சீராக அமைத்து அதன் தீமையையும் நன்மையையும் அதற்குச் சொல்லிக் கொடுத்தவன் மீதும் சத்தியமாக! யார் அந்த நஃப்ஸை தூய்மைப்படுத்திக் கொண்டாரோ அவர் வெற்றி யடைந்து விட்டார். யார் அதனை மாசுபடுத்திக் கொண்டாரோ அவர் தோல்வியடைந்து விட்டார். (அஷ்-ஷம்ஸ் 91:7-10)

நிச்சயமாக நாம் அவனுக்கு (நேரான) வழியைக் காண்பித்தோம். (அதனைப் பின்பற்றி) நமக்கு நன்றி செலுத்துபவரும் உண்டு நிராகரித்து விடுபவரும் உண்டு. நிராகரித்தவர்களுக்கு நிச்சயமாக நாம் சங்கிலி களையும், விலங்குகளையும், எரியும் நெருப்பையும் தயார்படுத்தி வைத்துள்ளோம். நல்லோர்களோ கிண்ணங்களிலிருந்து கஸ்தூரி கலந்த பானத்தை அருந்துவார்கள். (அல்-இன்ஸான் 76:3-5)

அவர்கள் சுவர்க்கத்தில் இருந்து கொண்டு பாவிகள் பற்றி விசாரிப் பார்கள். உங்களை நரகத்தில் நுழையச் செய்தது எது? (என்றும் கேட்பார்கள்). அதற்கவர்கள், நாங்கள் தொழுபவர்களாகவோ, ஏழை களுக்கு உணவளிப்பவர்களாகவோ இருக்கவில்லை. வீணான விடயங்

களில் மூழ்கிக் கிடந்தோருடன் நாமும் மூழ்கிக் கிடந்தோம். மரணம் வரும்வரை மறுமை நாளையும் நாம் நம்பாதிருந்தோம் என்று கூறுவர். (அல்-முத்தஸ்ஸிர் 74:40-47)

விசுவாசம் கொண்டவர்களே! நிச்சயமாக மதுவும், சூதாட்டமும், சிலை வணக்கமும், அம்பெறிந்து குறி சொல்வதும் ஷெய்த்தானின் அருவருக்கத்தக்க செயல்களாகும். எனவே அவற்றிலிருந்து (முற்றாக) விலகிக் கொள்ளுங்கள். அதன் மூலம் நீங்கள் வெற்றியடைவீர்கள். மதுவின் மூலமும் சூதாட்டத்தின் மூலமும் உங்களுக் கிடையில் பகை மையையும் வெறுப்பையும் ஏற்படுத்தி, அல்லாஹ்வின் ஞாபகத்தையும் தொழுகையையும் விட்டு உங்களைத் தடுத்து விடவே ஷெய்த்தான் விரும்புகிறான். எனவே, (இவற்றை விட்டும்) விலகிக் கொள்வீர்களா? (அல்-மாயிதா 5:90,91)

(தொழுகையாளர்களான) அவர்கள் தங்கள் மனைவியரையும் அடிமைப் பெண்களையும் தவிர்ந்த (ஏனையோரை விட்டும்) தங்கள் மர்மஸ்தானங்களைப் பாதுகாத்துக் கொள்வார்கள். ஏனெனில், (இப் பெண்கள் விடயத்தில் மாத்திரம்) அவர்கள் நிந்திக்கப்பட மாட்டார்கள். இதற்கப்பாலும் எவராவது (வேறொன்றை) விரும்புவார்களாயின் அவர்கள் வரம்பு மீறியவர்களே! மேலும், (தொழுகையாளர்களான) அவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதங்களையும், தாம் அளித்த வாக்குறுதிகளையும் பேணிக் கொள்வார்கள். தங்களது சாட்சி யங்களையும் தவறாது உரிய முறையில் நிறைவேற்றுவார்கள். தங்கள் தொழுகைகளையும் பேணி நிறைவேற்றுவார்கள். இத்தகையோரே சுவனத்தில் மிகவும் கண்ணியப்படுத்தப்படுவர்.
(அல்-மஆரிஜ் 70:29-35)

நம்பிக்கை கொண்டோரே! உங்கள் சொத்துகளும் பிள்ளைகளும் அல்லாஹ்வை நினைவுகூர்வதை விட்டும் உங்கள் கவனத்தைத் திருப்ப வேண்டாம். எவராவது இவ்வாறு செய்தால் அவர்கள் நஷ்டமடைந்த வர்களே! (அல்-முனாஃபிகூன் 63:9)

உலக வாழ்க்கை என்பது விளையாட்டும், வேடிக்கையும், அலங்கார மும், பரஸ்பரப் பெருமையும், பொருளையும் சந்ததியையும் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்ற போட்டியும்தான். இது ஒரு மழையின் உதாரணத்தை ஒத்திருக்கிறது. அந்த மழையினால் விளைந்த பயிர்கள் விவசாயிகளைக் கவர்ந்து களிப்பைக் கொடுக்கின்றன. பின்னர் அவை

மஞ்சளித்துக் காய்ந்து, இறுதியில் சருகுகளாகி விடுகின்றன. (உலக வாழ்வும் இவ்வாறானதுதான்.) மறுமையிலோ கடுமையான தண்டனை யும், அல்லாஹ்வின் மன்னிப்பும், திருப்தியும் (அவரவர் நிலைக்கேற்ப) உண்டு. இவ்வுலக வாழ்க்கையானது மயக்கும் இன்பமேயன்றி வேறில்லை. எனவே (மனிதர்களே!) உங்கள் இரட்சகனின் மன்னிப்பை யும் சுவனத்தையும் நோக்கி போட்டியிட்டுச் செல்லுங்கள். அந்தச் சுவனமோ வானம், பூமியின் பரப்பு போன்று விசாலமானது. அல்லாஹ் வையும் அவனது தூதர்களையும் விசுவாசம் கொண்டோருக்காக அது தயார் செய்யப்பட்டுள்ளது. இது அல்லாஹ்வின் அருளாகும். தான் விரும்பியோருக்கே அவன் இதனைக் கொடுக்கிறான். அல்லாஹ் மகத்தான அருளுடையவன். (அல்-ஹதீத் 57:20-21)

பெண்கள், பிள்ளைகள், தங்கம் வெள்ளிக் குவியல்கள், உயர்ந்த ஜாதிக் குதிரைகள், கால் நடைகள், பயிர் நிலங்கள் என்பவற்றை விரும்பு வது மனிதர்களுக்கு அழகாக்கப்பட்டுள்ளது. எனினும், இவை இவ்வுலக வாழ்வின் (அற்ப) இன்பங்களே. அல்லாஹ்விடமே அழகிய தங்குமிடம் உள்ளது. (நபியே! மனிதர்களை நோக்கிக்) கூறும்: இவற்றை விட மிகச் சிறந்ததொன்றை நான் உங்களுக்குக் கூறட்டுமா? அல்லாஹ்வை அஞ்சி நடப்போருக்கு அவனிடத்தில் சுவனங்கள் உண்டு. அவற்றின் கீழால் நீரருவிகள் ஓடிக் கொண்டிருக்கும். அவர்கள் அவற்றில் நிரந்தரமாகத் தங்கியிருப்பர். அங்கு பரிசுத்த மனைவிகளும், அல்லாஹ்வின் திருப்தி யும் (அவர்களுக்கு) உண்டு. அல்லாஹ் (தன்) அடியார்களை உற்றுக் கவனித்தவனாகவே இருக்கிறான். (ஆல இம்றான் 3:14-15)

யார் ஒரு கொலைக்குப் பதிலாக அல்லது பூமியில் குழப்பம் ஏற்படுவதைத் தடுப்பதற்காக அன்றி (அநியாயமாக) இன்னொரு நப்ஃஸைக் கொல்கிறாரோ அவர் மனிதர்கள் அனைவரையும் கொன்றவர் போலாவார். யார் அதனை வாழவைக்கிறாரோ அவர் அனைத்து மனிதர் களையும் வாழவைத்தவர் போலாவார். (அல்-மாயிதா 5:32)

கொலை செய்யக் கூடாது என அல்லாஹ் தடுத்திருக்கும் எந்த நஃப்ஸையும் அவர்கள் நியாயமின்றிக் கொல்ல மாட்டார்கள். விபசார மும் செய்யமாட்டார்கள். எவர் இத்தீய காரியங்களைச் செய்கிறாரோ அவர் அதற்குரிய தண்டனையை அடைவார். (அல்-புர்கான் 25:68)

ஒவ்வொரு நஃப்ஸும் தான் செய்யும் செயலுக்கு தானே பொறுப் பாளி. வலது கையில் ஏடு வழங்கப்பட்டவர்களோ சுவனங்களில்

இருப்பார்கள். உங்களை நரகில் நுழையச் செய்தது எது? என நரகவாசிகள் பற்றி அவர்கள் விசாரிப்பார்கள். அதற்கவர்கள், நாம் தொழுபவர்களாகவோ, ஏழைகளுக்கு உணவளிப்பவர்களாகவோ இருக்கவில்லை. வீணான விடயங்களில் மூழ்கிக் கிடந்தோருடன் நாமும் மூழ்கிக் கிடந்தோம். மரணம் வரும்வரை மறுமை நாளையும் நாம் நம்பாதிருந்தோம் என்று கூறுவர். (அல்-முத்தஸ்ஸிர் 74:38-47)

(நபியே!) மறுமைநாளை நம்பாதிருப்பவனை நீர் கவனித்தீரா? அநாதைகளை விரட்டுபவனும், ஏழைக்கு உணவளிக்கத் தூண்டாதிருப்பவனும் அவன்தான். எனவே, தொழுகையாளர்களுக்குக் கேடுதான்! அவர்கள் தங்கள் தொழுகையில் கவனமின்றி இருப்பார்கள் பிறருக்குக் காண்பிப்பதற்காகவே தொழுவார்கள் அற்பப் பொருளையும் (இரவல் கொடுப்பதைக் கூட) தடுத்துக் கொள்வார்கள். (அல் மாஊன் 107:1-7)

யார் இவ்வுலக வாழ்வையும் அதன் அலங்காரத்தையும் மாத்திரம் விரும்புகிறார்களோ அத்தகையோருக்கு அவர்களது செயல்களின் கூலியை இவ்வுலகிலேயே நிறைவாக நாம் வழங்கி விடுவோம். அவர்களுக்கு அதில் எவ்விதக் குறைவும் ஏற்படாது. எனினும், மறுமையில் அவர்களுக்கு இருப்பதெல்லாம் (நரக) நெருப்பு மாத்திரமே. அவர்கள் செய்த அனைத்தும் அழிந்து விடும். அவர்கள் செய்து கொண்டிருப்பதும் வீணானவைதான். (ஹூத் 11:15-16)

யார் ஸாலிஹான செயல் புரிகிறாரோ அது அவருக்கே உரியதாகும். யார் தீமை புரிகிறாரோ அதுவும் அவருக்கே வந்து சேரும். உமது இரட்சகன் (தன்) அடியார்களுக்கு அநியாயம் இழைக்கக் கூடியவனல்லன். (புஸ்ஸிலத் 41:46)

யார் தூய்மையடைகிறாரோ அவர் தனக்காகவே தூய்மை அடைகிறார். (அனைவரும்) மீள வேண்டியிருப்பது அல்லாஹ்விடமே! (ஃபாத்திர் 35:18)

எனது நஃப்ஸ் தவறுகளிலிருந்து தூய்மையானது என நான் என்னைப் பரிசுத்தப்படுத்திக் கொள்ளவில்லை. ஏனெனில், என் இரட்சகன் அருள் புரிந்தாலேயன்றி, நிச்சயமாக நஃப்ஸ் பாவம் செய்யத் தூண்டக் கூடியதாகவே உள்ளது. நிச்சயமாக என் இரட்சகன் மிகவும் மன்னிப்பவனாகவும் கிருபை மிக்கவனாகவும் இருக்கின்றான். (யூஸுப் 12:53)

இப்படித்தான் மனித வாழ்க்கை என்பது ரூஹ், கொள்கைகள், கருத்தியல்கள், பெறுமானங்கள் என்பவற்றுக்கும், சடவாதம், மனோஇச்சை, சரீர இன்பங்கள் என்பவற்றுக்கும் இடையிலான போராட்டமாக அமைந்திருப்பதாக அல்-குர்ஆன் விளக்கிக் காட்டுகிறது. இந்த இரு முரண் விசைகளும் மனிதன் என்ற சிருஷ்டியில் சந்திக்கின்றன. இதுவே அவனது உலக வாழ்வு. தனித்துவமான இந்தச் சந்திப்பானது ஒன்றில் தூய்மை, சுவனம், நிலையான இன்பம் என்பவற்றில் முற்றுப் பெறுகிறது. அல்லது வீழ்ச்சி, அநியாயம், அசத்தியம், சீர்கேடு, தோல்வி, நஷ்டம், தண்டனை, நரகம், நிரந்தரத் துன்பம் என்பவற்றில் முடிவடைகிறது. நிச்சயமாக நல்லோர் சுவன இன்பத்தில் திளைத்திருப்பர். பாவிகளோ நிச்சயமாக நரகிலிருப்பர். (அல்-இன்ஃபிதார் 82:13-14)

அமைதியடைந்த நஃப்ஸே! திருப்தியடைந்த நிலையிலும், உன் ரட்சகனின் திருப்தியைப் பெற்ற நிலையிலும் அவனிடம் மீண்டு செல். எனது அடியார்களுடன் இணைந்து, என் சுவனத்திலும் நுழைந்து விடு! (அல் ஃபஜ்ர் 89:27-30)

*ஆழ்ந்து கவனிக்கும் ஒருவர், உயர் பண்பு கொண்ட ரூஹுக்கும் சடம், களிமண், இழிவு, இச்சை என்பவற்றுக்கும் இடையிலான இந்தப் போராட்டத்தின் நிழலில் சடவாதப் போராட்டத்தின் பொருளை இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும். வாழ்க்கை வட்டம் என்றால் என்ன என்பதையும், அது பிரதிநிதித்துவம் செய்கின்ற களிமண் தோற்றப்பாடுகளையும், அங்கு நிகழும் போராட்டத்தின் விளைவான அநியாயம், வேட்டையாடல், அத்துமீறல் என்பவற்றையும், அவற்றின் விளைவாக உருவாகும் வனவிலங்குச் சட்டத்தையும் அவரால் புரிந்துகொள்ள முடியும். சத்தியத்தின் மீது பலம் அத்துமீறும் இடமாக இவ்வனவிலங்குச் சட்டம் அமைகின்றது.*

*சட உலகின் தோற்றப்பாடுகளுள் ஒன்று என்ற வகையில் இச்சட்டம் விலங்குகளின் வாழ்விலும் நெறி பிறழ்ந்த மனித வாழ்விலும் வெளிப்படையாகவே தெரிவதை அவரால் அவதானிக்க முடியும். இதற்கும் அப்பால், ஒளி மிகுந்த ரூஹுக்கும், மிருகப்பண்பு கொண்ட சடவாதத்துக்கும் -அதாவது உயர்வுக்கும் வழிகேட்டுக்கும்- இடையில் மனித நஃப்ஸில் நிகழ்கின்ற போராட்டங் களையும் கூட இதன்போது அவரால் நன்கு புரிந்து கொள்ள முடியும். இந்த வழிகேடு பூமியை நோக்கி மனித நஃப்ஸை இழுக்க, ரூஹானது சத்தியத்தையும் நன்மையையும் நோக்கி அதனை உயர்த்த முனைகிறது.*

தரம் குறைந்த இந்த ஸ்தூலத்தின் உள்ளீடானது -ஒரு வகையில்- இஸ்லாம் வற்புறுத்துகின்ற ஸ்தூல மற்றும் கருத்தியல் தூய்மையின் குறியீட்டியல் அர்த்தங்களுக்கு விளக்கம் தருவதாய் அமைந்துள்ளதென லாம். தனிமனிதனது வாழ்விலும், அவனது பல்வேறு செயற்பாடு களிலும், வணக்கங்களிலும் இஸ்லாம் காட்டுகின்ற ஒழுங்குகளை அர்த்தப்படுத்துவதாயும் அது அமைந்துள்ளது.

சுத்தம் பேணல், வுழூ செய்தல், குளித்தல், மறைத்தல், அழகு படுத்தல், திக்ர் செய்தல், சாப்பிடும்போது பிஸ்மில்லாஹ் கூறுதல், பிராணிகளை அறுக்கும்போது தக்பீர் சொல்லுதல், அவசியமற்ற கொலையையும் வேட்டையையும் தவிர்த்தல், ஜீவகாருண்யம், சூழல் பாதுகாப்பு முதலியவை இந்த ஒழுங்குகளில் சிலவாகும். இன்னொரு வகையில், வேட்டையாடும் பண்பையும் அதற்கான ஆயுதங்களான பற்களையும் நகங்களையும் கொண்டிருக்கின்ற தரைவாழ் மிருகங்களை உண்பது வெறுக்கப்பட்டிருப் பது அல்லது தடுக்கப்பட்டிருப்பது ஏன் என்பதை விளக்குவதாயும் இது அமைய முடியும். ஏனெனில் இவற்றைச் சாப்பிடுவதானது மனிதனை மேலும் வேட்டைப்பண்பு கொண்டவனாக மாற்றி, மிருகத்தனமான பலப் பரீட்சைப் போராட்டங்களில் அவனைத் தள்ளிவிடலாம்.

இது வெறுமனே வாழ்க்கைத் தேவையைத் தீர்த்துக் கொள்ளல் என்பதற்கு அப்பாற்பட்ட நிலையாகும். மனிதனோடு பூமியைப் பங்கு போட்டுக் கொண்டு, ஸ்தூல அமைப்பில் அவனை ஒத்திருக்கின்ற வேட்டைப் பண்பு கொண்ட மிருகங்களை மனிதன் உண்ணும்போது அவனது மானிட நடத்தையிலும் இயல்பிலும் கூட அது பாதிப்பேற் படுத்தக் கூடும்.

நீ சாப்பிடும் உணவை எனக்குச் சொல் நீ யார் என்பதை உனக்குச் சொல்கிறேன்! என்ற பழமொழி இக்கருத்தையும் சேர்த்துத்தான் சுட்டுகிறது போலும்! மாமிசப் பட்சிணிகளை உண்பது வேறு பல தீங்குகளுக்கும் காரணமாக அமைகிறது என நவீன விஞ்ஞான ஆய்வுகள் சில குறிப்பிடுவதும் இங்கு கவனிக்கத்தக்கது.

## சடவாதம் என்பது வனவிலங்குச் சட்டமும் அடக்குமுறையும் அநியாயமிழைத்தலும்

மேற்சொன்ன இப்பார்வையே டார்வினின் சமூகவியல் தத்துவம் ஏற்படுத்திய குழப்பத்தை தெளிவுபடுத்தக் கூடியதாய் உள்ளது. டார்வினின் தத்துவம் அதன் யதார்த்தத்தில் சடவாதத்தையும் நாஸ்தி கத்தையும் அடிப்படையாகக் கொண்டதாகும். சிருஷ்டி என்பது தற்செயலானது என்ற மிக மேலோட்டமான -சிறு பிள்ளைத்தனமான எடுகோளின் அடியாக அது பிறந்தது. மனிதனை விலங்காக அதாவது களிமண்ணாக மட்டுமே அது பார்க்கிறது.

மனிதனும் ஏனைய உயிரிகளும் தற்செயலாகத் தோன்றிப் பரிணாமம் அடைந்தன என அது விளக்கமளிக்கிறது. எனவே, தெய்வீக சிருஷ்டியின் ரகசியம், அதன் ஆன்மீகப் பரிமாணம் என்பவற்றுக்கு அத்தத்துவத்தில் எந்த இடமும் வழங்கப்படவில்லை. பூமியின் ஏனைய சிருஷ்டிகளிலி ருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டுகின்ற -பகுத்தறிவு, ரூஹ், உள்ளம், பண்பாடுகள் முதலியவற்றை உள்ளடக்கிய- அவனது ரூஹானி யப் பண்புக்கும் அதில் எந்த இடமும் வழங்கப்படவில்லை. இவ்வுலகில் மனித வாழ்க்கை என்பது ரூஹுக்கும் மண்ணுக்கும் இடையிலான சந்திப்பும், அச்சந்திப் பின் விளைவான ரூஹ்-ஸ்தூலம், நன்மை-தீமை, சத்தியம்-அசத்தியம், ஒளி-இருள் என்பவற்றுக்கிடையிலான போராட்ட மும்தான் என்பதையும் அத்தத்துவம் ஏற்பதில்லை.

மனிதன், வாழ்வு, பிரபஞ்சம் என்பவை பற்றிய திரிபுற்ற பார்வை கொண்ட கிறிஸ்தவ மதத்தை -சில நியாயமான காரணங்களால்- நிராகரித்து விட்ட நவீன மேற்கு சிந்தனையின் அத்திவாரமாக இருப்பது டார்வினின் இச்சமூகவியல் தத்துவமே. சடப்பொருள், வலிமை, வெற்றிகொள்ளல், அடக்கியாளல், வேட்டையாடல் முதலியவற்றைப் பூஜிக்கும் இத்தத்துவம் மனிதனிலுள்ள ரூஹைப் புறக்கணிப்பது மட்டுமன்றி, சத்தியம், நீதி, ஒளி, மனிதப் பொறுப்புணர்வு முதலிய அம்சங்களையும் நிராகரிக்கிறது.

வேட்டையாடும் தன்மையும் மிருக குணமும் களிமண் இயல்பும் மாத்திரம் கொண்டவனாக மனிதனை அது சித்தரிக்கிறது. அங்கு சத்தியம் என்பது பலமும் வலிமையுமே. வலிமையுள்ளதே நிலைக்கும் என்பது

அதன் அடிப்படைச் சித்தாந்தம். மேற்கத்தியரிடமும் அவர்களை கண் மூடிப் பின்பற்றியோரிடமும் இச்சித்தாந்தம் பாரிய இடத்தைப் பிடித்துக் கொண்டது. இதன் விளைவாகவும், பிற சமூகங்கள் தொடர்பான அவர்களது இனவெறி சார்ந்த ஆதிபத்திய மற்றும் காலனிய அணுகு முறையின் விளைவாகவும் மனிதாபிமானம், பரஸ்பர அன்பு, கூட்டுறவு, மானிட விழுமியம் முதலிய பெறுமானங்கள் பல்வேறு வடிவங்களில் சிதறிப் போய், அவற்றின் இடத்தை மிருகத்தனமும் கடின சித்தமும் வன்முறையும் பிடித்துக் கொண்டன.

இவற்றோடு மிக மோசமான இனவெறியும் அத்துமீறலும் கொண்ட காலனித்துவமும் சேர்ந்து கொண்டதால் விளைந்த மேற்கத்தியரின் பல்வேறு அநியாயங்களையும் அடக்கு முறைகளையும் உலகில் வாழ்ந்த பல சமுதாயங்கள் அனுபவிக்க வேண்டி நேர்ந்தது. நவீன ஐரோப்பிய அரசியலில் தேசியவாத சிந்தனை எவ்வாறு தோன்றியது என்பதையும் இச்சித்தாந்தம் எமக்கு விளக்குகிறது. கடின சித்தமும் இனவெறியும் இத்தேசியவாதத்தை (இரு அமெரிக்காக்கள், ஆபிரிக்கா, அவுஸ்திரே லியா, தூர கிழக்கு நாடுகள் முதலியவற்றில் நிகழ்ந்தது போன்றும், இன்று மேற்கத்திய யூதர்கள் பலஸ்தீன் பூமியில் நிகழ்த்திக் கொண்டிருப்பது போன்றும்) காட்டுமிராண்டித்தனமான அழிப்பு நடவடிக்கைகளுக்கு எவ்வாறு இட்டுச் சென்றன என்பதற்கும் அது விளக்கம் தருகிறது.

வனவிலங்குச் சட்டம் என்பது களி மண்ணின் சட்டம் வேட்டை யாடும் சட்டம் அநியாயத்தின் சட்டம் இனவெறியின் சட்டம் அத்துமீற லின் சட்டம். ஆனால் ஒளியின் சட்டமோ -இஸ்லாத்தின் தூதும், பல்வேறு மதங்களின் திரிபுக்குட்படாத எச்சங்களும் வற்புறுத்துவது போன்று- சத்தியத்தின் சட்டம் நீதியின் சட்டம் பொறுப்புணர்வின் சட்டம் சகோதரத்துவம், அன்பு, மனிதக் கூட்டுறவு என்பவற்றின் சட்டம் இறையச்சம், உயிர்களைப் பேணல் என்பவற்றின் சட்டம் அமானிதங் களை நிறைவேற்றல், அநியாயம் இழைக்கப்பட்டவருக்கு நீதி வழங்கு தல், வீண் விரயம் செய்யாமை, ஊழலின்மை என்பவற்றின் சட்டம்.

சுயம், இனம், சமூகம் என்ற கருத்தியல்கள் அனைத்தையும் விட மனிதம் என்பதே அங்கு முக்கிய இடம்பெறுகிறது. ''வலிமையே சத்தியமானது'' என்று கூறும் காட்டுச் சட்டத்துக்கு மாற்றாக, ''சத்தியமே பலமானது'' என அது வற்புறுத்துகிறது. வனவிலங்குச் சட்டத்திலோ

சமூகங்களுக்கு மத்தியிலான உறவுகள் விடயத்தில் உண்மை, நீதி முதலிய சொல்லாடல்களுக்கே இடமில்லை. உரிமைகள் அங்கு வசதிக்கேற்ப ஒழுங்குபடுத்தப்படுகின்றன. அல்லது மிகச் சரியாகக் கூறினால், தேசிய நலன்கள், அரசியல் நிர்ப்பந்தங்கள் என்ற பெயரில் பலப்பிரயோகத்தை அடியாகக் கொண்டெழும் வெற்றிநிலை மற்றும் அரசியல் இழுபறித் தீர்வுகள் என்பவற்றின் அடிப்படையில் நலன்கள் அங்கு பகிர்ந்தளிக்கப் படுகின்றன.

காலனித்துவத்தின் மூலமாக பல்வேறு சமூகங்களுக்கு (குறிப்பாக ஆபிரிக்காவிலும் அமெரிக்காவிலும்) நிகழ்ந்தவையும், அதன் ஸியோனிஸ காட்டுமிராண்டிக் கரங்களால் இன்று பலஸ்தீன் மக்களுக்கு நிகழ்ந்து கொண்டிருப்பவையும் -இத்தனை பொய்களும் அரசியல் இருட்டடிப்புகளும் பிரசாரங்களும் உளவியல் யுத்தங்களும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள நிலையிலும்- மேற்கத்திய சடவாத காட்டுச் சட்டத்துக் கும், அநியாயம், அத்துமீறல், பக்கச் சார்பு, ஓரவஞ்சனை என்பவற்றின் அடியாகத் தோன்றிய அதன் பெறுமானங்களுக்குமான பிரத்தியட்ச சாட்சி யாய் நிற்கின்றன. (கடந்த அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலப்பிரி வில் பலஸ்தீன் மக்களின் பெரும்பகுதியினர் கொல்லப்பட்டும் விரட்டப் பட்டும் உள்ளனர். அவர்களது நிலங்களில் பெரும்பாலான பகுதி பறிக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் விட்டன. இவ்வளவும் மேற்கத்திய காலனியத்தின் ஆதரவு, ஆயுதம், அரசியல் நிலைப்பாடுகள் என்பவற்றின் உதவியோடுதான் அரங்கேறின.)

சடவாத மேற்குலகு தனது இப்பெறுமானங்கள் மூலமாகவும், தான் கண்டுபிடித்த பேரழிவு தரும் போராயுதங்கள் மூலமாகவும் இன்றுவரை மனித சமூகத்தின் மீது எண்ணற்ற அநியாயங்களையும் கேடுகளையும் யுத்தங்களையும் திணித்திருக்கிறது. ஆனால், தெய்வீகத் தூதுகள் சுமந்து வந்த ஒளிமிகுந்த ஷரீஆவின் பெறுமானங்களும் அடிப்படைகளும் இதற்கு முற்றிலும் மாற்றமானவை சத்தியம், நீதி, அன்பு, கூட்டுறவு என்பவற்றின் அடியானவை.

மேற்குறித்த அவதானங்களிலிருந்து நாம் பெறும் பாடம் யாதெனில், மனிதன் என்பவன் ரூஹ் என்ற உயர்நிலையும், இச்சைகள் என்ற தாழ் நிலையும் இணையும் இடமாக இருக்கிறான் என்பதாகும். ரூஹ் அவனை சத்தியத்தையும் நீதியையும் நோக்கி இழுக்க, களிமண் பண்பு

இச்சைகளையும் அநியாயத்தையும் அத்துமீறலையும் நோக்கித் தள்ளு கின்றது. இந்த இரு துருவங்களும் தத்தமக்கென தனியான சட்டதிட்டங் களைக் கொண்டவை. அந்த வகையில், ரூஹினதும் தெய்வீக ஒளியின தும் சட்டம் ''சத்தியமே வலிமையானது'' என்று கூறி நன்மைக்கும் தீமைக்கும் தூண்டுகின்றது. ஆனால் களிமண்ணின் சட்டமோ மிருகத் தனம் கொண்டது அத்துமீறும் பண்புடையது. அது ''பலமே சத்திய மானது'' என்கிறது. சடவாத வனவிலங்குச் சட்டத்தினால் ஆளப்படும் மனிதன் பலப்பிரயோகம், அத்துமீறல், அநியாயம் முதலிய இயல்புகள் கொண்டவனாக இருப்பான்.

### பலமே சத்தியமானது:
### சடவாதமும் இனவெறியும் காலனியப் பண்பும் கொண்ட மேற்கின் சட்டம்

இவ்வாறுதான் மேற்குலகு ஒளியின் ஷரீஆவிலிருந்து பிறழ்ந்து, அந்த ஷரீஆவை விகாரப்படுத்தி, நிராகரித்து, புவி வாழ்வை மாத்திரம் பற்றிப் பிடித்து வழிகெட்டது ரூஹையும் அதன் பெறுமானங்களையும் இலட்சியங்களையும் புறந்தள்ளி விட்டு, இழிந்த மிருகப் பண்பை மாத்திரம் அணிந்து கொண்டது ஜாஹிலிய்ய இருளை நோக்கி மீண்டும் சென்றது. வலிமையே சத்தியமானது என நம்புகின்ற, மிருகப்பண்பும் அத்துமீறலும் இனவெறியும் ஆக்கிரமிப்பு இயல்பும் கொண்ட வன விலங்குச் சட்டமாக அதன் சட்டம் மாறியது. இம்மிருகப் பெறுமானங் களின் பின்னணியில், பண்பாடுகளும் நடத்தைகளும் சரிந்து வீழ்ந்தன. ரூஹினதும், முன்னைய தெய்வீகச் சட்டங்களினதும் எச்ச சொச்சங்கள் சில மாத்திரமே அங்கே எஞ்சியிருந்தன.

பழைய கிறிஸ்தவ மதத்திலிருந்து அனந்தரமாகப் பெற்றிருந்த சில வழக்கங்களும் சம்பிரதாயங்களும், மத்திய காலப்பிரிவில் இஸ்லாமிய சமூகங்களிடமிருந்தும் நாகரிகத்திடமிருந்தும் கற்றுக் கொண்ட சில பண்பாடுகளுமே எஞ்சி நின்றன. வன்முறையும், இனவெறியும், மானக் கேடான செயல்களும் எங்கும் பரவின. இதனால், குடும்பக் கட்டமைப் பின் பிரதான அடிப்படைகள் அனைத்தும் சரிவுற்றன. பிள்ளைப்பேற்றுக் கும் அன்புக்கும் பாசத்துக்கும் உரிய இடமாக இருக்க வேண்டிய அந்தக் குடும்பம், உமிழ்நீர் வடிய அலையும் இச்சைக்கும் தறிகெட்ட காம

விளையாட்டுக்கும் உரிய இடமாக மாறியது. அதன் பொறுப்புகள் தந்தையர் வெருண்டோடும் சுமைகளாகின. இதனால் கடமைகளும் உரிமைகளும் செயலிழந்தன தாய்மாரின் கஷ்டமும் பிள்ளைகளின் துன்பமும் கடுமையாயின.

சர்வதேச ரீதியில் நோக்கினால், மேற்கு சமூகம் ஏனைய சமூகங்க ளுடனான தனது அணுகு முறைகளில் சத்தியம், நீதி என்பவற்றுக்கு எந்தப் பெறுமானமும் கொடுக்காமல் நடந்து கொண்டது. பலப்பிர யோகத்துக்கு மட்டுமே அங்கு மதிப்பிருந்தது. அந்தப் பலம் பல தவறுகள் மூலமும் அசிங்கமான இருட்டடிப்புகள் மூலமும் யதார்த்த மானதாக சிருஷ்டிக்கப்பட்டது. இவையனைத்தும் பலத்தின் அதிகாரத் தைக் கொண்டு நிகழ்ந்தனவே தவிர, சத்தியத்தின் பலத்தைக் கொண்டல்ல. வலிமையின் தர்க்கம் சிருஷ்டிக்கின்ற அரசியல் தேவைகள், நடுநிலைத் தீர்வுகள், யதார்த்தம் முதலிய சொல்லாடல்களின் பெயரால் இவை நியாயப்படுத்தப்பட்டன. ஏனெனில், அநியாயமிழைத்தல் என்பது மேற்கைப் பொறுத்தவரை ஓர் அரசியல் சாணக்கியமாகும். ஒழுக்க வீழ்ச்சியும், பாலியல் சீர்கேடும் அங்கு முன்னேற்றம் என்றும் நாகரிகம் என்றும் அழைக்கப்படுகின்றன.

சத்தியம், நீதி என்பவற்றுக்கு அதன் சித்தாந்தத்திலும் சிந்தனையிலும் எந்த அந்தஸ்தும் கிடையாது. வனவிலங் குச் சட்டத்தின் ஆதாரமும் இலக்குமாக அமைபவை பலம், தேசிய நலன்கள், தனிப்பட்ட பேராசை கள் என்பனவே. இவ்வாறான காட்டு மிராண்டித்தனம் கொண்ட அறிவிலிகளை அல்லாஹ் தனது அருள் மறையில் காட்டுச் சட்டத்தைப் பின்பற்றுவோராக வர்ணிக்கின்றான். ஆசிய, ஆபிரிக்க, வட-தென் அமெரிக்க சமூகங்களுக்கெதிராக ஐரோப்பிய சமூகங்கள் மேற்கொண்ட மனிதாபிமானமற்ற காலனித்துவ நட வடிக்கைகளில் இவ்வனவிலங்குச் சட்டமே அரங்கேறியது.

இன்றுவரை இந்தச் சமூகங்களுக்கெதிராக நாம் காணுகின்ற மேற்குல கின் கொள்கைகளும் செயற்பாடுகளும் இதனையே பிரதிபலிக்கின்றன. அதிலும் குறிப்பாக, ஸியோனிஸ, கிறிஸ்தவ மேற்கின் உதவியோடும் பின்புலத்தோடும் பலஸ்தீன் சமூகத்துக்கெதிராக -அதனை இனச்சுத்தி கரிப்பு செய்யும் நோக்குடன்- இனவெறி கொண்ட பாஸிஸ ஸியோனிஸ யூதர்கள் கடந்த முக்கால் நூற்றாண்டு காலமாக மேற்கொண்டு வரும்

*மிருகத்தனமான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் இதற்கு மிகச் சிறந்த உதாரணமாகும். லட்சக்கணக்கான பலஸ்தீனர்களை அவர்கள் கொன்றொழித்ததோடு மில்லியன் கணக்கானோரை விரட்டியும் விட்டனர்.*

*பலஸ்தீனின் ஐந்தில் நான்கு பங்கு நிலப்பரப்பை ஆக்கிரமித்து, எஞ்சிய பகுதியையும் அதில் வாழும் மக்களையும் இன்றுவரை அவர்கள் துவம்சம் செய்து கொண்டிருக்கின்றனர். பல்வேறு கொலைக் கருவிகள் மூலம் பலஸ்தீனர்களின் வாழ்வு இன்றுவரை அழிக்கப்பட்டு வருகிறது. வீடுகளையும் நிலங்களையும் விட்டுப் புலம்பெயர அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். மனிதப் பெறுமானங்களோ சர்வதேச உடன்படிக்கைகளோ சாசனங்களோ அடிப்படை மனித உரிமைகளோ அங்கு சிறிதளவும் மதிக்கப்படுவதில்லை.*

*இச்சொல்லாடல்கள் அனைத்தும் இன்று மேற்கத்திய ஸியோனிஸ காலனித்துவ அரசியல் அபத்தங்களைக் குறிக்கும் பிரயோகங்களாகவும் கருவிகளாகவுமே மாறியுள்ளன. இனவெறி கொண்ட மேற்கையும், அதன் ஸியோனிஸக் கருவியையும், அந்நாடுகளில் வாழ்வோர் மற்றும் அவர்களது நியாயமற்ற-காட்டுமிராண்டித்தனமான-சுரண்டற்பண்பு கொண்ட-ஆக்கிரமிப்புத் தனமான நலன்களையும் சார்ந்த அம்சங்களில் மாத்திரமே இச்சொற்பிரயோகங்கள் அவற்றுக்குரிய அந்தஸ்தில் வைத்து மதிக்கப்படுகின்றன. தூது இறக்கப்பட்ட காலத்தில் இக்காட்டுச் சட்டத்தைப் பின்பற்றி வாழ்ந்த அறிவிலிகளையும், அதற்குப் பிற்பட்ட காலத்தில் அவர்கள் வழியில் சென்றோரையும் அல்-தவ்பா அத்தியாயத்தில் அல்லாஹ் பின்வருமாறு வர்ணிக்கின்றான்:*

(மோசடிக்கார இணை வைப்பாளர்களுக்கு அல்லாஹ்விடமும் அவனது தூதரிடமும்) எப்படி (ஒப்பந்தம் இருக்க முடியும்)? அவர்கள் உங்களை வெற்றிகொண்டு விட்டால் எந்த உறவையும் உடன்படிக்கையையும் பொருட்படுத்துவதில்லையே! அவர்கள் தங்கள் நாவுகளால் உங்களை திருப்திப்படுத்துகின்றனர். ஆனால் அவர்களது உள்ளங்களோ (ஒப்பந்தத்தை நிறைவேற்ற) மறுத்து (உங்களிலிருந்து விலகி) நிற்கின்றன. அவர்களில் பெரும்பாலானோர் (சத்தியத்தை விட்டு விலகிய) பாவிகளாகவே உள்ளனர். (அல்-தவ்பா 9:8)

*இவ்வாறிருந்த போதிலும், இம்மதிப்பீடானது நவீனகால மேற்கு சமூகத்தின் பொதுவான கலாசாரம், சிந்தனை, நாகரிகம், செல்நெறி*

என்பவை பற்றிய மதிப்பீடு மட்டுமே என்பது மனங்கொள்ள வேண்டிய அம்சமாகும். அந்த மேற்கு தனது அநியாயங்களை நியாயப்படுத்தக் கூடிய வகையிலான கொள்கைகளையும், காலனித்துவ அணுகுமுறை களையும் தனக்கென வரைந்து கொள்வதோடு, அவற்றைத் தனது தேவைக்கும் வசதிக்குமேற்ப எவ்வித வெட்கமுமின்றி புரட்டியும் கொள்கின்றது. ஆனால், இதற்கு வெளியே வேறுபட்ட செல்நெறிகள் கொண்ட சில தனிமனிதர்களும் குழுமங்களும் அங்கு காணப்படுவதை மறுப்பதற்கில்லை.

அந்த மனிதர்கள், குழுமங்கள் மீதான மதிப்பீடாக இது ஒரு போதும் அமையாது. அத்தகையோரது நிலைப்பாடுகள் தமது சமூகத்தில் பொதுவாகக் காணப்படும் ஸியோனிஸ -காலனியப் போக்குடன் முழுமையாகவோ பகுதியளவிலோ முரண்பட முடியும். எனினும் -கவலைக்குரிய வகையில்- அந்நிலைப்பாடுகள் மேற்குலகின் நிறுவனங் களிலோ, அவற்றின் பொதுப்போக்கிலோ, கொள்கைகளிலோ மாற்றம் ஏற்படுத்தக் கூடியளவு இன்றுவரை பாதிப்புச் செலுத்தவில்லை என்றே கூறல் வேண்டும்.

இருந்த போதிலும், அந்த மனிதா்களில் சிலரும் சில குழுக்களும் தம்முள்ளிருக்கும் ஒளியினதும் ரூஹினதும் பெறுமானங்கள் சிலதை இன்னும் பற்றிப் பிடித்திருக்கின்றனர். எதிர்காலத்தில் -அல்லாஹ்வின் உதவியால்- அவர்கள் தங்கள் சமூகங்களது சீர்திருத்தத்துக்கும் நேர்வழிக்கு மான விதைகளாக அமைய முடியும். அவர்களது தேசங்களின் நலனுக் காகவும், மனித இனத்தின் பொதுவான நலனுக்காகவும் அவர்களோடு ஒத்துழைப்பதும், அவர்களை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்வ தும் நமது கடமையாகும்.

நவீன மேற்கத்திய மனப்பாங்கும், பலவீனமான சமூகங்கள் மீது அடக்குமுறையைப் பிரயோகித்து, தனது சொந்த நலன்களுக்காக ஒவ்வொன்றையும் வெவ்வேறு தராசு கொண்டு நிறுக்கும் அதன் சுயநலம் மிக்க கொள்கைகளும் மேலோட்டமாகப் புரிந்து கொள்ளப்பட முடி யாதவை. அவ்வாறே சக்தி, பலப்பிரயோகம், பிறரை வேட்டையாடல் என்பவற்றிலிருந்து ஆரம்பிக்கும் மிருகத்தனம் மிக்க இனவெறி ஒத்து ழைப்பின் மற்றொரு முகமான தேசியவாத சிந்தனை (Nationalism) அங்கு எவ்வாறு தோன்றி வளர்ந்தது என்பதும் புரிந்து கொள்ளப்பட

முடியாதது. அதிலும் மேற்கின் குறிப்பான இக்காலகட்ட வரலாற்றில் அதன் பிரதான கோட்பாட்டு அடிப்படைகளுள் ஒன்றாக இத்தேசியவாத சிந்தனை ஏன் மாறியது என்பதும் மேலோட்டமான பார்வையில் புரிந்து கொள்ளப்பட முடியாதது.

அதேபோன்று, நவீன உலக ''வேட்டையாடல்'' பரிபாஷையில் ''தேசிய நலன்கள்'' என்று குறிப்பிடப்படுகின்ற கொள்கைகளை கொள்ளையிடலுக்கும் இலாபமீட்டலுக்கும் பின்னால் செல்ல வைக்கின்ற அதிகார அரசியலும் (Power politics), அடக்கு முறைக் காலனிய அதிகாரப் பண்பும் அங்கு எவ்வாறு இடம்பிடித்தன என்பதும் கூட எடுத்த மாத்திரத்தில் புரிந்து கொள்ளப்பட முடியாதவை. ஆயுதங் களைக் குவித்தல், அவற்றைப் பதுக்கி வைத்திருத்தல், பேரழிவு ஆயுதங் களைத் தயாரித்தல், நியாயமற்ற அரசியல் கொள்கைகளையும் நலன் களையும் உலக சமுதாயங்கள் மீது திணித்து அவற்றின் வளர்ச்சியைத் தடுப்பது மட்டுமன்றி அவற்றுள் சிலவற்றை அழித்தொழித்தல், சிலவற்றை விரட்டியடித்தல், அவற்றையும் அவற்றின் வளங்களையும் கபளீகரம் செய்தல், பொருளாதார மற்றும் கலாசார ரீதியாக அவை சுதந்திரமடைவதைத் தடுத்தல் முதலிய அக்கிரமங்களில் மேற்குலகு ஏன் பைத்தியக்காரத்தனமாக ஈடுபட்டு வருகின்றது என்பதும் இலகுவில் புரிந்துகொள்ளப்பட முடியாததாகும்.

இவையனைத்தையும் புரிந்துகொள்ள வேண்டுமாயின், மேற்குலகு தனது தெய்வீக ஒளிச் சட்டங்களை விட்டு -அவை திரிக்கப்பட்டவை யாயினும்- விலகி விட்டது என்ற உண்மையைப் புரிந்து கொள்வது மிக அவசியமாகும். அச்சட்டங்கள் திரிக்கப்படாத நிலையில், ''சத்தியமே வலிமை மிக்கது'' என்று கூறின நலன்களையும் இலாபங்களையும் கொள்கைகளுக்குப் பின்னால் செல்ல வைத்தன. இது வேட்டையாடும் பண்பு கொண்ட வனவிலங்குச் சட்டத்துக்கு முற்றிலும் எதிரான நிலையாகும். ஏனெனில், வனவிலங்குச் சட்டம் ''பலமே வலிமையா னது'' என்கிறது நலன்களுக்கும் இலாபங் களுக்கும் பின்னால் கொள்கையைச் செல்ல வைக்கிறது. இதன் மூலம் களிமண்ணின் இழிகுணமும் இயல்புகளும் ஒளியினதும் ரூஹினதும் உயர்ந்த அபி லாஷைகளை வென்றுவிடும் நிலை தோன்றுகிறது.

மேற்கத்தியரின் சிந்தனையிலும் நடத்தையிலும், அவ்வாறே முஸ்லிம் களது சிந்தனையிலும் நடத்தையிலும் உள்ள புரிந்துகொள்ளக் கடினமான

*அம்சங்களை நாம் புரிந்துகொள்ள வேண்டுமாயின், அந்த ஒவ்வொரு சாராரும் பின்பற்றுகின்ற ஷரீஆவையும், அவர்களது நம்பிக்கை மற்றும் கொள்கைசார் நிலைப்பாடுகளையும் புரிந்து வைத்திருப்பது அவசிய மாகும்.*

*அந்தவகையில் மேற்குலகு சடவாதத்திலும் அதன் பேராசைகளிலும் மூழ்கி, அவற்றை அடைவதற்காக நாவில் உமிழ்நீர் வடிய ஏன் அலை கிறது என்பதையும், எல்லையற்ற நுகர்வுப் பண்பு கொண்டதாக அது இருப்பது ஏன் என்பதையும் கிறிஸ்தவ மதத்தைப் பகைப்புலமாகக் கொண்டு நாம் புரிந்துகொள்ள முடியாது. மாற்றமாக, மிருகப் பண்பு கொண்ட களிமண்ணின் நிலைக்களனில் நின்றே அது புரிந்து கொள்ளப் பட முடியும்.*

*கிறிஸ்தவ மதத்தின் அடிப்படைத் தூதிலும் -அதற்கு முன்னர் யூத மதத்திலும்- ஏற்பட்ட திரிபே மேற்குலகு தனது ஆன்மீகத்திலிருந்து விலகி, காட்டுச்சட்டத்தையும் மிருகத்தின் இழிந்த இயல்பையும் பின்பற்றிச் சென்றதற்கு ஓரளவு காரணமாக அமைந்ததெனலாம். இச்சட்டத்தின் படி, சடப்பொருளும் அதனை அடிப்படையாகக் கொண்ட வாழ்வுமே மிருக இருப்பின் ஏக இலட்சியமாக இருக்கும். அதற்குப் பின்னால் வேறு இலட்சியம் எதுவும் கிடையாது. அந்த வகையிலேயே மேற்கில் ஒளியின் சட்டங்களும் பண்பாடுகளும் சிதைவுற்று அஸ்தமித் தன. பெறுமானங்கள் சரிந்து, மானக்கேடுகள் பரவி, இச்சைகளின் நெருப்பு கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது.*

*சடவாதப் பண்பு கொண்ட மிருக வாழ்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதே அதன் ஒரே இலட்சியமாகவும் மாறியது. இவ்வாறு மேற்குலகு தெய்வீக வழிகாட்டல் களிலிருந்து விலகி மனிதனை மிருகமாகப் பார்க்கும் நிலை ஏற்பட்டு விட்ட பிறகு, சடப்பொருளும் வாழ்வியல் தேவைகளும் மேற்கு மனிதனின் இருப்புக்கான ஒரே இலட்சியமாக மாறிவிடுவது இயல்பான விடயமே. இந்தவகையில் அவர்கள் சென்ற டைந்திருக்கும் நிலையையும் அவர்களது இயல்புகளையும் இலட்சியங் களையும் இறுதி முடிவையும் அல்-குர்ஆன் பின்வருமாறு விவரிக்கிறது:*

நிராகரித்து விட்டவர்கள் கால்நடைகள் உண்பது போன்று உண்டு இன்பம் அனுவித்துக் கொண்டிருக்கிறார்கள். (நரக) நெருப்பே அவர்கள் இறுதியில் செல்லுமிடமாகும். (முஹம்மத் 47:12)

இவர்களே (சரியான பாதையை மறந்து) அசிரத்தையாக இருப்பவர்கள். (அல் அஃராஃப் 7:179)

## ஈவிரக்கமற்ற காலனித்துவமும் பாஸிஸமும் ஸியோனிஸமும்:

### ஷெய்த்தானும் மிருகமும் இணைந்ததன் விளைவு

*நெருப்பும் களிமண்ணும் அல்லது ஷெய்த்தானும் மிருகமும் மனிதனில் சந்தித்துக் கொள்ளும்போது நிலைமை இன்னும் மோசமடைகிறது அனர்த்தம் மேலும் அதிகரிக்கிறது தீமையும் சீர்கேடும் மிகக் கோரமான ஸ்தூல வடிவத்தைப் பெறுகின்றன வீழ்ச்சியும் அநியாயமும் அத்துமீறலும் பாரியளவில் இடம்பெறத் தொடங்குகின்றன. எந்தளவுக்கெனில், இப்லீஸுக்குப் பணிவிடை செய்வதெற்கென்றே தம்மை அர்ப்பணித்துக் கொண்ட சில மோசமான ஆத்மாக்கள் (நுஃபுஸ்) இழைக்கின்ற தீமைகளையும் அசிங்கங்களையும் நேர்மையான ஆத்மாக்களால் (நுஃபுஸ்) கற்பனை கூட செய்து பார்க்க முடியாதிருக்கும். அப்பாவிகள் மீதும் பலவீனர்கள் மீதும் அவ்வளவு தூரம் அவர்கள் வன்முறையும் கொடுமையும் அநியாயமும் அட்டூழியமும் புரிவார்கள்.*

*சில தனிமனிதர்களிலும் சமூகங்களிலும் நெருப்புக்கும் களிமண்ணுக்குமிடையில் அல்லது ஷெய்த்தானுக்கும் மிருகத்துக்குமிடையில் நிகழ்கின்ற இச்சந்திப்பானது, சமகால உலகிலும் பழைய வரலாற்றிலும் நீரோன், ஜங்கீஸ்கான், ஈவோன், ஹிட்லர், ஸ்டாலின் போன்ற கொடிய ஆளுமைகளும், ரோம், மங்கோலியா, மத்தியகால ஸ்பெயின் போன்ற அரசுகளும், ஆசிய-ஆபிரிக்க-அமெரிக்கக் கண்டங்களில் ஐரோப்பியக் காலனித்துவமும் தோன்றிய பின்னணியை விளக்கப் போதுமாகவுள்ளது. இந்தத் தனிமனிதர்களாலும் அரசுகளாலும் பல சமூகங்களும் நாகரிகங்களும் அநியாயமாக அழிக்கப்பட்டன. சில சமூகங்கள் மொத்தமாகவே இனச் சுத்திகரிப்பு செய்யப்பட்டன.*

*ஹிட்லர், முசோலினி, ஸ்டாலின், ட்ரோமன் போன்றோரது இத்தகைய கொடுமைகள் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் இன்று வரை நினைவு படுத்தப்படுகின்றன. இவை அனைத்தை விடவும் கசப்பான வகையில் மிகுந்த கவலையோடு இன்று வரை நாம் பார்த்துக்*

*கொண்டிருப்பதும் கேட்டுக்கொண்டிருப்பதும் பலஸ்தீன் மக்களுக்கு நிகழ்ந்து கொண்டிருக்கும் கொடுமையாகும். மேற்கின் ஆயுதம், பணம், ஆதரவு, பாதுகாப்பு என்பவற்றைப் பெற்றுக் கொண்டு மேற்குலக ஸியோனிஸ்டுகளும் ஆக்கிரமிப்பாளர்களும் பலஸ்தீன் மண்ணை அபகரித்தும், மக்களைக் கொன்றும், விரட்டியடித்தும் இழைத்து வருகின்ற கொடுமைகளையும் அடக்கு முறையையும் இன்று வரை உலகம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது.*

*அழிக்கும் இயல்பு கொண்ட நெருப்புக்கும் இழிந்த பண்பு கொண்ட களிமண்ணுக்கும் இடையிலான அல்லது ஷெய்த்தானுக்கும் மிருகத்துக்கும் இடையிலான இந்த இணைவே போர்த் தளவாடங்களையும் பேரழிவு தரும் ஆயுதங்களையும் கண்டுபிடிப்பதிலும், அவற்றைச் சேர்த்துக் குவித்து வைத்து வர்த்தகம் செய்வதிலும் நவீன சடவாத நாகரிகம் காட்டுகின்ற அதீத ஆர்வத்தை விளக்குவதற்கும் போதுமானதாக உள்ளது. அநியாயம் இழைக்கப்பட்டோருக்கும், நீதியையும் சுதந்திரத்தையும் வேண்டுவோருக்கும், சுரண்டல், அடக்குமுறை, காலனித்துவம் என்பவற்றிலிருந்து விடுபடுமாறு அழைப்பு விடுப்போருக்கும் எதிராகக் கூட இவ்வாயுதங்கள் ஈவிரக்கமின்றிப் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.*

(நபியே! பல்அம் இப்னு பாஊறா என்ற பனூ இஸ்ர வேலைச் சேர்ந்த மதகுரு) ஒருவரது செய்தியை அவர்களுக்கு ஓதிக் காண்பியும். அவருக்கு நமது அத்தாட்சிகள் பற்றிய அறிவை வழங்கியிருந்தோம். எனினும் அவர் அவற்றை விட்டு விலகிவிட்டார். எனவே, ஷெய்த்தான் அவரைப் பின்தொடர்ந்து சென்றான். அவரும் (அவனது சூழ்ச்சியில் சிக்கி) வழிதவறி விட்டார். நாம் நாடியிருந்தால் அவ்வத்தாட்சிகளைக் கொண்டு அவரை (கண்ணியப்படுத்தி) உயர்த்தியிருப்போம். ஆனால், அவர் இப்புவி (வாழ்வு) நிரந்தரம் என்றெண்ணி தன் மனோஇச்சையை பின்பற்றிச் சென்று விட்டார். அவரது உதாரணம் ஒரு நாயின் உதாரணத்தைப் போன்றதாகும். அதனை நீங்கள் விரட்டினாலும் நாக்கைத் தொங்க விட்டுக் கொள்ளும் துரத்தாது விட்டாலும் நாக்கைத் தொங்கவிட்டுக் கொள்ளும். நமது வசனங்களைப் பொய்யாக்கும் மனிதர்களுக்கான உதாரணமும் இதுவே. சிந்தித்துப் பார்ப்பதற்காக வேண்டி (இவ்வாறான) வரலாறுகளை அவர்களுக்கு (அடிக்கடி) சொல்லிக் காட்டுவீராக! நமது வசனங்களைப் பொய்யாக்கும் மனிதர்களுக்கான இவ்வுதாரணம் மிகக் கேவலமானதாகும். அவர்களே அவர்களுக்கு அநியாயம் இழைத்துக்

கொண்டனர். யாருக்கு அல்லாஹ் நேர்வழி காட்டுகின்றானோ அவரே நேர்வழி பெறுகிறார் யாரை அவன் வழிகேட்டில் விட்டுவிடுகின்றானோ அத்தகையோர் நஷ்டவாளிகளே! (அல்-அஃராஃப் 7:175-178)

தனது மனோஇச்சையை தெய்வமாக எடுத்துக் கொண்டவரை நபியே நீர் பார்த்தீரா? அவருக்கு நீர் பொறுப்பாக இருப்பீரா? அவர்களில் பெரும்பாலானோர் (நீர் சொல்வதை) காதால் கேட்கிறார்கள் என்றோ அல்லது அது பற்றிச் சிந்திக்கிறார்கள் என்றோ எண்ணுகிறீரா? நிச்சய மாக அவர்கள் மிருகங்களைப் போன்றவா்களே. இல்லை, அவர்கள் அவற்றை விடவும் வழிகெட்டவா்கள்! (அல்-ஃபுர்கான் 25:43-44)

விசுவாசம் கொண்டு ஸாலிஹான அமல் புரிவோரை நிச்சயமாக அல்லாஹ் சுவனபதிகளில் நுழையச் செய்கிறான். அவற்றின் கீழால் அருவிகள் ஓடிக்கொண்டிருக்கும். நிராகரிப்பாளர்களோ கால்நடைகள் உண்பது போன்று உண்டு இன்பம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். (நரக) நெருப்பே அவர்கள் (இறுதியாகச்) செல்லுமிடமாகும். உம்மை வெளியேற்றிவிட்ட இந்த நகரவாசிகளை விடப் பலம் வாய்ந்த எத்தனையோ நகரவாசிகள் இதற்கு முன்னர் இருந்தனர். அவர்களையும் நாம் அழித்தே விட்டோம். அப்போது அவர்களுக்கு உதவக்கூடிய எவரும் இருக்கவில்லை. தனது இரட்சகனிடமிருந்து கிடைக்கப்பெற்ற தெளிவான வழியில் இருப்பவர், தீய செயல்களை அழகாகக் கண்டு தனது மனோ இச்சைகளுக்குப் பின்னால் சென்றவர் போலாவாரா? (முஹம்மத் 47:12-14)

(இணை வைத்து) அநியாயம் புரிவோர் எவ்வித அறிவுமின்றி தமது மனோஇச்சையைப் பின்பற்றி நடக்கின்றனர். அல்லாஹ் தவறான வழியில் விட்டு விட்டவரை நேர்வழியில் செலுத்துபவர் யார்? எனவே, (நபியே!) தூய மார்க்கத்தை நோக்கி உமது கவனத்தை ஒருமைப்படுத்துவீராக! அல்லாஹ் மனிதர்களைப் படைத்த (ஒரே கடவுளுக்குப் பணிதல் என்ற) இயல்பு மார்க்கத்தையே பின்பற்றுவீராக! அல்லாஹ்வின் படைப்பை மாற்ற எவராலும் முடியாது. அதுவே நேரான மார்க்கம். ஆயினும் பெரும்பாலான மனிதா்கள் இதனை அறிந்து கொள்வதில்லை. (அர்-ரூம் 30:29-30)

உலக வாழ்வின் வெளிப்படையான (கவர்ச்சி தரும்) அம்சங்களை அறிந்து வைத்திருக்கும் அவர்கள் மறுமை வாழ்வு பற்றி அசிரத்தையாகவே உள்ளனர். தம்மைப் பற்றி அவர்கள் சிந்திக்க வேண்டாமா?

வானங்களையும் பூமியையும் அவற்றுக்கிடையில் இருப்பவற்றையும் அல்லாஹ் நியாயமான காரணமோ குறிப்பிட்ட தவணையோ இன்றிப் படைக்கவில்லை. மனிதர்களில் அதிகமானோர் (மறுமையில்) தங்கள் இரட்சகனைச் சந்திக்கவிருக்கும் செய்தியை நிராகரித்தோராகவே உள்ளனர். அவர்கள் பூமியில் பயணம் செய்து தமக்கு முன்பிருந்தோரின் முடிவு என்னவாயிற்று என்று பார்க்க வேண்டாமா? இவர்களை விடப் பலசாலிகளாகவும், இவர்களை விட அதிகமாக பூமியைப் பண்படுத்தி வளப்படுத்தியோராகவும் அவர்கள் இருந்தனர். (இந்நிலையில்தான்) நமது தூதர்கள் தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டு அவர்களிடம் வந்தனர். அல்லாஹ் அவர்களுக்கு தீங்கிழைக்கவில்லை. ஆனால் அவர்கள் (தூதர்களைப் பொய்யாக்கி) தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டனர். பின்னர், தீமை செய்துகொண்டிருந்தோரின் முடிவு மிக மோசமாக அமைந்தது. ஏனெனில், அவர்கள் அல்லாஹ்வின் அத்தாட்சி களைப் பொய்யாக்கியதோடு அவற்றை பரிகாசமும் செய்து கொண்டி ருந்தனர். அல்லாஹ்தான் சிருஷ்டிகளை முதலில் படைக்கத் தொடங்கு கிறான். பின்னர் (மறுமையில் மற்றொரு தடவையும்) அவனே படைக்கி றான். பின்னர் அவனிடமே நீங்கள் (விசாரணைக்காக) மீளக் கொண்டு வரப்படுவீர்கள். மறுமைநாள் ஏற்படும்போது (அல்லாஹ்வுக்கு இணை வைத்த) பாவிகள் (விமோசனம் குறித்து) நம்பிக்கை இழந்து விடுவர். (அர்-ரூம் 30:7-12)

யார் மறுமையின் விளைச்சலை விரும்புகிறாரோ அவருக்கு அதனை நாம் அதிகப்படுத்திக் கொடுப்போம். யார் இவ்வுலக வாழ்வின் விளைச்சலை விரும்புகிறாரோ அவருக்கு நாம் அதிலிருந்து (ஓரளவு) கொடுப்போம். ஆனால் மறுமையில் அவருக்கு எந்தப் பங்கும் கிடையாது. (அஷ்-ஷூறா 42:20)

நிராகரிப்பாளர்களை நீண்ட காலம் நாம் விட்டுவைப்பது தமக்கு நல்லதென்று அவர்கள் எண்ண வேண்டாம். நாம் அவர்களது கெடுவைப் பிற்படுத்துவது அவர்களது பாவங்கள் இன்னும் அதிகரிக் கட்டும் என்பதற்காகத்தான். அவர்களுக்கு இழிவுதரும் வேதனை (தயார்படுத்தப்பட்டு) உள்ளது. (ஆல இம்றான் 3:178)

உமது ரட்சகன் மிக்க மன்னிப்பும் அருளும் உடையவன். அவர்கள் (தீமை புரிந்து) சம்பாதிப்பவற்றுக்கு (உடனுக்குடன்) குற்றம் பிடிப்பவ னாக அவன் இருந்திருந்தால், அவர்களுக்கான தண்டனையையும் விரைந்து வழங்கியிருப்பான். ஆனால், அவர்களுக்கு (தண்டனைக்

கென) வாக்களிக்கப்பட்ட ஒரு நேரம் உண்டு. (அந்த நேரம் வந்து விட்டால்,) அவர்கள் தப்பிக்கொள்ள வழியே இருக்காது. இத்தகைய பல ஊராரை அவர்கள் அநியாயம் புரிந்து கொண்டிருந்தபோது நாம் அழித்து விட்டோம். எனினும், அவர்களை அழிப்பதற்கென ஒரு குறிப்பிட்ட நேரத்தை நாம் நிச்சயப்படுத்தியே இருந்தோம்.
(அல்-கஹ்ஃப் 18:58-59)

(நபியே!) கூறுவீராக: யார் வழிகேட்டில் ஆழ்ந்திருக்கிறாரோ அவரை அருளாளன் (ஆகிய அல்லாஹ்) (வழிகேட்டிலேயே) நீடித்தி ருக்க விட்டுவிடுகிறான். பின்னர் அவர்களுக்கு வாக்களிக்கப்படுவதை அவர்கள் கண்டு கொள்வார்கள். அது (இவ்வுலகில் கிடைக்கும்) தண்டனையாகவோ அல்லது மறுமை(யில் கிடைக்கும் தண்டனை) யாகவோ இருக்கும். அப்போது எவரது அந்தஸ்து மிக மோசமானது என்பதையும், எவரது உதவியாளர்கள் மிகப் பலவீனமானவர்கள் என்பதையும் அவர்கள் அறிந்து கொள்வார்கள். (மர்யம் 19:75)

(நபியே!) எவர் நிராகரித்தாலும் அவரது நிராகரிப்பு உம்மைக் கவலைகொள்ளச் செய்ய வேண்டாம். அவர்கள் எம்மிடமே திரும்பிவர வேண்டியுள்ளனர். அப்போது அவர்கள் செய்த செயல்களை அவர் களுக்கு எடுத்துக் கூறுவோம். நிச்சயமாக அல்லாஹ் உள்ளங்களில் உள்ளவற்றையும் நன்கறிந்தவனாகவே இருக்கிறான். அவர்களை நாம் சிறிது(காலம்) இன்பம் அனுபவிக்கச் செய்வோம். பின்னர் கடுமையான வேதனைக்கு அவா்களை உட்படுத்துவோம். (லுக்மான் 31:23-24)

(இப்லீஸ் அல்லாஹ்வை நோக்கிக்) கூறினான்: நீ என்னை வழி கேட்டில் விட்டு விட்டதால், (ஆதமின் சந்ததிகளாகிய) அவர்களை (உனது நேரான வழியில் செல்லாது) தடுக்கும் வகையில் (அதில்) நான் உட்கார்ந்திருப்பேன். பின்னர் அவர்களது முன்னாலும் பின்னாலும் வலப்புறமாகவும் இடப்புறமாகவும் அவர்களை வழிகெடுக்க வருவேன். அப்போது அவர்களில் பெரும்பாலானோரை (உனக்கு) நன்றி செலுத்து பவர்களாகக் காணமாட்டாய். அதற்கு அல்லாஹ் கூறினான்: வெறுக்கப் பட்டவனாகவும் (என் அருளிலிருந்து) விரட்டப்பட்டவனாகவும் இங்கிருந்து வெளியேறி விடு. (உன்னையும்) உன்னைப் பின்பற்றியோர் (என்று வரக்கூடிய) அனைவரையும் கொண்டு நிச்சயம் நான் நரகத்தை நிரப்புவேன். (பின்னர் ஆதமை நோக்கி,) ஆதமே! நீரும் உமது மனைவியும் (இந்தச்) சுவனத்தில் வசியுங்கள். நீங்கள் விரும்பிய இடத்திலிருந்து (விரும்பியதையும்) சாப்பிடுங்கள். (ஆனால்) இந்த

மரத்தை (மாத்திரம்) நெருங்காதீர்கள். (அவ்வாறு சென்று அதன் கனியைப் புசித்து விட்டீர்களானால், உங்களுக்கு நீங்களே) அநியாயம் புரிந்தவர்களாகி விடுவீர்கள் என்று கூறினான். எனினும், (மறைக்கப் பட்டிருந்த) அவர்களது அபங்களை அவர்களுக்கு வெளிப்படுத்தி (தீங்கிழைத்து) விடும் நோக்கோடு (தவறான எண்ணத்தை) அவர்கள் மனதில் (இப்லீஸ்) ஊசலாடச் செய்தான். அந்த மரத்தை விட்டும் உங்கள் இரட்சகன் உங்களைத் தடுத்ததெல்லாம் நீங்கள் இருவரும் மலக்கு களாகவோ நிரந்தர வாழ்வு பெற்றவர்களாகவோ மாறிவிடக் கூடாது என்பதற்காகத்தான்! என்று அவர்களிடம் கூறிய அவன், நிச்சயமாக நான் உங்களுக்கு (நன்மை புரிய வேண்டும் என்ற தூய எண்ணத்துடன்) உபதேசம் புரிபவனாகவே இருக்கின்றேன் என்றும் கூறினான். இவ்வாறு அவன் அவர்களுக்கு (தொடர்ந்து ஆசையுட்டி) மயக்கி விட்டான். (அவனது மாய வலையில் வீழ்ந்த) அவர்கள் இருவரும் அந்த மரத்தின் கனியைப் புசித்தபோது, அவர்களது மர்ம உறுப்புகள் வெளிப் படத் தொடங்கின. எனவே, அவர்கள் சுவனத்தின் இலைகளைக் கொண்டு தம்மை மறைக்கலானார்கள். அப்போது அவர்களது இரட்சகன் அவர்களை அழைத்து, அந்த மரத்தை விட்டு உங்களிருவரையும் நான் தடுத்திருக்கவில்லையா? ஷெய்த்தான் உங்களுக்கு வெளிப்படையான எதிரியாக இருக்கிறான் என்றும் கூறவில்லையா! என்று கேட்டான். அதற்கவர்கள், ‘‘எங்கள் ரட்சகா! எமக்கு நாமே அநியாயம் இழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்துக் கருணை புரியாவிட்டால், நிச்சயமாக நாம் நஷ்டவாளிகளாகவே இருப்போம்! என்று கூறினர். (அதற்கு அல்லாஹ்,) ‘‘இங்கிருந்து நீங்கள் (அனைவரும்) இறங்கிச் சென்று விடுங்கள். உங்களில் ஒருவர் மற்றவருக்கு எதிரியாகவே இருப்பீர்கள். பூமியில் உங்களுக்குத் தங்குமிடமும், (மரணம் வரை யான) ஒரு குறிப்பிட்ட கால அளவு இன்பமான வாழ்வும் கிடைக்கும் என்று கூறினான். ‘‘அதிலே நீங்கள் வாழ்வீர்கள் அதிலேயே மரணிப்பீர் கள் அதிலிருந்தே (மீண்டும்) வெளியே கொண்டு வரப்படுவீர்கள்! என்றும் கூறினான். ஆதமின் சந்ததிகளே! உங்கள் மர்மஸ்தானங்களை மறைக்கக் கூடியதும், உங்களை அழகுபடுத்தக் கூடியதுமான ஆடை களை உங்களுக்கு இறக்கியுள்ளோம். எனினும், இறையச்சம் என்ற ஆடையே (அனைத்திலும்) சிறந்ததாகும். இவை அல்லாஹ்வின் அத்தாட்சிகளாகும். அவர்கள் நல்லுணர்ச்சி பெறவேண்டும் என்பதற் காகவே அல்லாஹ் இவற்றை அருளுகின்றான். ஆதமின் சந்ததிகளே! ஷெய்த்தான் உங்கள் தாய் தந்தையரது மர்ம உறுப்புகளை வெளிப்படுத் தும் வகையில் அவர்களது (இயற்கையான) ஆடையைக் களையச்

செய்து சுவனத்திலிருந்து வெளியேற்றியது போன்று உங்களையும் மயக்கிக் கெடுத்துவிட வேண்டாம். அவனும் அவனைச் சேர்ந்தவர் களும் நீங்கள் பார்க்க முடியாத வகையில் (மறைந்து) இருந்து உங்களை (வழிகெடுக்க சமயம்) பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக நாம் ஷெய்த்தான்களை (அல்லாஹ்வை) விசுவாசம் கொள்ளாதோருக்கு நண்பர்களாக ஆக்கியுள்ளோம். அத்தகையோர் மானக்கேடான செய லொன்றைச் செய்து விட்டு, ''எமது முன்னோரும் இவ்வாறு செய்வதை நாம் கண்டிருக்கிறோம். அல்லாஹ்வே எங்களுக்கு அதனைச் செய்யு மாறு ஏவினான் என்றும் கூறுவார்கள். (நபியே!) கூறுவீராக: நிச்சய மாக அல்லாஹ் மானக்கேடான செயலைச் செய்யுமாறு ஏவுவதில்லை. நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்வின் மீது (பொய்யாக இட்டுக்கட்டிக்) கூறுகிறீர்களா? (அல்-அஃராஃப் 7:16-28)

விசுவாசம் கொண்டவர்களே! ஷெய்த்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லாதீர்கள். எவர் அவனது அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செல்கிறாரோ (அத்தகை யோருக்கு) மானக்கேடான செயல்களையும் பாவங்களையும் செய்யுமாறு அவன் ஏவுகிறான். (அந்-நூர் 24:21)

அல்லாஹ் இறக்கியவற்றைப் பின்பற்றுங்கள் என்று அவர்களுக்குக் கூறப்பட்டால், ''இல்லை, எமது மூதாதையர் எதனைச் செய்ய நாம் கண்டோமோ அதனையே பின்பற்றுவோம் என்று கூறுவார்கள். ஷெய்த்தான் அவர்களை நரக வேதனையை நோக்கி அழைத்தாலுமா (அவ்வாறு கூறுவார்கள்)? (லுக்மான் 31:21)

''நிச்சயமாக நான் அவர்களை வழிகெடுத்து, (பலவகையிலும்) ஆசையூட்டுவேன். (நேர்ச்சைக்கு விடப்பட்ட) கால் நடைகளின் காதுகளை அறுக்கும்படி ஏவுவேன். அல்லாஹ்வின் சிருஷ்டிகளில் (விகாரமான) மாற்றங்களை உண்டுபண்ணும் படியும் அவர்களை ஏவுவேன் (என்று ஷைத்தான் கூறினான்). (எனவே,) யார் அல்லாஹ்வை விடுத்து ஷெய்த்தானை நண்பனாக எடுத்துக் கொள்கிறாரோ அவர் தெளிவாகவே நஷ்டமடைந்து விடுகிறார். அவன் அவர்களுக்கு வாக்குறுதி வழங்கி, ஆசையுட்டுகிறான். அவா்களை ஏமாற்றி மயக்கும் வாக்குறுதிகளையே ஷெய்த்தான் வழங்குகிறான். இத்தகையோர் ஒதுங்குமிடம் நரகமே. அதிலிருந்து தப்ப அவர்களுக்கு எந்த வழியும் கிடையாது. (அந்-நிஸாஉ 4:119-121)

எமது தண்டனை அவர்களுக்கு வரமுன்பே (அவர்கள்) பாவ மன்னிப்புக்கோரி இறைஞ்ச வேண்டாமா? ஆனாலும், அவர்களது

உள்ளங்கள் கடினமடைந்து விட்டன. அவர்கள் செய்து கொண்டிருந்த வற்றை ஷெய்த்தான் அவர்களுக்கு அழகுபடுத்திக் காட்டிவிட்டான். அவர்களுக்கு நினைவூட்டப்பட்ட விடயங்களை அவர்கள் மறந்திருந்த போது அனைத்துச் (செல்வங்களின்) வாயில்களையும் நாம் திறந்து கொடுத்தோம். அவ்வாறு வழங்கப்பட்டவற்றைக் கொண்டு (ஆணவத் தில்) அவர்கள் மகிழ்ந்திருந்தபோது (எதிர்பாராத வகையில்) அவர்களைத் தண்டித்தோம். அதன் பிறகு தப்ப முடியும் என்ற நம்பிக்கையை அவர்கள் இழந்து விட்டனர். (அல்-அன்ஆம் 6:43-44)

மக்களுக்குக் காட்டுவதற்காக செல்வங்களைச் செலவு செய்தும், அல்லாஹ்வையோ மறுமை நாளையோ விசுவாசிக்காமலும் இருப்பவர் கள் (ஷெய்த்தானின் நண்பர்களே!). ஷெய்த்தான் யாருக்கு நண்பனாக இருந்தாலும் அவன் மிகக் கெட்ட நண்பனே! (அந்-நிஸாஉ 4:38)

ஷெய்த்தான் அவர்களை வெற்றி கொண்டு அல்லாஹ்வின் ஞாபகத்தை மறக்கடிக்கச் செய்து விட்டான். அவர்களே ஷெய்த்தானின் கட்சியினர். நிச்சயமாக ஷெய்த்தானின் கட்சியினரே நஷ்டவாளிகள் என்பதை அறிந்து கொள்ளுங்கள்! (அல்-முஜாதலா 58:19)

விசுவாசம் கொண்டவர்களே! இஸ்லாத்தில் பூரணமாக நுழைந்து விடுங்கள். ஷெய்த்தானின் அடிச்சுவடுகளை பின்பற்றிச் செல்லாதீர்கள். நிச்சயமாக அவன் உங்களுக்குப் பகிரங்க விரோதியாக இருக்கிறான். (அல்-பகறா 2:208)

## ரூஹின் சட்டம் என்பது ஒளியினதும் நீதியினதும் சட்டம்

*ஒளியின் சட்டத்துக்கும் அல்-குர்ஆன் பாதுகாத்துத் தந்த இஸ்லாமியத் தூதுக்கும் தமது உள்ளங்களில் ஆழமான இடம் தந்து, அது நடை முறைப்படுத்தப்பட வேண்டும் என்று விரும்பி, இன்றும் அதற்கு விசுவாசமாக இருக்கும் முஸ்லிம்களைப் பொறுத்தவரையில், அவர்களது ஆத்மாக்களை (நுஃபுஸ்) இருவேறு அம்சங்கள் கூறுபோட்டு நிற்கின் றன. அவர்களது மனங்களிலும் சிந்தனைகளிலும் ஆழப்பதிந்திருக்கும் உயர்ந்த பெறுமானங்களும் கொள்கைகளும் அவற்றில் முதல் அம்ச மாகும். சத்தியம், நீதி என்பவற்றுக்காகப் பாடுபடல் மற்றும் யதார்த்த வாழ்வில் அவற்றுக்கு வடிவம் கொடுத்தல் என்ற உன்னத இலட்சியத்*

தைச் சாதித்துக் கொள்வதற்கான சாதனமாகவே சடப்பொருள் இருக்க வேண்டும் என அப்பெறுமானங்களும் கொள்கைகளும் வற்புறுத்து கின்றன. உயிர்வாழ்வு, களிமண், சடப்பொருள் முதலிய அனைத்தும் ஒளியின் பொருள்களையும் உயர்ந்த ரூஹானியப் பெறுமானங்களையும் இலட்சியங்களையும் சாதித்து அவற்றுக்கு வடிவம் கொடுப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற சாதனம் மட்டுமே என்றும் அவை வற்புறுத்து கின்றன. இதன்மூலம் மனிதனும் சடப்பொருளும் ஏககாலத்தில் உயர்ந்து நிற்க வழியேற்படுகிறது. சடப்பொருள் என்பது அப்போது மிகச் சிறந்த, ஒளிமிக்க சாதனமாகவும் மாறுகிறது.

முஸ்லிம்களது ஆத்மாக்களைக் கூறுபோட்டு நிற்கும் இரண்டாவது அம்சம், -மேற்கத்தியரது சிந்தனைகளிலும் கோட்பாடுகளிலும் ஆழப் பதிந்திருப்பது போன்று- களிமண் சார்ந்த உடலும் அதன் மிருகத் தேவைகளும் வற்புறுத்துகின்ற சடவாழ்க்கை வசதிகளையும் அவற்றோடு ஒட்டிய இன்பங்களையும் சுகபோகங்களையும் பெறவேண்டும் என்ற வேட்கையாகும். எனினும் அவர்களது பயணத்தின் இயல்பையும், ஷரீஆவின் இலட்சியங்களையும், சடப்பொருளை அது சாதனமாகக் கருதுகிறதா அல்லது இலட்சியமாகக் கருதுகிறதா என்பதையும் பற்றிய பார்வை தெளிவற்றுப் போனதன் காரணமாக அவர்களது முயற்சிகளும் திசை மாறிப்போயின.

இதன் விளைவாக, எவ்வித நாட்ட சக்தியோ உறுதியான நிலைப் பாடோ இன்றி மேற்கத்தியரிடம் பிழையாகப் பாடம் படித்து -ஜப்பானி யர் போலல்லாது- தோற்றுப்போன மாணவர்களாக அவர்கள் மாறினர். இதன் காரணமாகத்தான், சடவாழ்வு முன்னேற்றத்தைச் சாதிப்பதற்காக அவர்கள் மேற்கொள்ளக்கூடிய அனைத்து முயற்சிகளும் தொடர்ந்து தோல்வியையே தழுவிக் கொண்டிருக்கின்றன. அவர்களுக்குள் மறைந் திருக்கின்ற ஆற்றலும் சக்தியும் அம்முயற்சிகளில் போதியளவு வெளிப் படுவதையும் காண முடியாதுள்ளது. இஸ்லாமியக் கண்ணோக்கில் சடப்பொருள் என்பது பிரபஞ்சம், உலக வாழ்வு என்பவற்றினூடாக உயர்ந்த ஆன்மீக இலட்சியங்களைச் சாதித்துக் கொள்வதற்கு இன்றி யமையாத ஒரு கருவியே என்ற தெளிவான பார்வை ஏற்படுவது இதற்கு மிக அவசியமாகும்.

நம்மையும் நமது அடிப்படைகளையும் நமது மனங்களின் கட்டமைப் பையும் விளங்கி, நமது சிந்தனையை இயக்கும் கொள்கைகளையும்

கோட்பாடுகளையும் தெரிந்து கொள்வோமாயின், முஸ்லிமின் மனச் சாட்சி ஒருபோதும் சடப்பொருளையும் சடவாழ்வுத் தேவைகளையும் தனக்கான இலட்சியமாக ஏற்றுக் கொள்ளாது என்பதைப் புரிந்து கொண்டு விடுவோம்.

ஒரு முஸ்லிம் தனது அகீதாவிலும் சிந்தனையிலும் மயக்கம் கொண்ட வனாக இருந்தபோதிலும், சடவாழ்வு மோகத்திலும் அதனை அனுப விப்பதிலும் மேற்கத்தியரை கண்மூடிப் பின்பற்று பவனாக இருந்த போதிலும், -அவனது மனச்சாட்சியின் ஆளுகை காரணமாக- அந்தச் சடப்பொருளே தனது ஏக இலட்சியம் எனத் திருப்தி கொள்ள மாட்டான். முஸ்லிம் உம்மாவும் சடப்பொருளை -அது வாழ்வுத் தேவைகளுக்கு அவசியமானது என்ற போதிலும்- வாழ்வின் ஏக இலட்சியமாக ஒரு போதும் ஏற்றுக்கொள்ளாது. ஏனெனில், அது முஸ்லிமின் அகீதாவிலோ மனச் சாட்சியிலோ வாழ்வின் இலட்சி யத்திலோ மிக அடிப்படையான தோர் அம்சமல்ல.

எனவேதான், மேற்கத்தியரைப் பின்பற்றுவதில் உறுதியான நிலைப் பாடற்றவனாகவும் தயக்கம் கொண்டவனாகவும் முஸ்லிம் தனிமனிதன் தொடர்ந்தும் இருந்து வந்திருக்கிறான் இருக்கவும் போகிறான். இதுவே அவனது உற்பத்தியிலும் புத்தாக்கத்திலும் எழுச்சியையும் வினைமையை யும் கொண்டு வருவதற்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிந்தமைக்கும், இனியும் முடியவிருப்பதற்கும் காரண மாகும். ஏனெனில், தெளிவான பார்வையோ வரையறுத்த இலட்சி யமோ இன்றி வலிமையோ உறுதியான நிலைப்பாடோ தோன்றுவது சாத்தியமில்லை.

ஆக, வாழ்க்கைப் பயணத்தில் நன்மையின் பெறுமானங்களையும் இலக்குகளையும் சாதித்து, அவற்றுக்கு செயல்வடிவம் கொடுக்கும் நோக்கோடு எழுச்சியை ஏற்படுத்தவும் தூதைச் சுமக்கவும் முஸ்லிம் விரும்புவதாக இருந்தால், சடப்பொருளைக் கையாள்வதிலும் அதன் காரண-காரியத் தொடர்புகளைப் பேணுவதிலும் அவன் இன்னும் அதிக வினைமை கொண்டவனாக இருக்க வேண்டியுள்ளது என்பது தெளிவு. ஏனெனில், சடப்பொருள் இன்றி அந்த இலக்குகளைச் சாதிக்கவோ அவற்றின் பெறுமானங்களுக்கு வடிவம் கொடுக்கவோ முடியாது. நன்மை, உண்மை, அழகு, ஒளியின் சட்டம் ஆகிய கருத்தாக்கங்களுக்கு

*வடிவம் கொடுப்பதாக சடப்பொருள் அமையும்போது, அது உயர்ந்ததாக வும் நல்லதாகவும் அருளும் முன்னேற்றமும் கொண்டதாகவும் மாறு கிறது. இவ்வாறன்றி அது தன்னளவிலேயே ஓர் இலட்சியமாக மாறி, வனவிலங்குச் சட்டத்தின் நோக்கங்களுக்கும் அநியாயம், அத்துமீறல், இனவெறி, இணைவைப்பு, நாஸ்திகம் என்பவற்றுக்கும் வடிவம் கொடுப்பதாக அமையுமாயின், அப்போது அது தீமையாகவும் அநியாய மாகவும் பூமியில் விஷமம் புரிவதாகவும் ஏமாற்றாகவும் கானல் நீராக வும் மனோஇச்சையாகவும் வெறும் உடலின்பங்களாகவுமே மாறும்.*

*அல்லாஹ் கூறுகின்றான்:*

ஒவ்வொருவருக்கும் ஒரு திசையுண்டு. அவர் அதன் பக்கமே முன்னோக்குவார். நன்மைகளில் நீங்கள் ஒருவரையொருவர் போட்டி யிட்டுச் செல்லுங்கள்! (அல்-பகறா 2:148)

அவர்களுக்கு உபதேசிக்கப்படும் விடயங்களை அவர்கள் செய்வார் களாயின் அது அவர்களுக்கு சிறந்ததாகவே இருக்கும். (அந்-நிஸாஉ 4:66)

தாவூதின் சந்ததிகளே! நீங்கள் (எனக்கு) நன்றி செலுத்தும் வகையில் செயற்படுங்கள். என் அடியார்களில் சொற்ப தொகையினரே நன்றி செலுத்துவோராக உள்ளனர். (ஸபஉ 34:13)

நீங்கள் செய்யாததைச் சொல்வது அல்லாஹ்விடம் மிக வெறுப்புக் குரியதாகும். (அஸ்-ஸஃப் 61:3)

*அல்லாஹ் மேலும் கூறுகின்றான்:*

அல்லாஹ் உனக்குத் தந்தவற்றில் மறுமை வாழ்வை தேடிக்கொள். உலகில் உனக்கென (ஹலாலாக) உள்ள பங்கை (தர்மம் செய்து நன்மை தேட) மறந்து விடாதே. அல்லாஹ் உனக்கு உபகாரம் செய்தது போன்று நீயும் (பிறருக்கு) உபகாரம் செய். பூமியில் விஷமம் செய்ய விரும் பாதே! நிச்சயமாக அல்லாஹ் விஷமம் புரிவோரை விரும்புவதில்லை. (அல்-கஸஸ் 28:77)

உங்களுக்கென நீங்கள் முற்படுத்திச் செய்பவற்றை அல்லாஹ்விடம் கண்டு கொள்வீர்கள். (அல்-முஸ்ஸம்மில் 73:20)

நீங்கள் எந்த நற்செயலைப் புந்தாலும் அதனை நிச்சயமாக அல்லாஹ் அறிந்தவனாகவே உள்ளான். (அல்-பகறா 2:215)

அந்த (மறுமை) நாளில் ஒவ்வொரு நஃப்ஸும் தான் செய்த நன்மைகளை தனக்கு முன்னால் கண்டு கொள்ளும். (ஆல இம்றான் 3:30)

சரியான எடையைக் கொண்டு நிறுங்கள். அதுவே (உங்களுக்குச்) சிறந்தது. (அல்-இஸ்றாஉ 17:35)

*அல்லாஹ் கூறுகின்றான்:*

விசுவாசம் கொண்டவர்களே! நாம் உங்களுக்கு அளித்த உணவிலிருந்து தூய (ஹலாலான)வற்றைச் சாப்பிட்டு, அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துங்கள்.(அல்-பகறா 2:172)

எனவே உங்களுக்கு அல்லாஹ் அளித்த ரிஸ்கிலிருந்து தூய ஹலாலானதைச் சாப்பிட்டு, அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துங்கள். (அந்-நஹ்ல்: 114)

(நபியே!) கேட்பீராக: அல்லாஹ் தனது அடியார்களுக்காக ஏற்படுத்திய அலங்காரங்களையும் தூய ரிஸ்கையும் (ஹறாம் என்று) விலக்குபவர் யார்!? (மேலும்) கூறுவீராக: ‘‘இவை (அனைத்தும்) உலக வாழ்வில் விசுவாசிகளுக்கு உரியவை. மறுமையிலோ விசுவாசிகளுக்கு மாத்திரமே உரியவை. இவ்வாறுதான் அறிவுள்ள மக்களுக்கு (நமது) வசனங்களை நாம் விளக்குகிறோம். (நபியே!) கூறுவீராக: நிச்சயமாக எனது ரட்சகன் வெளிப்படையான, அந்தரங்கமான (அனைத்து) மானக்கேடான செயல்களையும், பாவத்தையும், உரிமையின்றி அத்துமீறுவதையும், அல்லாஹ்வுக்கு (நீங்கள்) இணை வைப்பதையும் தடுத்திருக்கின்றான். (அல்-அஃராப் 7:32-33)

அவனே அந்தப் பூமியிலிருந்து நீரையும் மேய்ச்சலுக்கான உணவுகளையும் வெளிப்படுத்துகின்றான். மலைகளையும் அவனே அதில் நாட்டினான். உங்களுக்கும் உங்கள் கால்நடைகளுக்கும் பயனளிக்கக் கூடிய வகையிலேயே (இவையனைத்தையும் அவன் படைத்தான்). (அந்-நாஸிஆத் 79:31-33)

அவனே தனது கட்டளைப்படி கடலில் செல்லக் கூடியதாக கப்பலை உங்களுக்கு வசப்படுத்தித் தந்தான். நதிகளையும் உங்களுக்கு (வசதியாகப் பாயுமாறு) அவன் வசப்படுத்தித் தந்தான். தவருது தொடர்ச்சியாக இயங்கக் கூடியனவாக சூரியனையும் சந்திரனையும் உங்களுக்கு அவன் வசப்படுத்தினான். இரவையும் பகலையும் கூட உங்களுக்கு அவன் வசப்படுத்தினான். (இப்றாஹீம் 14:32-33)

வானங்களிலும் பூமியிலும் உள்ளவற்றை அல்லாஹ் உங்களுக்கு வசப்படுத்தித் தந்தான் என்பதையும், தனது அருட்கொடைகளை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் உங்கள் மீது அவன் சொரிந் திருக்கிறான் என்பதையும் நீங்கள் கவனித்துப் பார்க்கவில்லையா? (லுக்மான் 31:20)

தனது உதவி கொண்டு உங்களை அவன் பலப்படுத்தினான். தூய உணவு வகைகளையும் உங்களுக்கு ''ரிஸ்க்'' ஆக வழங்கினான். நீங்கள் நன்றி செலுத்த வேண்டும் என்பதற்காக (இவ்வாறெல்லாம் அவன் அருள் பாலிக்கிறான்.) (அல்-அன்ஃபால் 8:26)

அப்பூமியில் நாம் பேரீச்சை, திராட்சைத் தோட்டங்களை அமைத்து அவற்றினூடாக நீரூற்றுகளையும் பீறிட்டு ஓடச்செய்தோம். அத் தோட்டங்களின் விளைச்சலிலிருந்தும், அவர்களது கரங்கள் தயாரித்த (பழச்சாறு போன்ற) வற்றிலிருந்தும் அவர்கள் புசிப்பதற்காக (இவ்வாறு நாம் ஏற்படுத்திக் கொடுத்தோம்). இவற்றுக்காக அவா்கள் நன்றி செலுத்த வேண்டாமா?'' (யாஸீன் 36:34-35)

ஆதமின் சந்ததிகளே! நீங்கள் தொழுகைக்காக நிற்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உங்களை அலங்கரித்துக் கொள்ளுங்கள். உண்ணுங்கள் பருகுங்கள் வீண்விரயம் செய்யாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வீண் விரயம் செய்வோரை நேசிப்பதில்லை. (அல்-அஃராப் 7:31)

*எனவே சமூகங்களுக்கிடையிலான நாகரிகப் போட்டியில் முஸ்லிம் ஜெயிக்க வேண்டுமாயின், தனது நம்பிக்கைக் கோட்பாட்டின் அடிப் படைப் பெறுமானங்களை எவ்வித மயக்கமுமின்றி அவன் விளங்கி யிருப்பது அவசியமாகும். சத்திய நாகரிகத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பு, நீதி, நற்பண்பு, உண்மையான மானிடக் கூட்டுறவு முதலியவை கொண்ட சமூகத்தை வடிவமைத்தல் என்ற (ஆன்மீகப்பண்பு கொண்ட -பாரிய- நிரந்தர) இலக்கை அடைவதற்கான சாதனமே சடப்பொருளும் இதர வாழ்வியல் தேவைகளும் என்ற புரித லோடு அவற்றை அவன் கையாள்வதும் அவசியமாகும்.*

*அவ்வாறில்லையெனில், வாழ்வை வலிமை மிக்கதாக அமைத்துக் கொள்ள அவனால் முடியாது போய்விடும். சீர்திருத்தமும் புத்தாக்கமும் செய்யக்கூடிய கலீபாவாகவும் அவனால் இருக்க முடியாது போய்விடும். சமூகங்களுக்கிடையிலான நாகரிகப் போட்டியில் வெற்றி பெறவும்*

இயலாது போய்விடும். சத்திய நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதற்கும், ஒளியின் சட்டத்தைப் புமியில் நிலைநாட்டுவதற்கும், தக்வாவும் சக்தியும் கண்ணியமும் கொண்ட மனிதர்களது வாழ்வை சாத்தியப்படுத்துவதற்கும் அவன் மேற்கொள்கின்ற முயற்சியும் தோல்வியில் முடிந்துவிடும்.

## தெளிவான பார்வையே சரியான பாதையும் மீட்சிக்கான வழியும்

சமூகங்களும் அவற்றின் தலைவர்களும் சிந்தனையாளர்களும் தமது சுயத்தையும் தமது பாதையின் யதார்த்தத்தையும் உறுதியாகத் தெரிந்து கொள்ளவில்லையெனில், அவர்களது நிலை பாலைவனத்தில் ஒரே திசையை வரையறுத்துப் பயணம் செய்யாது அங்குமிங்கும் அலை பவனின் நிலை போன்றதாகவே இருக்கும். ஏனெனில் பாலைவனத்தில் திசைமாறிய ஒருவன், திட்டமாக ஏதாவதொரு திசையைத் தீர்மானித்துக் கொண்டு பயணம் செய்வதுதான் அவனது மீட்சிக்கான ஒரே நம்பிக்கை யாக அமையமுடியும். பாலைவனங்களில் வழிதவறி மடிந்து போவோரில் பெரும்பாலானோர் தமக்கென ஒரே திசையை வரையறுத்துக் கொண்டு அதில் செல்லாமல், குழப்பத்திலும் தயக்கத்திலும் அடிக்கடி பயணத் திசையை மாற்றிக் கொண்டிருப்பவர்களே. இது அவர்கள் அங்குமிங்கும் அலைந்து திரிந்து, இறுதியில் பாலைவனத்திலேயே மடிந்துபோகக் காரணமாகி விடுகிறது.

உம்மாவின் நோக்கு தெளிவற்றிருத்தல், அதிலுள்ள படித்தவர்கள் மேற்கத்தியரைக் கண்டு பிரமிப்படைந்திருத்தல், எவ்வித விமர்சனமோ நல்லது-கெட்டது பற்றிய பகுப்பாய்வோ இன்றி அவர்களை அப்படியே பின்பற்றுதல் முதலிய பலவீனங்களே தோல்விக்கும் பின்னடைவுக்கு மான மிகப் பிரதான காரணிகளாகின்றன. தம்மிடமுள்ள நல்லதைச் செயற்படுத்துவதோடு பிறரிடம் தமக்குப் பொருத்தமாகக் காணப்படும் புதிய அம்சங்களை மாத்திரம் எடுத்துக் கொள்வதா அல்லது அனைத்து அம்சங்களாலும் ஆகர்ஷிக்கப்பட்டு அவற்றைக் கண்மூடிப் பின்பற்று வதா என்ற குழப்பமும் இதற்கான மற்றொரு பிரதான காரணியாகும்.

இப்பலவீனங்கள் மூலமாக அவர்கள் வாழ்வையும் அதன் பல்வேறு வழிகளில் உறுதியோடு முயற்சிப்பதையும் கைவிட்டு விடுகிறார்கள். உம்மாவின் எழுச்சிக்கு முன்னால் உள்ள மிகப்பெரும் தடையாகவும்,

அதில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்த இயக்கப் பணிக்கு முன்னாலுள்ள பாரிய முட்டுக்கட்டையாகவும் இது கருதப்படுகிறது. ஏனெனில், இந்நிலை உம்மாவின் சக்தி வெடிப்பையும் சரளமான பயணத்தையும் தடுப்பதோடு அதன் ஆற்றலையும் ஒடுங்கச்செய்து விடுகிறது. உம்மா தனது மிகச் சிறந்த மானிடத் தூதை எத்திவைப்பதைத் தடுப்பதாகவும் இது அமைந்து விடுகிறது.

இஸ்லாத்தின் தெய்வீகத் தூது -அல்லாஹ் வாக்களித்தது போன்று- இன்றும் திரிக்கப்படாமல் அல்-குர்ஆனிலும் அவனது கண்ணியமிக்க தூதரது ஸஹீஹான ஸுன்னாவிலும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அந்த வழிகாட்டலின்பால் மனிதஇனம் இன்றும் கடுமையான தேவை கொண்டதாகவே உள்ளது. அது மட்டுமன்றி, இன்று மனித இனத்திடம் காணப்படுகின்ற மோசமான மிருகப் பண்பு நிலையில், இஸ்லாமிய வழிகாட்டல் முன்னெப்போதும் இல்லாதளவு மிக அதிகமாகத் தேவைப் படுகிறது.

இது முஸ்லிம் உம்மா வெறுமனே தன்னைச் சீர்திருத்திக் கொண்டு தனது இஸ்லாத்தின் தூதை மீள நடைமுறைப்படுத்த முயல் வதற்கும் அப்பால் மிகப்பெரும் பொறுப்பொன்றை அதன் தோள்மீது சுமத்து கிறது. மனித நாகரிகத்தைச் சீர்செய்து பல்வேறு மனித சமுதாயங்களை வனவிலங்குச் சட்டத்தின் கோரப் பற்களிலிருந்து கடைத்தேற்ற வேண்டிய பொறுப்பு அது. அக்காட்டுச் சட்டம் சுமந்திருக்கும் மிகப் பயங்கரமான சீர்கேடும் அழிவும் கவனித்துச் சீர்செய்யப்படாவிட்டால், மிருகப் பண்பும் இனவெறியும் அத்துமீறும் இயல்பும் கொண்ட அது மனித இனத்தை அழிவுக்கும் நாசத்துக்கும் இட்டுச் செல்வது சர்வ நிச்சயம்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து ஸியோனிஸமும் மேற்குலகும் -குறிப்பாக முஸ்லிம்கள் மீதும் பொதுவாக மனித இனத்தின் மீதும்- திணித்து வரும் அநியாயங்களும் யுத்தங்களும் மிகப் பெரும் அபாயங்கள் குறித்த எச்சரிக்கை மணியாகவே ஒலிக்கின்றன. குறிப்பாக முஸ்லிம் உம்மாவைச் சேர்ந்த புத்திஜீவிகளும், பொதுவாக உலக சமுதாயங்களைச் சேர்ந்த புத்திஜீவிகளும் சந்தர்ப்பம் கைநழுவிப் போக முன்னரேயே இந்த அபாயங்களைப் பொறுப்புடன் கவனித்து எதிர்வினை ஆற்றுவது மிக அவசியமாகும்.

மனிதனின் இயல்பையும், ரூஹ்-களிமண், ஒளி-இருள், சத்தியம்-அசத்தியம், நீதி-அநீதி என்பவற்றுக்கிடையில் அவனில் நிகழும் போராட்டத்தையும், அவனை வழிகெடுக்க இப்லீஸ் தருணம் பார்த்திருப்பதையும், தன்னையும் புவி வாழ்வையும் சீர்திருத்த வேண்டிய தனது கடமைப்பாட்டையும் பற்றிய தெளிவான பார்வை முஸ்லிமிடம் காணப்படுவது இன்று மிக அடிப்படைத் தேவையாக உள்ளது. அப்போதுதான் அவன் தன்னைச் சீர்திருத்திக் கொள்வதோடு, மேற்கத்திய நாகரிகத்தின் மீது சாதகமானதும் வினைத்திறன் மிக்கதுமான பாதிப்பை ஏற்படுத்த முடியும் அதனிடமுள்ள சக்தியையும் விஞ்ஞான-தொழிநுட்ப ஆற்றல்களையும் பெற்றுக் கொள்ள முடியும் அந்த நாகரிகத்தின் சவால்களையும் வனவிலங்குச் சட்டத்தின் அநியாயங்களையும் எதிர்கொள்ள முடியும்.

அதேவேளை, -கிழக்கிலும் மேற்கிலும் நன்மை, சமாதானம், மனித இனப் பாதுகாப்பு என்பவற்றை ஆசிக்கின்ற அனைத்துக் குழுமங்களினதும் ஒத்துழைப்புடன்- அநியாயமும் இனவெறியும் கொண்ட வனவிலங்குச் சட்டத்திற்குப் பதிலாக ஒளியும் சத்தியமும் நீதியும் கொண்ட ஷரீஆவினால் ஆளப்படக்கூடிய சர்வதேச சமூகம் ஒன்றை ஏற்படுத்த உழைப்பதும் கூட இந்நிலையில்தான் சாத்தியமாகும். ஏனெனில், இவ்வனவிலங்குச் சட்டமே இன்றுவரை மனித இனத்தின் மீது அழிவு தரும் உலகப் போர்களையும் அநியாயம் நிறைந்த பிராந்திய மற்றும் உள்நாட்டு யுத்தங்களையும் திணித்து வந்திருக்கிறது.

முஸ்லிமும் தெய்வீக வழிகாட்டலைப் பின்பற்றும் பிறரும், ஒளி கொண்ட தமது ஷர்ஆ களிமண்ணும் மிருகப் பண்பும் இருளும் கொண்ட வனவிலங்குச் சட்டத்துடன் மோதும்போது, அது ஒளிக்கும் இருளுக்கும் இடையிலான சத்தியம், நீதி என்பவற்றுக்கும் அசத்தியம், அநீதி என்பவற்றுக்கும் இடையிலான போராட்டமே என்பதைப் புரிந்திருப்பது அவசியமாகும். இந்நிலையில், அநியாயங்களையும் அத்துமீறலையும் தடுப்பதற்கும், சத்தியம், நீதி என்பவற்றின் கொடியை உயர்த்துவதற்கும் அவர்களுக்கு பலம் அவசியமாகிறது.

காட்டுச் சட்டத்தைப் பின்பற்றுவோர் இந்தப் பலப்பிரயோகம் மூலமாகவே தம் பேராசைகளை அடைந்து கொள்கின்றனர். அடக்கு முறை மூலமும் அநியாயத்தின் மூலமும் பலவீனமான சமூகங்கள் மீது தமது கலாசாரத்தையும் கருத்தியல்களையும் திணித்து அவற்றைப்

பணியச் செய்வதற்கும் இதுவே அவர்களுக்கு உதவியாக அமைகிறது. ஒளிச்சட்டத்தைப் பின்பற்றுவோர் -அனைத்துக்கும் முன்னர்- தம்மைத் தாமே சீர்திருத்திக் கொள்ள வேண்டிய நிலையிலுள்ளனர் என்பதையே இது காட்டுகிறது. அப்போதுதான் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்வது அவர்களுக்குச் சாத்தியமாகும்.

முஸ்லிம் தனிமனிதன் அறிவும் புத்தாக்கத் திறனும் ஆற்றலும் கொண்டவனாகவும், உழைப்பிலும் செயல் நேர்த்தியிலும் விருப்பம் கொண்டவனாகவும், சக்திக்கும் முன்னேற்றத்துக்கும் உரிய சாதனங் களைப் பெறுவதில் ஆர்வம் கொண்டவனாகவும் உருவாக்கப்படுவதற்கு அவனது குழந்தைப்பருவம் முதல் எவ்வாறு பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்ற விஞ்ஞான பூர்வமான அறிவின்றி இது நிறைவேறப் போவதில்லை. இவ்வாறு இஸ்லாமிய உம்மா தன்னைப் பாதுகாத்துக் கொண்டால்தான் அது ஒரு சக்தியாகவும் முன்னுதாரணமாகவும் நின்று தனது தூதை எத்திவைப்பதும், மனித இனத்தையும் அதன் நாகரிகத்தை யும் கடைத்தேற்றுவதும் சாத்தியமாக மாறும்.

ஆக, பலம் என்பது ரூஹினதும் நீதியினதும் ஷரீஆவாகிய ஒளிச் சட்டத்துக்கும், இச்சைகளும் அத்துமீறலும் அநியாயமும் கொண்ட களிமண்ணின் ஷரீஆவாகிய வனவிலங்குச் சட்டத்துக்கும் பொதுவான ஒரு காரணி. எனவே, ஒளிச் சட்டத்தைப் பின்பற்றுவோர் அனைத்து வகையான மனித இனப் போராட்டங்களுக்கும் அத்தியாவசியமான சாதனமாகிய இப்பலத்தைப் பெற்றிருப்பது கடமையாகிறது. எனினும், இப்பலத்தின் மூலமான நோக்கம் இரு சட்டங்களுக்குமிடையில் வேறுபட்டதாகும். ஒளியின் சட்டம் அதனை சத்தியம், நீதி என்பவற்றுக் காகப் பயன்படுத்துகிறது. காட்டுச்சட்டமோ அதனை அடக்குமுறைக்கும் அநியாயத்துக்கும் பயன்படுத்துகிறது.

மனித இனத்தை இன்று வனவிலங்குச் சட்டமும், அநியாயம், அடக்குமுறை என்பவற்றைக் கொண்ட காலனிய சக்திகளும் தமது கோர நகங்களாலும் வேட்டைப் பற்களாலும் கீறிக் கிழித்துக் கொண்டிருக்கின் றன. முஸ்லிம் உம்மாவின் மீதும் ஏனைய பலவீனமான சமூகங்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இத்தகைய அடக்குமுறைகளும் அநியாயங்களும் மிக மூர்க்கமான எதிர் வினைகளையும் வெடிக்கச் செய்துள்ளன. மேற்கு நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கைகளில்

ஆதிக்கம் செலுத்துகின்ற மிருகத்தனமான, இனவெறி கொண்ட இந்த அடக்குமுறைகளினதும் அநியாயங்களினதும் மிக மோசமான வடிவத்தையே புனிதச் சின்னங்கள் நிறைந்த பலஸ்தீன் பூமியிலும், வேறு பல முஸ்லிம் நாடுகளிலும், பலவீனமான சமூகங்களிலும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

தற்காலத்தின் சடவாத மனித சமூகம் அடைந்துள்ள மிக மோசமான வீழ்ச்சியே இந்நிலைக்கான ஒரே காரணமாகும். எனவே, மனித இனமும் நாகரிகமும் இக்காட்டுச் சட்டத்தின் அபாயங்களையும் அநியாயங்களையும் விழிப்போடு புரிந்து கொண்டு, தனது ரூஹையும் அதன் பெறுமானங்களையும் இலட்சியங்களையும் மீட்டெடுக்கப் பாடுபடுவது இன்று அவசரத் தேவையாக உள்ளது. அநியாயமும் சீர்கேடும் கொண்ட சட்டத்தை நீக்கிவிட்டு, சத்தியமும் நீதியும் ஒளியும் கொண்ட சட்டத்தை நடைமுறைப்படுத்தப் பாடுபடுவதும் அவசியமாகியுள்ளது.

காட்டுச் சட்ட நாகரிகம் தான் உருவாக்கிய பேரழிவு ஆயுதங்கள் என்ற கோரப் பற்கள் மூலமாகவும், இரத்தவெறி பிடித்த சடவாதப் போராட்டங்கள் மூலமாகவும் மனித இனத்தை அழித்துவிட முன்னர் அதிலிருந்தும் அதன் செயற்பாடுகளிலிருந்தும் மனிதஇனம் விடுபட வேண்டும். இவையனைத்தும் சமாதானம், பாதுகாப்பு, சத்தியம், மனித நீதி என்பவை தொடர்பான இஸ்லாமியத் தத்துவத்தில் நம்பிக்கை கொண்ட உண்மையான சர்வதேச சமுதாயமொன்று உருவாவதன் மூலமே நிறைவேற முடியும். அதுவே மனித சமூகங்களை மிருகங்களாகவும் தமக்குள் பரஸ்பரம் மோதிக்கொள்ளும் மந்தைக் கூட்டங்களாகவும் மாற்றுகின்ற தேசியவாதம், இனவாதம், வனவிலங்குச் சட்டம் என்பவற்றின் அடிப்படையிலன்றி, பரஸ்பர நன்மை, உதவி, கூட்டுறவு என்பவற்றின் அடிப்படையிலான மனித இன ஐக்கியத்திற்கான முதல் அடியாக அமையும்.

மேற்கு சமூகங்கள் தமது ஒளி மிக்க தெய்வீகத் தூதுகளிலிருந்து விலகிக் கொண்டதற்குக் காரணம், வரலாற்றில் அத்தூதுகளுக்கு நிகழ்ந்த திரிபும் அவற்றின் மத நிறுவனங்களில் இடம்பெற்ற சீர்கேடுகளுமே என்பதை நாம் இங்கு மனங்கொள்ள வேண்டும். ஏனெனில், அதன் காரணமாகத்தான் அங்கு வாழும் பொதுமக்கள் யதார்த்தத்தில் இஸ்லாத்தினதும் ஏனைய தெய்வீக மதங்களினதும் உண்மை நிலையை அறியாது

*போயினர். அந்த வகையில் அவர்கள் தவறாக வழிநடாத்தப்பட்ட சமூகங்களாகவே கருதப்பட வேண்டியுள்ளனர். (இது அவர்களுக்கு மத்தியிலுள்ள பெரும்பாலான கொள்கை வகுப்பாளர்களது நிலைக்கு மாற்றமான நிலையாகும். ஏனெனில், இக்கொள்கை வகுப்பாளர்களும் அவர்களது பல்வேறு அரசியல் நிறுவனங்களும் பிடிவாதமும் சுயநலமும் பேராசையும் கொண்ட பல குழுக்களால் ஆதிக்கம் செலுத்தப்படும் நிலையே காணப்படுகிறது.)*

*எனவே இச்சமூகங்களை நேர்வழி நோக்கி அழைப்பதும், மனித நலனுக்காகவும் நேர்வழிக்காகவும் அருளப்பட்ட ஒளியும் ரூஹானியப் பண்பும் நீதியும் கொண்ட தெய்வீக சட்டங்களைப் பற்றி அவற்றுக்கு அறிவூட்டுவதும் இஸ்லாமிய அழைப்பாளர்களது கடமையாகும். அதிலும் குறிப்பாக அச்சமூகங்களில் வாழ்கின்ற, அவற்றின் குடி மக்களாக இருக்கின்ற முஸ்லிம்கள் இதற்காகப் பாடுபடுவது அவர்களது தலையாய கடமையாகிறது. இவையனைத்தும் சேர்ந்து முஸ்லிம்கள் தமது ஷரீஆவை விளங்கி, செயற்படுத்தி, அதனூடாக தமது நிலையைச் சீர்செய்ய வேண்டிய கடப்பாட்டை பன்மடங்காக்குகின்றன. அதுமட்டு மன்றி அதனை எத்திவைத்து, மனித இனத்தை அதை நோக்கி அழைத்து, அதன் நாகரிகப் பயணத்தைச் சீர்செய்வதற்கான வழி வகைகளை இலகு படுத்திக் கொடுப்பதும் அவர்கள் கடமையாகிறது. சீர்கேட்டையும் அழிவையும் ஏற்படுத்தி, நரகத்தின் அதல பாதாளத்தை நோக்கி மனித சமூகத்தை இழுத்துச் சென்று கொண்டிருக்கும் சாபக்கேடுகளிலிருந்து அதனைப் பாதுகாப்பதும் அவர்களது கடமையாகிறது.*

*அல்லாஹுதஆலா கூறுகின்றான்:*

அல்லாஹ் வானங்களினதும் பூமியினதும் ஒளியாக இருக்கிறான். (அந்-நூர் 24:35)

அல்லாஹ்விடமிருந்து உங்களுக்கு ஒளியும் தெளிவானதொரு வேதமும் வந்திருக்கின்றன. (அல்-மாயிதா 5:15)

மனிதர்களை இருள்களிலிருந்து நீர் வெளியேற்றி, அவர்களது இரட்சகனின் உதவியுடன் ஒளியை நோக்கியும், சக்தி மிக்கவனும் புகழுக்குரியவனுமாகிய அல்லாஹ்வின் பாதையை நோக்கியும் கொண்டு வருவதற்காக உமக்கு நாம் இறக்கிய வேதம் (இதுவாகும்) (இப்றாஹீம் 14:1)

வானங்களையும் பூமியையும் அவற்றுக்கிடையில் உள்ளவற்றையும் நாம் சத்தியத்தைக் கொண்டே படைத்தோம். (அல்-ஹிஜ்ர் 15:85)

நிச்சயமாக நாம் இந்தப் பொறுப்பை வானங்களிடமும் பூமியிடமும் மலைகளிடமும் எடுத்துக் காண்பித்தோம். எனினும், அவை அதனைச் சுமக்க மறுத்தன அதற்குப் பயந்தன. மனிதன் அதனைச் சுமந்து கொண்டான். (எனினும்) அவன் பெரும் அநியாயக்காரனாகவும் அறிவிலி யாகவுமே இருக்கிறான். (அல்-அஹ்ஸாப் 33:72)

நிச்சமாக எமது ரட்சகனின் தூதர்கள் சத்தியத்தையே கொண்டு வந்தனர். (அல்-அஃராஃப் 7:53)

இணைவைப்பாளர்கள் வெறுத்த போதிலும் அனைத்து மதங்களை யும் மிகைக்கும் வகையில் அவனே நேர்வழியையும் சத்திய மார்க்கத் தையும் கொடுத்து தனது தூதரை அனுப்பி வைத்தான்.
(அத்-தவ்பா 9:33)

*அல்லாஹ் மேலும் கூறுகின்றான்:*

(நபியே!) கூறுவீராக: நிச்சயமாக எனது ரட்சகன் வெளிப்படையான மற்றும் அந்தரங்கமான (அனைத்து) மானக் கேடான காரியங்களையும், பாவத்தையும், உரிமையின்றி அத்துமீறுவதையும், யாதொரு ஆதாரமு மின்றி அல்லாஹ் வுக்கு நீங்கள் இணைவைப்பதையும், நீங்கள் அறியாத வற்றை அல்லாஹ்வின் மீது (பொய்யாக ஏற்றிக்) கூறுவதை யும் தடுத்திருக்கின்றான். (அல்-அஃராஃப் 7:33)

சத்தியம் அவர்களது மனோ இச்சைகளைப் பின்பற்றி இருக்கு மாயின், வானங்களும் பூமியும் அவற்றில் உள்ளவையும் சீர்கெட்டி ருக்கும். (அல்-முஃமினூன் 23:71)

உரிமையின்றி நீங்கள் (உலகில்) பெருமையடித்துக் கொண்டிருந்ததற் காகவும், பாவம் செய்து கொண்டிருந்ததற்காகவும் இன்று இழிவு தரும் வேதனை உங்களுக்குக் கூலியாக வழங்கப்படுகின்றது.
(அல்-அஹ்காஃப் 46:20)

பொறுப்புகளை அவற்றுக்குரியவர்களிடம் (உரிய வகையில்) ஒப்படைக்குமாறும், மக்களுக்கு மத்தியில் தீர்ப்பு வழங்கினால் நீதியாகத் தீர்ப்பு வழங்குமாறும் நிச்சயமாக அல்லாஹ் உங்களை ஏவுகிறான். அல்லாஹ் (இவ்வாறு) உங்களுக்கு உபதேசிக்கும் விடயம் எவ்வளவு சிறந்தது. நிச்சயமாக அல்லாஹ் அனைத்தையும் கேட்பவனாகவும், பார்ப்பவனாகவும் இருக்கிறான். (அந்-நிஸாஉ 4:58)

நிச்சயமாக அல்லாஹ் நீதியாக நடக்குமாறும், உபகாரம் புரியுமாறும், உறவினர்களுக்கு (பொருள்) கொடுத்துதவுமாறும் ஏவுகிறான். மானக் கேடான காரியம், பாவம், அத்துமீறல் என்பவற்றிலிருந்தும் அவன் (உங்களைத்) தடுக்கிறான். நீங்கள் நல்லுணர்ச்சி பெறவேண்டும் என்பதற்காகவே (இவ்வாறெல்லாம்) அல்லாஹ் உங்களுக்கு உபதேசம் புரிகிறான். (அந்-நஹ்ல் 16:90)

விசுவாசம் கொண்டோரே! அல்லாஹ்வுக்காக (உங்களது அனைத்து விவகாரங்களிலும்) மிக நேர்மையாக நடந்து கொள்ளுங்கள். (பக்கச் சார்பற்று) நீதியான சாட்சியாளர்களாகவும் இருங்கள். ஒரு கூட்டத்தினர் மீது உங்களுக்குள்ள துவேசம் அவர்கள் விடயத்தில் நீதியாக நடந்து கொள்வதை விட்டு உங்களைத் தடுக்க வேண்டாம். நீதி செலுத்துங்கள். அதுவே இறையச்சத்திற்கு மிக நெருக்கமான நிலையாகும். மேலும், அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை மிகவும் அறிந்தவனாக இருக்கிறான். (அல்-மாயிதா 5:8)

விசுவாசம் கொண்டோரே! அல்லாஹ்வுக்காக (உங்களது அனைத்து விவகாரங்களிலும்) மிக நேர்மையாக நடந்து கொள்ளுங்கள். அது உங்களுக்கெதிராகவோ, அல்லது (உங்களது) பெற்றோருக்கும் உறவி னருக்கும் எதிராகவோ இருந்தாலும் சரியே! (எதிராகச் சாட்சி சொல்லப் படுபவர்) செல்வந்தராக இருந்தாலும் வறியவராக இருந்தாலும் அவர்கள் இருவரையும் கவனித்துக் கொள்ள அல்லாஹ்வே போதுமானவன். எனவே நீதி செலுத்தும் விடயத்தில் மனோஇச்சையை பின்பற்றிச் செல்லாதீர்கள். (சாட்சி சொல்லும்போது அதனை) திரித்துச் சொல்வீர் களானால் அல்லது (சாட்சி கூற) மறுப்பீர்களானால் நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிந்தவனாகவே இருக்கின்றான். (அந்-நிஸாஉ 4:135)

அல்லாஹ்வின் அடியார்கள் என்பவர்கள் பூமியில் பணிவாகவே நடந்து செல்வார்கள். அறிவிலிகள் அவர்களுடன் தர்க்கித்தால் ஸலாம் கூறி (விலகி) விடுவார்கள். தங்கள் ரட்சகனுக்காக ஸுஜூது செய்தவர் களாகவும், நின்றவர்களாகவும் வணங்கி இரவைக் கழிப்பார்கள். எங்கள் ரட்சகா! எம்மை விட்டு நரக வேதனையை விலக்கி விடுவாயாக! ஏனெனில், நிச்சயமாக அந்த வேதனையே நிலையான துன்பமாகும். (மேலும்) நிச்சயமாக அந்த நரகம் மிக மோசமான தங்குமிடமாகவும் உள்ளது என்று கூறிப் பிரார்த்தித்துக் கொண்டே இருப்பார்கள். அவர்கள் தானமாகச் செலவு செய்தால், அளவு கடந்தும் கொடுக்க மாட்டார்கள்

கஞ்சத்தனமும் காட்ட மாட்டார்கள். (இரண்டுக்கும்) மத்திய தரத்திலேயே (அவர்களது தானம்) அமைந்திருக்கும். அல்லாஹ்வுடன் சேர்த்து மற்றொரு கடவுளை அவர்கள் அழைக்க மாட்டார்கள். கொல்லக் கூடாதென அல்லாஹ் தடுத்த எந்த உயிரையும் நியாயமின்றிக் கொல்ல மாட்டார்கள் விபச்சாரமும் செய்ய மாட்டார்கள். எவர் இத்தீய காரியங் களைச் செய்கிறாரோ அவர் (அதற்குரிய) தண்டனையை அடைந்து கொள்வார். மறுமை நாளில் அவருக்கான வேதனை இரட்டிப்பாக வழங்கப்படும். இழிவடைந்தவராக அதில் அவர் நிரந்தரமாகத் தங்கி யிருப்பார். எனினும், யார் (தன் பாவத்திலிருந்து) மீண்டு, ஸாலிஹான செயல் புரிகிறாரோ அத்தகையோரது தீமைகளை அல்லாஹ் நன்மை களாக மாற்றுகின்றான். அல்லாஹ் மிகவும் மன்னிப்பவனாகவும் கிருபை யுடையவனாகவும் இருக்கின்றான். (அல்-ஃபுர்கான் 25:63-70)

எவர் ஒரு கொலைக்குப் பதிலாக அல்லது பூமியில் குழப்பம் ஏற்படுவதைத் தடுப்பதற்காக அன்றி (அநியாயமாக) இன்னொரு நஃப்ஸைக் கொல்கிறாரோ அவர் மனிதர்கள் அனைவரையும் கொன்றவர் போலாவார். எவர் அதனை வாழ வைக்கிறாரோ அவர் மனிதர்கள் அனைவரையும் வாழவைத்தவர் போலாவார். (அல்-மாயிதா 5:32)

(நபியே!) மனிதர்களில் உள்ள (நயவஞ்சகன்) ஒருவனது பேச்சு உலக வாழ்வில் உங்களைக் கவரும் வகையில் அமைந்திருக்கும். (தூதரையும் இஸ்லாத்தையும் நேசிப்பதாகக் கூறி) தனது மனதில் உள்ளதற்கு (சத்தியம் செய்து) அல்லாஹ்வையும் அவன் சாட்சியாக்கு வான். ஆனால், அவனோ (உங்களுக்குக்) கொடிய எதிரியாவான். அவன் உங்களிடமிருந்து பிரிந்து சென்று விட்டால், பூமியில் நாசம் புரிந்து, பயிர்களையும் கால்நடைகளையும் அழித்து விட முயற்சிப் பான். (இத்தகைய) விஷமத்தனத்தை அல்லாஹ் விரும்புவதில்லை. ‘‘அல்லாஹ்வை அஞ்சிக் கொள்! என்று அவனிடம் கூறப்பட்டால், பாவம் செய்வதையே பெருமையாகக் கொள்வான். அவனுக்கு (தண்டனையாக) நரகமே போதுமானது. அது மிகக் கெட்ட தங்குமிட மாகும். (அர்-ரஃது 13:25)

(நபியே!) மறுமை நாளை நம்பாதிருப்பவனை நீர் கவனித்தீரா? அநாதைகளை விரட்டுபவனும், ஏழைக்கு உணவளிக்கத் தூண்டாதி ருப்பவனும் அவன்தான். எனவே தொழுகையாளர்களுக்குக் கேடுதான்! அவர்கள் தங்கள் தொழுகைகளில் அசிரத்தையாக இருப்பார்கள் பிறருக்குக் காண்பிப்பதற்காகத் தொழுவார்கள் அற்பப் பொருளை

(இரவல் கொடுப்பதைக் கூட) தடுத்துக் கொள்வார்கள். (அல்-மாஊன் 107:1-7)

உங்களை நரகில் நுழைய வைத்தது எது (என்று கேட்கப்படும் போது) அவர்கள் கூறுவார்கள்: ‘‘நாம் தொழுபவர்களாக இருக்கவில்லை. ஏழைகளுக்கு உணவளிப்பவர்களாகவும் இருக்கவில்லை. (வீணான செயல்களில்) மூழ்கியிருந்தவர்களுடன் நாமும் மூழ்கியிருந்தோம். மறுமைநாளைப் பொய்ப்படுத்திக் கொண்டும் இருந்தோம்.’’ (அல்-முத்தஸ்ஸிர் 74:42-46)

(நயவஞ்சகர்களே!) நீங்கள் (போரில் பங்கு கொள்ளாமல்) பின் வாங்கிக் கொண்டு, பூமியில் விஷமம் புரிந்து, உங்கள் இரத்த பந்தங் களையும் துண்டித்து விடப் பார்க்கிறீர்களா? இத்தகையோரை அல்லாஹ் சபித்து செவிடர்களாகவும் குருடர்களாகவும் ஆக்கி விடுகிறான். (முஹம்மத் 47:22,23)

தீய வார்த்தைகள் பகிரங்கமாகச் சொல்லப்படுவதை அல்லாஹ் விரும்பவில்லை. (அந்-நிஸாஉ 4:148)

(தர்மத்தால்) நீங்கள் வறுமையடைவீர்கள் என்று ஷெய்த்தான் (பொய்யாக) உங்களுக்குக் கூறி, மானக்கேடான காரியங்களைச் செய்யுமாறும் உங்களை ஏவுகிறான். (அல்-பகறா 2:268)

(நபியே!) கூறுவீராக: நிச்சயமாக அல்லாஹ் மானக்கேடான காரியங்களை ஏவுவதில்லை. நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்வின் மீது (பொய்யாகக்) கூறுகிறீர்களா? (அல்-அஃராஃப் 7:28)

யார் ஷெய்த்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறாரோ அவருக்கு அவன் மானக்கேடான காரியங்களையும் பாவத்தையுமே ஏவுகிறான். (அந்-நூர் 24:21)

விசுவாசம் கொண்டவர்களுக்கு மத்தியில் மானக்கேடான செயல்கள் பரவ வேண்டும் என்று விரும்புவோருக்கு நிச்சயமாக நோவினை தரும் தண்டனை உள்ளது. (அந்-நூர் 24:19)

வெளிப்படையான, மறைமுகமான எந்த மானக்கேடான செயல் களையும் நீங்கள் நெருங்க வேண்டாம்! (அல்-அன்ஆம் 6:151)

உங்களுக்கெதிராக போரிடுபவர்களோடு அல்லாஹ்வின் பாதையில் நீங்களும் போரிடுங்கள். (ஆனால்) வரம்பு மீறாதீர்கள். வரம்பு மீறு வோரை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை. (அல்-பகறா 2:190)

அல்லாஹ்வின் பாதையிலும், பலவீனமான நிலையிலுள்ள ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் முதலியோரை (மக்கா காபிர்களிடமிருந்து) விடுவிப்பதற்காகவும் நீங்கள் ஏன் போராடாது இருக்கின்றீர்கள்!? (பலவீனர்களான) அவர்களோ அல்லாஹ்விடம், ''எங்கள் ரட்சகா! அநியாயக்காரர்கள் உள்ள இவ்வூரிலிருந்து எம்மை வெளியேற்றி விடுவாயாக! உன்னிடமிருந்து ஒரு பாதுகாவலரை எமக்கு ஏற்படுத்து வாயாக! உன்னிடம் இருந்து ஓர் உதவியாளரை எமக்கு ஏற்படுத்து வாயாக! என்று பிரார்த்தித்த வண்ணம் உள்ளனர். (அந்-நிஸாஉ 4:75)

மார்க்க விடயத்தில் உங்களை எதிர்த்துப் போரிடாமலும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாமலும் இருந்தவர்களுக்கு உபகாரம் புரிவதையும், அவர்களோடு நீதியாக நடந்து கொள்வதையும் அல்லாஹ் உங்களுக்குத் தடைசெய்யவில்லை. (அல்-மும்தஹினா 60:8)

தாவுதே! நிச்சயமாக உம்மை நாம் பூமியில் ஃகலீபாவாக ஆக்கியிருக் கின்றோம். எனவே, சத்தியத்தைக் கொண்டு மக்களுக்கு மத்தியில் தீர்ப்புச் சொல்வீராக! மனோஇச்சையை நீர் பின்பற்ற வேண்டாம். அது உம்மை அல்லாஹ்வின் வழியிலிருந்து பிறழச் செய்துவிடும். நிச்சயமாக அல்லாஹ்வின் வழியிலிருந்து பிறழ்வோருக்கு -அவர்கள் விசாரணை நாளை மறந்து விட்டதன் காரணமாக- கடுமையான வேதனை உள்ளது. வானத்தையும் பூமியையும் அவற்றுக்கிடையில் உள்ளவற்றையும் நாம் வீணாகப் படைக்கவில்லை. ஆனால் நிராகரிப் பாளர்களின் எண்ணம் அதுவாகத்தான் இருக்கிறது. (இத்தகைய) நிராகரிப்பாளர்களுக்கு (நரக) நெருப்பின் கேடு காத்திருக்கிறது. விசுவாசம் கொண்டு ஸாலிஹான செயல் புரிந்தவர்களை பூமியில் குழப்பம் விளைவிப்போர் போன்று நாம் ஆக்கி விடுவோமா? அல்லது இறையச்சம் கொண்டோரை பாவிகள் போன்றுதான் ஆக்கிவிடு வோமா? (ஸாத் 38:26-28)

அந்நாளில் நிராகரிப்பாளர்களுக்கு (அவர்கள் செல்லவிருக்கும்) நரகம் காண்பிக்கப்படும். ''உங்களது நன்மைகளையெல்லாம் உலக சுகபோகங்களை அனுபவித்துக் கழித்து விட்டீர்கள். எனவே, பூமியில் நீங்கள் எந்த (நியாயமான) உரிமையுமின்றி பெருமையடித்துக் கொண்டி ருந்ததற்காகவும், பாவம் செய்து கொண்டிருந்ததற்காகவும் இழிவு படுத்தும் வேதனையே உங்களுக்கு வழங்கப்பட உள்ளது. (என்று கூறப்படும்). (அல்-அஹ்காப் 46:20)

மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஒரு ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்துமே படைத்தோம். நீங்கள் உங்களுக்குள் (பரஸ்பரம்) அறிமுகமாகிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே உங்களை சமூகங் களாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். உங்களில் எவர் அதிக இறையச்சம் கொண்டவரோ அவரே அல்லாஹ்விடம் அதிக கண்ணியத் துக்குரியவர். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனாகவும் நுணுக்கம் மிக்கவனாகவும் இருக்கிறான். (அல்-ஹுஜுறாத் 49:13)

எவர் விசுவாசம் கொண்டு, அவரது அந்த விசுவாசத்தை (இணை வைப்பு என்னும்) அநியாயத்துடன் கலந்து விடாதிருக்கிறாரோ அத்தகை யோருக்கே (மறுமைத் தண்டனையிலிருந்து) பாதுகாப்புக் கிட்டும். நேர்வழி பெற்றவர்களும் அவர்களே!'' (அல்-அன்ஆம் 6:82)

*அல்லாஹ் மேலும் கூறுகின்றான்:*

(நபியே!) உமது ரட்சகனின் வார்த்தை உண்மையும் நீதியும் கொண்டு முழுமையடைந்து விட்டது. அவனது வார்த்தைகளை மாற்றக் கூடியவர் எவருமில்லை. அவன் அனைத்தையும் செவியுறுபவனாகவும் யாவுமறிந்தவனாகவும் இருக்கின்றான். பூமியிலுள்ள பெரும்பாலானவர் களுக்கு (அதாவது நிராகரிப்பாளர்களுக்கு) நீர் அடிபணிவீரானால், அவர்கள் உம்மை அல்லாஹ்வின் வழியிலிருந்து பிறழச்செய்து விடுவார்கள். அவா்கள் (ஆதாரமற்ற) யூகங்களையே பின்பற்றுகின்றனர் பொய்யான கற்பனையிலேயே மூழ்கியும் இருக்கின்றனர்.
(அல்-அன்ஆம் 6:115,116)

பின்னர் அவர்கள் தமது உண்மையான எஜமானனாகிய அல்லாஹ் விடம் மீளக் கொண்டுவரப் படுவார்கள். (அப்போது) தீர்ப்புச் சொல்லும் அதிகாரம் அவனுக்கு மட்டுமே இருக்கும் என்பதை அறிந்து கொள்ளுங் கள். மிக விரைவாக கணக்குத் தீர்ப்பவனாகவும் அவன் இருப்பான்.
(அல்-அன்ஆம் 6:62)

(அனைத்துக்கும்) தீர்ப்புச் சொல்லும் அதிகாரம் அல்லாஹ்வுக்கு மட்டுமே உண்டு. அவன் உண்மையையே சொல்கிறான். (சத்தியத்தை யும் அசத்தியத்தையும்) பிரித்து தீர்ப்புச் சொல்வோருள் அவன் மிகச் சிறந்தவனாக இருக்கிறான். (அல்-அன்ஆம் 6:57)

## மேற்கை அணுகுவதற்கான முதல் வழி:

### முறைமை சார் அறிவும் மேற்குலகு பற்றிய ஆய்வு நிலையங்களும் பிரிவுகளும்

பிற சமூகங்களைப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கிலேயே மேற்குலகு தனது கீழைத்தேய ஆய்வுகளை ஆரம்பித்ததெனினும், காட்டுச்சட்டத் தூண்டலாலும் பிற சமூகங்களைக் கபளீகரம் செய்ய வேண்டும் என்ற உந்துதலாலுமே அதனைச் செய்தது. அச்சமூகங்களில் சிலவற்றை வேட்டையாடும் நோக்கோடும், மற்றும் சிலவற்றை காலனி யப்படுத்தி தனது இச்சைகளுக்கும் பேராசைகளுக்கும் பணியவைக்கும் நோக்கோடும் அவற்றை அது புரிந்துகொள்ள முயன்றது.

முஸ்லிம் சமூகமும் அதன் சிந்தனையாளர்களும் புத்திஜீவிகளும் இன்று தமது பலவீனங்களையும் குறைபாடுகளையும் வினைமையற்ற போக்கையும் விலக்கி, தம் நாடுகளில் -தமது சீர்திருத்த, எழுச்சித் திட்டங்களுக்குள் அடங்கும் வகையில்- அறிவியல் ஆய்வு நிலையங் களையும் பிரிவுகளையும் நிகழ்ச்சி நிரல்களையும் கல்வித் தரங்களையும் உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அவையனைத்தும் மேற்குலகையும் அதன் சிந்தனையையும் இயல்பையும் அடிப்படைகளையும் பற்றிய ஆய்வுகளில் தமது முயற்சி களை ஒன்றுதிரட்டி ஈடுபடவும் வேண்டியுள்ளது. அப்போதுதான் அந்த மேற்கைப் புரிந்து கொள்வதும், ஆற்றல் மிகுந்த வகையில் அதனோடு உறவாடுவதும், அதன் நாகரிகத்தை முழு மனித சமூகத்திற்கும் நன்மை தரக்கூடிய வகையில் திசைப்படுத்துவதும் சாத்தியமாகும். அதிலும் குறிப்பாக, இனவாதமும் தேசியவெறியும் அத்துமீறும் இயல்பும் கொண்ட வனவிலங்குச் சட்டத்தினால் ஆட்கொள்ளப்பட்டிருக்கும் சில மேற்கு சமூகங்கள் இங்கு அதிகம் கவனிக்கப்பட வேண்டியனவாகும்.

இதற்கும் அப்பால், பொதுமக்களிடம் தவறான அபிப்பிராயத்தைக் கட்டமைப்பதற்காகவும், இனவாதமும் காலனியப்பண்பும் தேசியவெறி யும் கொண்ட பாரிய குழுமங்களால் திணிக்கப்பட்டு வரும் அடக்கு முறைகளையும் கொள்ளைகளையும் இலகுபடுத்துவதற்காகவும் வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்டு வரும் ஊடகப் பிரசாரங்களும் பல்வேறு இருட்டடிப்புகளும் கூட நமது கவனத்துக்கு உரியவையா

கின்றன. இக்குழுமங்களின் கூட்டானது இன்று முஸ்லிம் உம்மாவை இறுகச் சுற்றி நின்று இஸ்லாமிய மற்றும் ஆபிரிக்க உலகின் வளங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதோடு, அப்பிரதேசங்களைத் துண்டாடிக் கொண்டும் இருக்கிறது. ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்க ஐக்கிய நாடுகள், ரஷ்ய-சீன-இந்தியக் கூட்டு முதலியவை இக்குழுமங்களுள் பிரதானமானவையாகும்.

இவ்வாறு கடித்துக் குதறப்பட்ட ஆபிரிக்க-இஸ்லாமிய உலகு, பேராசைக்காரர்களதும் மேற்குலக வேட்டைக்காரர்களதும் அவர்களது பங்காளிகளதும் உணவாக மாத்திரமன்றி, அவா்களது ஸியோனிஸ வேட்டை நாயின் உணவாகவும் மாறியுள்ளது. இந்த ஸியோனிஸ வேட்டை நாய் உண்மையில் கொடிய இயல்பு கொண்டது மோசடி செய்யக் கூடியது தனக்கென தனியான ஆசைகள் கொண்டது தனது சொந்தக்காரனுக்கே கேடு விளைவிக்கக் கூடியது அவனுக்கு முன்பே வேட்டை உணவைச் சாப்பிட்டுவிடக் கூடியது தனது வேட்டைக்கார நண்பனைக் கூட கடித்துத் தின்பதற்குத் தயங்காதது.

மேற்குலக வேட்டைகாரனுக்கு இஸ்லாமிய உலகு மற்றும் தென் பிராந்தியம் என்ற வேட்டைப் பொருள் தேவையாக இருக்கும் நிலையில், அந்த வேட்டைப் பொருளே வேட்டை நாயின் வேலையைச் செய்ய முற்படுவதை அவன் ஒருபோதும் ஏற்கப் போவதில்லை. ஆனால், பலர் தமது பலவீனத்தின் காரணமாக அவ்வாறானதொரு போலியான எதிர்பார்ப்பையே அந்த வேட்டைக்காரன் மீது வைத்திருக்கின்றனர்.

காலனித்துவ அநியாயங்களையும் ஸியோனிஸக் குற்றங்களையும் விட்டு தம்மைக் காப்பாற்றக்கூடிய நீதியான, சமநிலையான அரசியல் கொள்கைகளை -சத்தியம், நீதி என்பவற்றின் அடிப்படையில்- அந்த மேற்குலகு பின்பற்றும் என அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் -வனவிலங்குச் சட்டத்தின் பகைப்புலத்தில் நின்று பார்க்கும்போது- உண்மையில் அவர்கள் வெறும் யூகத்திலேயே இருக்கின்றனர் என்பது தெளிவு. வெறும் பிரசார ஊடகங்களையும், ராஜதந்திர வழிமுறைகளை யும் அடிப்படையாகக் கொண்ட இவ்வகையான எந்த முயற்சியும் விதி விலக்கான தன்மை கொண்டது வரையறைக்குட்பட்டது தற்காலிகமானது சமகால சா்வதேச உறவுகள், பேராசைகள், அரசியல் நிலைப்பாடுகள் என்பவற்றின் பின்புலத்தில் பெறுமானம் அற்றது.

தற்போதைய சூழ்நிலையில் சமாதான வழிமுறைகளைப் பயன் படுத்தியும், மேற்கு தேசங்களின் உள்நாட்டு அரசியல் விளையாட்டின் அடிப்படைகளைப் பயன்படுத்தியும் அந்நாடுகளின் கொள்கைகளில் பாதிப்பேற்படுத்த முடியுமான ஒரே வழிமுறை, அந்நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம் குடிமக்கள், அவர்களுக்கு ஆதரவளிப்போர், தெய்வீகத் தூது களின் எச்ச சொச்சங்களில் இன்னும் விசுவாசம் கொண்டிருப்போர், அடக்குமுறைக்கு உட்பட்டோர், செத்துப்போகாத மனச்சாட்சி கொண் டோர் ஆகிய அனைவரும் ஒன்றிணைந்து மேற்கொள்ளக் கூடிய அரசியல் ரீதியான முயற்சிகள் மாத்திரமே.

எனினும், காட்டுச் சட்டம், வேட்டை மிருகங்களின் நலன்கள் என்பவற்றின் பின்னணியில் நின்று பார்க்கும்போது, மேற்கு நாடுகளில் நிலவும் இச்சூழ்நிலைகள் எந்தவொரு குழுமத்திற்கோ சிறுபான்மை இனத்திற்கோ -அது ஸியோனிஸ சிறுபான்மையாக இருப்பினும்- தொடர்ந்து சாதகமாக அமையும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இரு பெரும் உலகப் போர்களுக்கிடையில் ஜேர்மனியிலும் அமெரிக்காவிலும் நிகழ்ந்தவை ஸியோனிஸம் இழைத்த தவறுகளுக்குக் கிடைத்த பாடங்களாகும். முஸ்லிம் உலகிலும் தென்பிராந்திய நாடு களிலும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் துன்பியல் நிகழ்வுகளைக் கண்டுகொள்ளாதிருந்தால் அல்லது மறந்திருந்தால், மேற்குலகுக்கும் அவ்வாறான நிலையே தோன்றும் என்பதில் ஐயமில்லை. ரோமானிய ஆட்சிக் காலத்துக்கு முன்பிருந்து இன்றுவரை அது மேற்கொண்டுவரும் சுரண்டல், சூழ்ச்சி, அநியாயம், சீர்கேடு முதலியவற்றால் கிடைத்த அனுப வங்களைப் புறக்கணித்து அல்லது மறந்து இருந்தாலும் அத்தகைய பாடங்கள் கிடைப்பது சர்வ நிச்சயம்.

முஸ்லிம்கள் தமது பாதையை அறிந்து கொள்வார்களாயின், அவர் களது சீர்திருத்த முயற்சிகள் உண்மையானவையாய் அமையுமாயின், மேற்கு நாடுகளில் அவர்கள் மேற்கொள்ளும் அழைப்புப் பணியில் திட உறுதி காணப்படுமாயின் அங்கு வாழ்வோரது உள்ளங்களில் எஞ்சியிருக் கும் ரூஹின் தேடல்களும், (அல்-ஃபித்றா என்ற) இயல்பான ஈமானியத் தூண்டல்களும் இணைந்து ஒளியின் சட்டம் அங்கு இடம்பிடிப்பதற்கு வழிகோல முடியும். அந்தச் சமூகங்களை ஒளியையும் நீதியையும் நோக்கி மீளக்கொண்டு வருவதற்கும் அவை உதவமுடியும். இது அல்லாஹ் வுக்குக் கடினமான ஒரு பணியல்ல. இஸ்லாமிய-ஆபிரிக்க உலகம்

விடுதலையடைந்து, தனது உரிமைகளையும் கண்ணியத்தையும் மீளப் பெற்று, மனித நாகரிகத்தின் வளர்ச்சியில் காத்திரமான பங்களிப்புச் செய்ய வேண்டுமாயின் எதிர்காலத்தில் அதற்கு முன்னாலுள்ள ஒரே மார்க்கம், அது ஆற்றலோடும் துணிச்சலோடும் தன் சொந்தக் கால்களில் நிற்பதே. அப்போதுதான் நன்மையையும் சீர்திருத்தத்தையும் ஏற்படுத்த முயலும் சக்திகளோடு சரி சமமாக நின்று உதவக்கூடிய பங்காளியாக அதனால் திகழ முடியும்.

மலேஷியாவிலுள்ள சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக்கழகம் சில வருடங்களுக்கு முன்னர் இத்துறையில் முதல் எட்டை எடுத்து வைத்தது. மேற்குலகு பற்றிய பகுதியளவிலான துறைசார் (Minor Specialization) ஆய்வுப் பிரிவொன்றை ஏற்படுத்துவதன் மூலம் அந்த ஆரம்பம் நிகழ்ந்தது. மேற்குலகையும் அதன் சிந்தனைகளையும் அடிப்படைகளையும் புரிந்து, அதனோடு சாதகமாக உறவாடி பாதிப்புச் செலுத்துவதற்கான மார்க்கங்களைக் கண்டறிவதற்காக, மேற்கு பற்றிய பிரதான ஆய்வுப் பிரிவொன்றை உருவாக்குவதே இம்முயற்சிக்குப் பின்னாலிருந்த முக்கிய நோக்கமாகும். வனவிலங்குச் சட்டத்தின் அடிப்படையிலன்றி, ஒளிச் சட்டத்தின் அடிப்படையில் சத்தியம், நீதி, ஆக்கபூர்வமான மானிட ஒத்துழைப்பு என்பவற்றை ஆதாரமாகக் கொண்ட பரிபூரண நன்னிலை ஒன்றையும், நீதியான மானிடக் கூட்டுறவையும் நோக்கிச் செல்வதற்கு இது வழியமைக்க முடியும். அந்தவகையில், குறித்த பல்கலைக்கழகம் தனது பயணத்தைத் தொடர வேண்டும் என நான் ஆசிக்கிறேன். மேற்கு பற்றிய ஆய்வுத்துறையில் பல்கலைக்கழகப் பிரிவொன்றையும், அதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றையும், உயர் கற்கைகளுக்கான மத்திய நிலையமொன்றையும் உருவாக்குவதன் மூலம் தனது பயணத்தை அது முழுமை செய்ய வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறேன்.

அப்பல்கலைக்கழகத்தின் செயல் திட்டம் முழுமையடைந்ததும், இஸ்லாமிய உலகிலும் மூன்றாம் உலக நாடுகளிலும் உள்ள பல்கலைக் கழகங்களும் மேற்குலகு பற்றிய ஆய்வுத்துறையில் அவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களையும் நிலையங்களையும் ஆரம்பிக்க வேண்டும் என்று இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. நாகரிகங்கள் தமக்குள் மோதிக் கொள்வதற்கோ பரஸ்பரம் அநியாயம் இழைத்துக் கொள்வதற்கோ அன்றி, அவற்றுக்கிடையில் உரையாடலை ஏற்படுத்தி, ஒன்றையொன்று

பூரணப்படுத்தும் வகையிலான, வினைத்திறன் மிக்க, பாதுகாப்பான நாகரிக அடிப்படையொன்றைக் கட்டியெழுப்புவதற்கு இது மிகவும் அவசியமானதாகும்.

*மார்க்கத்தில் நிர்ப்பந்தம் இல்லை. வழிகேட்டிலிருந்து நேர்வழி தெளிவாகி விட்டது. எனவே, யார் ஷெய்த்தானிய (தாகூத்) வழியை நிராகரித்து அல்லாஹ்வை (மாத்திரம்) விசுவாசிக்கிறாரோ அவர் மிக உறுதியான (இஸ்லாம் என்னும்) கயிற்றைப் பற்றிக் கொண்டார். அக்கயிறு (எவ்வகையிலும்) அறுந்து போவதில்லை. (அல்-பகறா 2:256)*

*(நபியே!) உமது ரட்சகனின் வழியை நோக்கி ஞானத்தின் மூலமும் அழகிய உபதேசத்தின் மூலமும் அழைப்பீராக! மேலும், மிக அழகிய வார்த்தைகளைக் கொண்டு அவர்களுடன் தர்க்கம் புரிவீராக! நிச்சயமாக உமது ரட்சகன் தனது பாதையிலிருந்து பிறழ்ந்தோரை நன்கறிந்தவனாக வும், நேர்வழியில் இருப்போரை நன்கறிந்தவனாகவும் இருக்கிறான். (அந்-நஹ்ல் 16:125)*

*மார்க்க விடயத்தில் உங்களை எதிர்த்துப் போரிடாமலும் உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாமலும் இருந்தவர்களுக்கு உபகாரம் புரிவதையும், அவர்களோடு நீதியாக நடந்து கொள்வதையும் அல்லாஹ் உங்களுக்குத் தடைசெய்யவில்லை. மார்க்க விடயத்தில் உங்களுக்கெதிராகப் போராடி, உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றி, உங்களை வெளியேற்றுவதில் (எதிரிகளுக்கு) உதவியவர் களுடன் நட்புக் கொள்வதையே நிச்சயமாக அல்லாஹ் தடைசெய்கிறான். யார் அவர்களுடன் நட்புக் கொள்கிறார்களோ அவர்கள் அநியாயக் காரர்களே. (அல்-மும்தஹினா 60:8,9)*

*விசுவாசம் கொண்டோரே! அல்லாஹ்வுக்காக (உங்களது அனைத்து விவகாரங்களிலும்) மிக நேர்மையாக நடந்து கொள்ளுங்கள். (பக்கச் சார்பற்று) நீதியான சாட்சியாளர்களாகவும் இருங்கள். ஒரு கூட்டத்தினர் மீது உங்களுக்குள்ள துவேசம் அவர்கள் விடயத்தில் நீதியாக நடந்து கொள்வதை விட்டு உங்களைத் தடுக்க வேண்டாம். நீதி செலுத்துங்கள். அதுவே இறையச்சத்திற்கு மிக நெருக்கமான நிலையாகும். மேலும், அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை மிகவும் அறிந்தவனாக இருக்கிறான். (அல்-மாயிதா 5:8)*

*உங்களுக்கெதிராக போரிடுபவர்களோடு அல்லாஹ்வின் பாதையில் நீங்களும் போரிடுங்கள். (ஆனால்) வரம்பு மீறாதீர்கள். வரம்பு மீறுவோரை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை. (அல்-பகறா 2:190)*

## ஆரம்ப நிலையை நோக்கி மீளல்:

### ஈமானின் ஒளியும் ஷூறாவின் வழியும் சகோதரத்துவ வலிமையும்

சுதந்திரம், ஆலோசனை செய்தல் (ஷூறா), சகிப்புத்தன்மை, இஸ்லாமிய சகோதரத்துவம், மானிட சகோதரத்துவம், நம்பிக்கைச் சுதந்திரம், மனசாட்சி, கருத்துச் சுதந்திரம் முதலிய பெறுமானங்கள் முஸ்லிம்களிடம் இல்லாது போனமையே அவர்களது வீழ்ச்சிக்குக் காரணமாய் அமைந்தது என்பதை முஸ்லிம்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதன் தொடராக மனித உரிமைகளும் கண்ணியமும் தொலைந்து, அவற்றின் இடத்தில் அடக்குமுறையும் அநீதியும் இன-கோத்திர-சமூக-குழு வெறிகளும் இடம்பிடித்துக் கொண்டன. இது முஸ்லிம் உம்மாவை பிரிவினை, பரஸ்பரக் கழுத்தறுப்பு, அநியாயம், பிற்போக்கு முதலிய சகதிகளில் மூழ்கடித்ததோடு, அதன் கலாசாரத்தை மாசுபடுத்தி, அறிவியல் மனப்பாங்கையும் துவம்சம் செய்தது. மூடநம்பிக்கைகளும் மந்திர தந்திரங்களும் அங்கு பரவியதோடு பயம், கோழைத்தனம் முதலிய உணர்வுகளும் அதனைப் பீடித்துக் கொண்டன. அச்சம், இழிவு, இயலாமை என்பவற்றின் விளைவாக அடிமை மனோபாவம் என்ற நோயால் அது பீடிக்கப்பட்டது.

எனவே, முஸ்லிம் உம்மாவானது நீதி, மனித ஒருமைப்பாடு ஆகிய அடிப்படைகளில் நின்று, ஏகத்துவக் கொள்கை, ஃகிலாபத் கோட்பாடு என்பவற்றின் வழிகாட்டலின் நிழலில் தன்னை மீட்டுருவாக்கம் செய்துகொள்ள வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது. சுதந்திரம், ஆலோசனை செய்தல், சகிப்புத் தன்மை, சகோதரத்துவம் முதலிய பெறுமானங்களையும், துணிச்சல், முந்திச் செயற்படல், உண்மை, நாணயம் முதலிய பண்புகளையும் மீளக் கொண்டு வருவதன் மூலமே இது சாத்தியமாக முடியும். இதனூடாக தனது இழந்த சக்தியையும் ஒருமைப்பாட்டையும் ஸ்திரத்தன்மையையும் அது மீளப் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறு அது தன்னை மீளவும் தகுதிப்படுத்திக் கொண்டால் மாத்திரமே நன்மை, சமாதானம் என்பவற்றுக்கான வழிகாட்டியாகவும் முன்னோடியாகவும் அது திகழ்வது சாத்தியமாகும். சக்தி, ஞானம், உபதேசம் என்பவற்றின் மூலமும், ஒளி, பாதுகாப்பு, அமைதி என்பவற்றின் வழியில் மிகச் சிறந்த சாதனங்களைக் கொண்டு அழைப்பதன் மூலமும், சமூகத்தையும் அதன் உரிமைகளையும் அதிலுள்ள பலவீனர்களையும் பாதுகாப்பதற்கான வலிமையைக் கொண்டிருப்பதன் மூலமும் இப்பணி நிறைவேற்றப்பட முடியும்.

## அனைத்துக் கேள்விகளுக்கும் பதில் கிடைப்பதில்லை

ரூஹூம் சடப்பொருளும் மனிதனில் ஏன் சந்திக்கின்றன? அவையிரண்டுக்கும் இடையிலான போராட்டத்தின் பொருள் என்ன? இப்போராட்டத்தில் சிலர் -அவர்களது நற்செயல்கள் காரணமாக- ரூஹானிய உயர்வையும் நிரந்தர இன்பத்தையும் அடையும் அதேவேளை, மற்றும் சிலர் -அவர்கள் செய்த பாவங்கள் காரணமாக- துன்பத்தையும் நிரந்தர வேதனையையும் அனுபவிப்பது ஏன்? மனோஇச்சைகளோடும் உடலின் பங்களோடும் ஆன்மாக்கள் (அர்வாஹ்) வருந்திப் போராடுவதன் பொருள் என்ன? ஒரு சிருஷ்டிக்கு -அது முழுவதுமாக சிருஷ்டிக்கப்பட்ட ஒன்றாக இருக்கும் நிலையில்- சுதந்திரமானதும் பொறுப்புச் சொல்ல வேண்டியதுமான நாட்ட சக்தியொன்று இருப்பது எங்கனம்?

இக்கேள்விகளுக்கு விடைகாண்பது அவ்வளவு எளிதன்று. ஆனால் இப்போராட்டத்தின் ஊடாக நஃப்ஸுகள் தம்மைத் தாம் கட்டுப்படுத்திக் கொண்டு, ஒளியின் உதவியோடு சத்தியத்தைக் கண்டு கொள்கின்றன என்பதை இங்கு நாம் புரிந்து கொள்கிறோம். அதேபோல், சிருஷ்டிக்கப்பட்ட நஃப்ஸாகவும் வரையறுக்கப்பட்ட தர்க்க அறிவு கொண்ட சிறு கூறாகவும் இருக்கின்ற மனிதனால் தெய்வீக ஒளியின் வழிகாட்டலோ, தனது பொறுப்புகளைச் சுமக்கும் வழிவகைகள் மற்றும் வாழ்வின் நோக்கங்களை நிறைவேற்றும் முறைகள் பற்றிய அறிவுட்டலோ இன்றி -தனியாக- வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்ள முடியாது என்பதையும், அதன் மிகப்பெரும் இலக்குகளை அடைந்து கொள்ள முடியாது என்பதையும் எம்மால் அறிந்துகொள்ள முடிகிறது.

இவ்வனைத்துமே மனிதன் தனக்குள்ளாக, தன் உள்ளுணர்வின் மூலமாகப் புரிந்துகொள்ளும் விடயங்களாக உள்ளன. அந்த வகையில், மனிதன் -தனது முழு அறிவையும் ஞானத்தையும் பயன்படுத்தி- தெய்வீக ஒளியின் வழிகாட்டலைப் பெறவும், அதன் ஷரீஆவைப் பின்பற்றவும் அதிக அக்கறை காட்ட வேண்டிய கடமைப்பாடு கொண்டவனாகின் றான். அப்போதுதான் வாழ்வில் தனது மிக உயர்ந்த பொறுப்பைச் சுமக்கவும், சத்தியம், நீதி, பரஸ்பர அன்பு ஆகிய பெறுமானங்களின் அடிப்படையில் அதனை நோக்கி அழைக்கவும் அவனால் முடியுமாக இருக்கும்.

## மனிதனது உலக வாழ்வின் பொருள்:

### ஒளியின் பெறுமானங்களுக்கு வடிவம் கொடுப்பதும் களிமண்ணின் சடப்பண்பு உயர்ந்து நிற்பதும்

மேற்குறித்த கேள்விகள் அனைத்தும் மனித மனதில் உணர்ந்தோ உணராத வகையிலோ தோன்றுவதும், அவை பற்றிய சிந்தனைகள் எழுவதும் இயல்பானதே. இவ்வாறான விடயங்கள் நமது மனிதத் தா்க்க அறிவுக்கு எட்டாதவையாகத் தோன்றிய போதிலும், அவற்றின் சில பகுதிகளிலாவது பொருள் பொதிந்த சில விளக்கங்களை எம்மால் பெற்றுக்கொள்ள முடியும் என்றே தோன்றுகிறது. ரூஹும் ஒளியும் சடப்பொருளோடும் களிமண்ணோடும் மனிதக் கட்டமைப்பில் சந்திப் பதையும், அந்தச் சந்திப்பின் நோக்கத்தையும் அத்தகைய பகுதிகளில் ஒன்றாகக் குறிப்பிடலாம்.

ஒளி-இருள், நோ்வழி-வழிகேடு, நன்மை-தீமை, கீழ்ப்படிதல்-மாறு செய்தல், ரூஹ்-சடப்பொருள், தூய்மை-அழுக்கு, அமரத்துவம்-மிருக குணம், ரஹ்மான்-ஷெய்த்தான் என்பவற்றுக்கிடையிலான போராட்டக் களமாக மனிதனை ஆக்கும் ஏற்பாடாக இது அமைந்துள்ளது. இச்சந்திப் பின் ஊடாகவும் போராட்டத்தினூடாகவும் ஒளியும் சத்தியமும் நீதியும் களிமண் என்ற சடப்பொருளில் எவ்வாறு ஸ்தூல வடிவத்தைப் பெறுகின் றன என்பதை எம்மால் கண்டுணர முடிகிறது. இதன் மூலம், வெறும் கருத்துகள் மனிதக் கண்ணுக்கு பிரத்தியட்சமாகத் தோற்றமளிக்கின்ற ஸ்தூல உண்மைகளாக மாற்றமடைகின்றன. நன்மை, உண்மை, அழகு முதலிய கருத்தியல்களுக்கு களிமண் எவ்வாறு வடிவம் கொடுக்கிறது

என்பதையும், உள்ளங்களைக் கவர்ந் திழுக்கும் ஸ்தூலத் தோற்றங்களில் செயல்களாக அவற்றை எவ்வாறு பரிணமிக்கச் செய்கிறது என்பதையும் காண முடிகிறது.

மறுபுறம், சடப்பொருளில் ஏற்றப்படும் கருத்துகள் தூய்மை, புத்தாக் கம், அழகு முதலிய அம்சங்களை அச்சடப்பொருளுக்குப் பெற்றுத்தரும் பாங்கையும் கண்டுணர முடிகிறது. ஆக, இச்சந்திப்பின் ஊடாக ஒளி, சத்தியம், நீதி, கருணை முதலிய கருத்தியல்கள் தொட்டுணரக் கூடிய உண்மை உருவங்களாகவும் வடிவங்களாகவும் மாற்றமடைகின்றன. அதேவேளை ஒளி, உண்மை, நீதி, அழகு முதலிய கருத்தியல்களை அணிந்து கொள்வதன் ஊடாக களிமண்ணும் சடப்பொருளும் உயர்ந்த பெறுமானங்களாகவும் உருவங்களாகவும் மாற்றமடைகின்றன. மனிதர் களின் வாழ்விலும் அவர்களது செயற்பாடுகளிலும் கண்டுணரக் கூடிய யதார்த்தமாகவும் அவை மாறுகின்றன.

ஒளி, ரூஹ், களிமண் என்பவற்றுக்கிடையிலான இச் சந்திப்பிலி ருந்து நன்மை, அழகு என்பவற்றின் தோற்றங்கள் தொட்டுணரக் கூடியவை யாக, புலவயப்பட்டவையாக வெளிப்படுகின்றன. சடப்பொருளிலும் களிமண்ணிலும் வடிவம் பெறுகின்ற மனித வாழ்வின் அழகுத் தோற்றங்கள் அனைத்தும் மனித மனங்களுக்கு இன்பமளிக்கின்ற இந்த அற்புதமான ஸ்தூல உருவங்களைச் சோ்ந்தவையே. இதன் மூலம், அற்பமான களிமண் பல்வேறு அழகுத்தோற்றங்களாக மாறுகின்றது. தெய்வீக ஒளியின் விகசிப்பை உள்வாங்கிய மிக அழகான, சீரான மனிதப் படைப்பாகவும் அதுவே மாறுகின்றது. மிக அழகிய உடலை, அழகிய வதனத்தை, அழகிய நயனத்தை நாம் கவனிக்கும் போது, அவை யதார்த்தத்தில் கருத்துகளும் எழுத்துகளும் அர்த்தங்களும் களிமண் என்ற சடப்பொருளில் உள்ளங்களைச் சுண்டி இழுக்கும் வடிவங்களாக மாற்றமடைந்திருப்பதைக் காண்கிறோம். அந்த அழகிய உருவங்களையும் உடல்களையும் வடிவங்களையும் இன்னும் நுணுகிக் கவனித்தோமானால், எமது வெறும் கற்பனையால் புரிந்து கொள்ள முடியாத கருத்துகளாகவும் அர்த்தங்களாகவும் அவை இருப்பதைக் காணமுடியும். களிமண்ணிலும் சடப்பொருளிலும் அக்கருத்துகள் வடிவம் பெற்றிருக்காவிட்டால் நம்மால் அவற்றைப் புரிந்து கொள்ளவே முடியாது போயிருக்கும். அந்த உடல்களும் உருவங்களும்

*அழகுகெட்டு, அழிந்து, உருக்குலைந்து, உக்கி, துர்வாடை வீசும் களிமண்ணாக மாறும்போது இந்த உண்மையை இன்னும் தெளிவாக நாம் புரிந்து கொள்கிறோம்.*

*ஆக, ஒளியோடு சங்கமித்து, நன்மை, உண்மை, அழகு ஆகிய அதன் கருத்துகளுக்கு இவ்வாறு உருவம் கொடுக்கும் போது களிமண் எவ்வளவு அழகாகத் தோன்றுகிறது! சடப்பொருள், களிமண் என்பவற்றினூடாக ஒளி ஸ்தூல வடிவம் பெறும்போது அதுவும் எவ்வளவு அற்புதமாகக் காட்சியளிக்கிறது! இங்கு சத்தியமே ஓங்கி நிற்கிறது அழகு வெளிப்பட்டு ஜொலிக்கிறது ஒளி ஸ்தூல வடிவம் பெற்றுப் பிரகாசிக்கிறது. இதன் மூலம், மனிதனுக்குள் அடங்கியிருக்கும் மிருகம் உயர்வடைகிறது அவனது ரூஹை மூடியுள்ள களிமண் புனிதம் பெறுகிறது.*

## உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவு மிகச் சொற்பமானதே

*இதற்கப்பால், ரூஹுக்கும் சடப்பொருளுக்கும் இடையிலான இணைவிலுள்ள மிகப்பெரும் ரகசியமும் அர்த்தமும் என்ன? மனிதனது கட்டமைப்பில், அவனது நாட்டத்தில் இவ்விரண்டுக்குமிடையில் நிகழும் போராட்டத்தின் பிரதான பொருள் யாது? ரூஹ் தன் சிருஷ்டி கர்த்தாவைச் சந்திக்கும் வரை இவ்வாறு -தன்னால் முடிந்தளவு- நஃப்ஸையும் உடலையும் கட்டுப்படுத்தி, அவற்றின் மிருக இச்சைகளை வெல்வதற்காகப் போராடுவதாலும் அதற்கான ஸ்தூல வடிவத்தைப் பெற்றிருப்பதாலும் தோற்றக்கூடிய விளைவு என்ன?... முதலிய கேள்விகள் அனைத்தும் -எமது அறிவெல்லைக்குத் தோன்றுவதுபோல்- மறைவான அம்சங்களைச் சார்ந்தவை படைப்பின் இரகசியங்களாக உள்ளவை. மனித அறிவும் தர்க்கமும் அவற்றை இவ்வுலகில் புரிந்துகொள்ள முடியாது.*

(நபியே!) கூறுவீராக: நீங்கள் பூமியில் பயணம் செய்து, எவ்வாறு (அல்லாஹ்) சிருஷ்டியை ஆரம்பித்தான் என்று கவனித்துப் பாருங்கள். (அல்-அன்கபுத் 29:20)

ரூஹ் பற்றி (நபியே!) உம்மிடம் அவர்கள் கேட்கிறார்கள். ‘‘ரூஹ் என் இரட்சகனைச் சார்ந்தது. உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவு

மிகச் சொற்பமானதே! என்று அவர்களுக்கு கூறுவீராக!
(அல்-இஸ்றா 17:85)

வானங்களையும் பூமியையும் அவற்றுக்கிடையில் உள்ளவற்றையும் நாம் விளையாட்டாகப் படைக்கவில்லை. சத்தியத்தின் அடிப்படையிலேயே அவற்றை நாம் படைத்தோம். ஆனால், அவர்களில் பெரும்பாலானோர் (இதனை) அறியாதிருக்கின்றனர். (அல்-துஃகான் 44:38,39)

ஜின் வர்க்கத்தையும் மனித வர்க்கத்தையும் என்னை வழிபடுவதற்காகவே படைத்தேன். அவர்களிடம் நான் எந்த ஒரு ரிஸ்கையோ அல்லது அவர்கள் எனக்கு உணவளிக்க வேண்டும் என்றோ கேட்கவில்லை. நிச்சயமாக அல்லாஹ் வே ரிஸ்க் அளிப்பவனாகவும், திடமான சக்தி படைத்தவனாகவும் இருக்கிறான். (அல்-தாரியாத் 51:56-58)

வானத்தையும் பூமியையும் அவற்றுக்கிடையில் இருப்பவற்றையும் நாம் விளையாட்டாகப் படைக்கவில்லை. நாம் வீண் கேளிக்கையில் ஈடுபட விரும்பி, அவ்வாறு ஈடுபடக் கூடியவர்களாகவும் இருந்திருந்தால், எம்மிடம் உள்ளவற்றைக் கொண்டே அதில் நாம் ஈடுபட்டிருப்போம். (அல்-அன்பியாஉ 21:16,17)

எந்தவொரு நஃப்ஸையும் அதன் இயலுமைக்கு அப்பால் அல்லாஹ் நிர்ப்பந்திப்பதில்லை. அது தேடிக்கொண்ட நன்மை அதற்கே உரியது. அது தேடிக்கொண்ட தீமையும் அதற்கே வந்து சேரும்.
(அல்-பகறா 2:286)

(மலக்குகள்) கூறினார்கள்: (யாஅல்லாஹ்!) நீ தூயவன். நீ எங்களுக்குத் தந்த அறிவைத் தவிர வேறெந்த அறிவும் எம்மிடமில்லை. நிச்சயமாக நீயே அனைத்தை அறிந்தவனாகவும் ஞானம் மிக்கவனாகவும் இருக்கின்றாய். (அல்-பகறா 2:32)

எனவே, உனது பார்வையை மறைத்துக் கொண்டிருந்த திரையை உன்னை விட்டு நாம் அகற்றி விட்டோம். இன்று உனது பார்வை (நீ மறுத்துக் கொண்டிருந்த அனைத்தையும் பார்க்கும் வகையில்) கூர்மையாகவே உள்ளது. (காஃப் 50:22)

*சிருஷ்டியின் அர்த்தங்கள், அதன் குறிக்கோள்கள், அதன் தொடர்புகளுக்குப் பின்னாலுள்ள நோக்கங்கள் என்பவற்றைப் பற்றிய இந்த அவதானங்கள் -என்னைப் பொறுத்தவரையில்- சடவுலகுக்கு அப்பால் நின்று கொண்டு, எவ்வித ஆதாரமோ வழிகாட்டலோ அற்ற கற்பனை*

களில் மூழ்குகின்ற கடவுள் கோட்பாட்டுத் தத்துவம் சார்ந்த வெற்று விசாரணைகளல்ல. ஏனெனில், அத்தகைய தத்துவ விசாரணைகளில் பகுத்தறிவின் எல்லைகளை உணராமல் அதனை வைத்துப் பெருமை யடிக்கும் வித்துவக் கிறுக்குகளைத் தவிர வேறொன்றும் இருப்ப தில்லை. அவ்வாறான சில வழிகெட்ட தத்துவ விசாரணைகளால்தான் முஸ்லிம் உம்மா அன்றும் துன்பபட்டது இன்று வரை துன்பப்பட்டுக் கொண்டும் இருக்கிறது.

முழு மனித இனமும் கூட இவ்வாறான சில கடவுள் கோட்பாட்டுத் தத்துவங்களாலேயே அன்றுதொட்டு இன்றுவரை துன்பப்பட்டும் வருகிறது. இமாம் அபூ ஹாமித் அல்- கஸ்ஸாலி தனது ''தஹாஃபுத் அல்- ஃபலாஸிஃபா'' என்ற நூலில் குறிப்பிட்டதும், வழிகேடர்களது வழிகேடு, நாஸ்திகர்களது நாஸ்திகம், அறிவிலிகளின் பிடிவாதம் என்பவற்றில் நாம் கண்டு கொண்டிருப்பதும் இவ்வழிகெட்ட தத்துவ சர்ச்சைகளையே!

மனிதப் பகுத்தறிவினதும் தர்க்கத்தினதும் எல்லைகளைப் புரிந்து அந்த வரையறைக்குள் நின்று மேற்கொள்ளப்படும் அவதானமானது, வினைமை மிக்க மார்க்க உணர்வின் வெளிப்பாடாகவும் ஈமானை ஆழப்படுத்துவதற்கான வழியாகவும் உள்ளதென்றே நான் நினைக்கின் றேன். ஈமானை ஆழப்படுத்துவதற்கும் இஸ்லாத்தின் தூதை விளங்கிக் கொள்வதற்கும் அறிவின் திசைகளை அகலிப்பதற்கும் சிந்தித்தில், அவதானித்தல் முதலிய செயற்பாடுகளில் பகுத்தறிவு ஈடுபட வேண்டிய தன் அவசியம் குறித்து இமாம் இப்னு ருஷ்த் தனது ''தஹாஃபுத் அல் - தஹாஃபுத்'' என்ற நூலில் குறிப்பிட்டதும் இதனையே.

எவ்வாறாயினும், மறைவான உலகம் பற்றிய திட்டவட்டமான அறிவைப் பெற்றுக் கொள்வதற்கான அடிப்படை மூலாதாரமாக அல்-குர்ஆன் என்ற ஒளியும், 'முதவாத்திர்' தரத்தில் அமைந்த தூய ஸுன்னாவும் காணப்படுகின்றன. முஸ்லிம் மனிதனை நேர்வழிப்படுத்தி, அவனது பயணத்தையும் இயக்கத்தையும் நெறிப்படுத்தும் பணியில் பங்களிப்புச் செய்யும் நோக்கோடு முன்வைக்கப்பட்ட இந்த அவதானங் களுக்கான அடிப்படையும் இவ்விரு மூலாதாரங்களே.

''நீர் விசுவாசம் கொள்ளவில்லையா? என இப்றாஹீமை நோக்கி அல்லாஹ் கேட்டான். அதற்கவர், ''(நான் விசுவாசம் கொண்டே இருக்கி

றேன்.) ஆயினும், (கண்ணால் கண்டு) என்னுள்ளம் திருப்தியடைய வேண்டும் என்பதற்காகவே கேட்கிறேன்.

உம்மாவின் இயல்பையும், அதன் இலக்குகள், இயங்குதிசை, சட்டம் என்பவற்றின் இயல்பையும், அதன் சீர்திருத்த முயற்சிகளின் முக்கியத் துவத்தையும் ஓரளவு தெளிவுபடுத்தும் முயற்சியில் இப்பத்திரம் வெற்றி பெறும் என்றே நான் நம்புகிறேன். அறிவை இஸ்லாமிய மயப்படுத்து தல், வஹி, பகுத்தறிவு, பிரபஞ்சம் ஆகிய அறிவின் மூலாதாரங்களை ஒருமுகப்படுத்துதல், ஒளியின் ஷரீஆவிலுள்ள மாறா அம்சங்களிலிருந்து அந்த அறிவு வழிகாட்டலைப் பெறல் என்பவற்றைச் சாதிப்பதற்காக உழைக்க வேண்டிய அவசியத்தைத் தெளிவுபடுத்துவதிலும் இப்பத்திரம் வெற்றிபெறும் என்று நம்புகிறேன். ஒளியின் சட்டத்திலுள்ள இம்மாறாத அம்சங்களே ஏகத்துவம், மனித ஒருமைப்பாடு என்பவற்றின் அடிப் படையில் அமைந்த நிரந்தரப் பிரபஞ்ச உண்மையாக நிற்பதோடு, அவையே ''சத்தியமே பலமானது'' என்ற கருத்தையும் வற்புறுத்துகின்றன.

மேற்குலகையும் அதன் சிந்தனை, செல்நெறி, நோக்கங்கள், அரசியல், சமகால நடத்தைக் கோலங்கள் என்பவற்றையும் புரிந்துகொள்ளும் பணியைப் பொதுவாக மனிதனுக்கும், குறிப்பாக முஸ்லிம் மனிதனுக் கும் -ஓரளவாவது- இலகுபடுத்திக் கொடுத்துள்ளேன் என்பதும் எனது நம்பிக்கை. மேற்குலகின் இவ்வனைத்து அம்சங்களும் மிருகத்தனமான காட்டுச் சட்டத்தின் அடியானவை. ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் லத்தீன் அமெரிக்காவிலும் உள்ளோரை, அதிலும் இஸ்லாமிய உலகில் உள்ளோரை, அது இக்காட்டுச் சட்டத்தின் அடியாகவே அணுகுகிறது.

இச்சட்டம் இனவெறி கொண்டது ''பலமே சத்தியமானது'' என்ற நம்பிக்கை கொண்டது களிமண்ணின் ஆசைகளுக்கும் இச்சைகளுக்கும் மாத்திரம் மதிப்பளிப்பது உண்மை என்பது யதார்த்தத்திலோ பிரபஞ் சத்திலோ எவ்வித அடிப்படையையும் கொண்டிராத தற்சார்புடைய ஒரு விவகாரம் என்றும், இச்சைகளும் ஆசைகளும் தூண்டல்களுமே அதைத் தீர்மானிக்கின்றன என்றும் பிரசாரம் செய்வது பிறர் தொடர்பில் தனது நோக்கங்களையும் நலன்களையும் சாதித்துக் கொள்வதற்கு -முடிந்தவரை- அநியாயத்திலும் அத்துமீறலிலும் தங்கி நிற்பது. அதன் கடும்போக்கைக் கூட மனிதனின் ரூஹிலுள்ள சத்தியம், நீதி, கருணை முதலிய அம்சங்கள் சிலவேளை தணிக்க முயலக்கூடும். ஆனால், ஷெய்த்தானும் மிருகமும்

மனிதனில் சந்தித்துக் கொண்டு விட்டால் அதன் விளைவு தீமையிலும் தீமையாக, முழுமையான துன்பமாக முடிகிறது.

அப்போது மனிதனிலுள்ள ரூஹின் அனைத்து நல்ல அடையாளங்க ளும் அழிந்து போகின்றன. (பலஸ்தீன் மக்களுக்கெதிராக மேற்கொள்ளப் பட்டு வரும் ஸியோனிஸ செயற்பாடுகளில் இத்தீமையின் நவீன மிருக வடிவத்தையே நாம் பார்க்கிறோம்.) தீமையும் அநியாயமும் கொடுமை யும் நாச வேலையும் மிகப் பயங்கரத் தோற்றத்தில் இதன்போது உரு வெடுக்கின்றன. மனித வாழ்விலும், பல்வேறு தோற்றங்களையும் நிறங் களையும் பெறுமானங்களையும் கொள்கைகளையும் கொண்ட உலக சமுதாயங்களின் செயற்பாடுகளிலும் வெளிப்படக்கூடிய நன்மை, நீதி, கருணை முதலிய அனைத்து ரூஹானியக் கருத்தியல்களையும் இந்த ஷெய்த்தானிய-மிருகக் கூட்டு அழித்துவிடுகிறது.

## இறுதியாக:

### உம்மாவின் பணி

உம்மாவிலுள்ள சிந்தனையாளர்களது வினையாற்றலுக்கான வழிகாட்டிக் கையேடொன்றை முன்வைக்கும் முனைப்பே இந்தக் கடினமான வேளையிலும் இப்பத்திரத்தை எழுதியதன் நோக்கமாகும். ஏனெனில், உம்மாவின் பயணத்தை நெறிப்படுத்துவதிலும் அதனை உலகுக்குத் தலைமை தாங்கச் செய்வதிலும் பிரதான பங்கு வகிப்பவர்கள் இச்சிந்தனையாளர்களே.

அந்தவகையில் இதன் உள்ளடக்கம் சரியானதாக அமையும் பட்சத் தில், உம்மாவின் இருப்புக்கான பொருளை விளங்கிக் கொள்வதற்கும், அதன் சரியான பார்வையையும் உறுதியையும் மீளக்கொண்டு வர உழைப்பதற்கும் அவர்களுக்கு இது உதவும். உம்மா தனது பாதையையும் பயணத்தின் நோக்கத்தையும் புரிந்து, சக்தியோடும் உறுதியோடும் தனது விவகாரத்தைக் கையாளவும் இது வழிவகுக்கும். தன் பாதையையும், பயணத்தின் இலக்கையும் அறிந்த எவரும் செய்யக் கூடியதும் அதுவே.

வனவிலங்குச் சட்டத்தைப் பின்பற்றுவோர் -விஷேடமாக மேற்கத் தியர்- நீண்ட எதிர்காலத்தில் தம் சுயத்தைப் புரிந்து கொண்டு தமது வழிகேட்டிலிருந்து மீள்வதற்கும் இவ்வெழுத்து உதவுமென்று எதிர்பார்க்

கிறோம். அதன் மூலம், -தம் மீதும் மனித இனத்தின் மீதும் கருணை கொண்டாவது- தமது அத்துமீறல்களுக்கு ஓர் எல்லையை அவர்கள் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

காட்டுச் சட்டம் மேலாதிக்கம் புரிந்ததன் விளைவாக மனித இனம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கும் அநியாயங்களும் சொல்லொணாத் துன்பங்களும் அதனை விட்டு விலகவும் இது வழியமைக்கும். அப்போது ஒளியின் சட்டமும் நீதி, ஒருமைப்பாடு, பாதுகாப்பு, அமைதி என்பனவும் முழு மனித சமூகத்திலும் அரசோச்சும்.

உதவியும் நேர்வழியும் அல்லாஹ்விடமிருந்தே கிடைக்கின்றன. அவன் மிகச் சிறந்த எஜமானன் மிகச் சிறந்த உதவியாளன்.

சவூதி அறேபிய திட்டமிடல் அமைச்சின் செயலாள ராகவும் மன்னர் ஸவூத் பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவராகவும், மலேஷியாவின் சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக்கழக வேந்தராகவும் அருஞ் சேவையாற்றியுள்ள பேராசிரியர் அபூ ஸுலைமான் அமெரிக்காவிலும் கனடாவிலும் இயங்கி வரும் Muslim Students Association (MSA), World Assembly of Muslim Youth (WAMY), Association of Muslim Social Scientists (AMSS), International Institute of Islamic Thought (IIIT), Child Development Foundation (CDF) ஆகியனவற்றை நிறுவுவதிலும் செவ்வனே இயங்கச் செய்வதிலும் ஆற்றி யுள்ள பணிகள் அளப்பரியன. முஸ்லிம் விவகாரங்கள் குறித்து பேராசிரியர் கொண்டுள்ள ஆழ்ந்த கரிசனை, சர்வதேச உறவுகள் குறித்து அன்னார் கொண்டுள்ள அறிவின் விசாலம் என்பன அவரது ஆக்கங்களில் துலக்கம் பெற்று விளங்குகின்றன.